ஈஸ்ரர் சிறப்பிதழ்
இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2024. Founded 19 Feb.1876
St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 04 | திகதி : 31.03.2024 | விலை : 75.00



## யாழ்.ஆயரின் ஈஸ்ரர் செய்தி

கிறிஸ்து இயேசுவின் அன்பிற்குரியவர்களே!

உயிர்த்த இயேசு கொணரும் அன்பும் அருளும் அமைதியும் உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் தங்குவதாக,

இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பில் தான் எம் நம்பிக்கை வாழ்வு நிலை பெற்றுள்ளது. புனித பவுல் அடிகளார் **“கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்” (1 கொரி 15:14)** என்கின்றார். இயேசுவின் உயிர்ப்பு, உண்மையாகவே அவர் கடவுளின் மகன் என்றும் அவர் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பதையும், நாமும் ஒரு நாள் உயிர்த்தெழுந்து, முடிவில்லாத வாழ்வில் பங்கெடுப்போம் என்பதையும் நமக்கு உணர்த்துகின்றது.

இயேசு தம் உயிர்ப்பைப் பரிசாகத் தரும் பொருட்டு நமது பாவங்களுக்காக பாடுகள் பட்டு, இறந்து சாவையும் சாத்தானையும் வென்று வெற்றியின் அரசராக உயிர்த்தெழுந்தார். இயேசு உயிர்த்து விட்டார் என்பதைச் சீடர்கள் கண்டு விசுவசித்து பறைசாற்றினார்கள்.

☞ 16



மருதமடுத் தாயே வாரீர்
யாழில் மழையெனப் பொழிவீர்
உம் ஆசீரை

## காவலன் வாசக நெஞ்சங்களுக்கு ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள் 2024

இயேசு
சாவுக்கு சாவு மணி அடித்தார்
நாம் வாழ்வுக்கல்லவா
சாவு மணியடிக்கின்றோம்
பிலாத்து கை கழுவிய தண்ணீர்
பலருக்கும் ஆசீர் நீரானதால்
சிலுவைகள் சுமக்கப்படாமல் சுமத்தப்படுகின்றன
கல்லிதயம் கனக்கும் நமக்கு
கல்வாரிக் காட்சிகளும் கலை விழாக்களே
தட்டிப் பறித்துப் பெட்டி நிரப்பும் நமக்கு
தவக்கால யாத்திரைகளும் மகிழ்வூட்டும் பயணங்களே
செப ஆண்டில்
மனிதநேயத்தின் மறைந்த பகுதிகளை
திறந்து வைத்து
உறவின் உறைந்த பகுதிகளை
உருக வைத்து
விழித்திருந்து செபிப்போம்
காட்டிக்கொடுக்கவன்று
கழுத்தறுப்பதற்கு
யூதாசுகளும் கூடவே வருவர்
தாயாக எம்மைக் காக்க
மடுமாதா வருகிறார்
பகட்டுப் பவனிக்கல்ல
பக்தியுடன் பயணிக்க
உள்ளங்கள் கெத்சமனியாகட்டும்
அவை இயேசுவின் செப வீடுகள்
கள்வர் குகையாக்காதீர்கள்

– ஆசிரியர் இ. வசீகரன்






ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# மருதமடு அன்னையின் யாழ்ப்பாணம் மறைமாவட்டத்திற்கான விஜயம்

## 06.04.2024 - 30.04.2024

மருதமடு அன்னையின் முடிசூட்டு விழாவின் 100 வது ஆண்டு யூபிலி விழாவிற்கு ஆயத்தமாக மருதமடு அன்னையின் திருச்சுரூபமானது மன்னார் மறைமாவட்டப் பங்குகளுக்கு எடுத்துச் செல்லப்படும் நிலையில் யாழ் ஆயரின் வேண்டுகோளுக்கு அமைவாக திருச்சுரூபமானது யாழ் மறைமாவட்டத்தில் உள்ள பங்குகளுக்கு எதிர்வரும் 06.04.2024 முதல் 30.04.2024 வரை எடுத்து வரப்படவுள்ளது.

இப் புனித நிகழ்வு மருதமடுத் திருத்தலத்திற்குச் சென்று வர முடியாத அன்னையின் பக்தர்களுக்குப் பெரும் ஆசீர்வாதம் ஆகும். மருதமடு அன்னையின் வருகையைத் தகுந்த ஆயத்தத்துடன் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள். அன்னையின் திருச்சுரூபம் பயணிக்கும் பங்குகளின் விபரங்களும் கால நேரங்களும் கீழே காண்க.

**மருதமடு அன்னையின் திருச்சுரூபம் மன்னாரிலிருந்து வெள்ளாம்குளம் ஊடாக யாழ். பேராலயத்திற்கு 06.04.2024 அன்று காலையில் எடுத்து வரப்படும்**

**பங்குகளின் மூவகைத் தரிப்பு நிலைகள்**

வகை A - நீண்டநேரத் தரிப்பு - திருப்பலி, நற்கருணை ஆசீர்வாதம், திருச்சுரூப ஆசீர்வாதம்

வகை B - குறுகிய நேரத்தரிப்பு - திருப்பலி, திருச்சுரூப ஆசீர்வாதம்

வகை C - ஊர்தி மட்டுமான அரைமணி நேரத் தரிப்பு

| பங்குகள் | வகை | காலம் | நேரம் |
|---|---|---|---|
| **யாழ். மறைக்கோட்டம்** | | | |
| யாழ் மரியன்னை பேராலயம் | A | 06.04.2024 | 10.00 a.m - 2.30 p.m |
| புனித மடுத்தீனார் குருமடம் | C | 06.04.2024 | 3.00 p.m - 3.30 p.m |
| புனித அன்னாள் ஆலயம், பாண்டியன்தாழ்வு | C | 06.04.2024 | 4.00 p.m - 4.30 p.m |
| புனித செபமாலை மாதா ஆலய சந்தி, கொழும்புத்துறை | C | 06.04.2024 | 5.00 p.m - 5.30 a.m |
| கர்த்தர் ஆலயம், மணியந்தோட்டம் | A | 06 - 07.04.2024 | 6.00 p.m - 7.00 a.m |
| புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடம் | C | 07.04.2024 | 7.45 a.m - 8.15 a.m |
| புனித அந்தோனியார் ஆலயம், பாசையூர் | A | 07.04.2024 | 8.45 a.m - 4.00 p.m |
| புனித யாகப்பர் ஆலயம், குருநகர் | A | 07 - 08.04.2024 | 5.00 p.m - 7.00 a.m |
| புதுமை மாதா ஆலயம், யாழ்ப்பாணம் | C | 08.04.2024 | 7.30 a.m - 8.00 a.m |
| புனித பத்திரிசியார் கல்லூரி | C | 08.04.2024 | 8.30 a.m - 9.30 a.m |
| புனித அடைக்கல மாதா ஆலயம், யாழ்ப்பாணம் | A | 08.04.2024 | 10.00 a.m - 2.00 p.m |
| புனித யோவான் ஆலயம், யாழ்ப்பாணம் | C | 08.04.2024 | 2.30 p.m - 3.00 p.m |
| புனித திரேசாள் ஆலயம், யாழ்ப்பாணம் | C | 08.04.2024 | 3.30 p.m - 4.00 p.m |
| புனித ஆசீர்வாதப்பர் ஆலயம், நல்லூர் | C | 08.04.2024 | 4.30 p.m - 5.00 p.m |
| புனித நீக்கோலார் ஆலயம், நாவாந்துறை | A | 08 - 09.04.2024 | 5.30 p.m - 6.30 a.m |
| புனித மரியன்னை ஆலயம், நாவாந்துறை | B | 09.04.2024 | 7.00 a.m - 9.00 a.m |
| புனித மரியன்னை ஆலயம், கோப்பாய் | A | 09.04.2024 | 10.00 a.m - 4.00 p.m |
| **தீவக மறைக்கோட்டம்** | | | |
| புனித பேதுருவானவர் ஆலயம், மண்டைதீவு | A | 09-10.04.2024 | 5.00 p.m- 7.00 a.m |
| புனித மரியன்னை ஆலயம், அல்லைப்பிட்டி | B | 10.04.2024 | 8.00 a.m- 10.00 a.m |
| சிந்தாத்திரை அன்னை ஆலயம், சாட்டி | A | 10.04.2024 | 10.30 a.m- 1.30 p.m |
| சின்னமடு மாதா ஆலயம், சின்னமடு | C | 10.04.2024 | 2.30 p.m - 3.00 p.m |
| புனித செபஸ்தியார் ஆலயம், கரம்பன் | B | 10.04.2024 | 3.30 p.m - 5.30 p.m |
| புனித மரியன்னை ஆலயம், ஊர்காவத்துறை | A | 10 - 11.04.2024 | 6.30 p.m- 7.00 a.m |
| புனித சவேரியார் ஆலயம், புங்குடுதீவு | A | 11.04.2024 | 8.30 a.m- 3.00 p.m |
| **இளவாலை மறைக்கோட்டம்** | | | |
| புனித அடைக்கல அன்னை ஆலயம், ஆனைக்கோட்டை | A | 11-12.04.2024 | 5.00 p.m- 7.00 a.m |
| புனித பேதுருவானவர் ஆலயம், நவாலி | B | 12.04.2024 | 7.30 a.m - 9.30 a.m |
| புனித அந்தோனியார் ஆலயம், மானிப்பாய் | A | 12.04.2024 | 10.00a.m - 4.00 p.m |
| புனித செபமாலை அன்னை ஆலயம், உடுவில் | A | 12 - 13.04.2024 | 5.00 p.m - 7.00 a.m |
| புனித பத்திமா அன்னை ஆலயம், பண்டத்தரிப்பு | A | 13.04.2024 | 8.00 a.m - 4.00 p.m |
| புனித கதிரை மாதா ஆலயம், சில்லாலை | A | 13 - 14.04.2024 | 5.00 p.m - 7.00 a.m |
| புனித யோவான் ஆலயம், விளான் | B | 14.04.2024 | 8.00 a.m - 11.00 a.m |
| புனித யாகப்பர் ஆலயம், இளவாலை | A | 14.04.2024 | 11.30 a.m - 4.30 p.m |
| புனித அன்னம்மாள் ஆலயம், இளவாலை | A | 14-15.04.2024 | 5.00 p.m - 6.30 a.m |
| புனித லூர்து மாதா ஆலயம், போயிட்டி | B | 15.04.2024 | 7.00 a.m - 9.00 a.m |
| புனித தோமையார் ஆலயம், மாதகல் | A | 15.04.2024 | 9.30 a.m - 1.00 p.m |
| புனித அந்தோனியார் ஆலயம், ஊறணி | B | 15.04.2024 | 1.30 p.m - 2.30 p.m |
| புனித ஆரோக்கிய மாதா ஆலயம், பலாலி | B | 15.04.2024 | 3.00 p.m - 4.30 p.m |
| புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம், குழமங்கால் | A | 15 - 16.04.2024 | 5.30 p.m - 7.00 a.m |
| புனித அந்தோனியார் ஆலயம், சுன்னாகம் | A | 16.04.2024 | 8.00 a.m - 4.00 p.m |
| புனித மிக்கேல் ஆலயம், உரும்பிராய் | A | 16 - 17.04.2024 | 5.00 p.m - 7.00 a.m |
| **பருத்தித்துறை மறைக்கோட்டம்** | | | |
| புனித அமல உற்பவ மாதா ஆலயம், ஓட்டகப்புலம் | B | 17.04.2024 | 8.00 a.m - 10.00 a.m |
| புனித சூசையப்பர் ஆலயம், அச்சுவேலி | A | 17.04.2024 | 10.30 a.m - 4.00 p.m |
| புனித அந்தோனியார் ஆலயம், கரவெட்டி | A | 17-18.04.2024 | 5.00 p.m - 7.00 a.m |
| புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம், சக்கோட்டை | A | 18.04.2024 | 8.00 a.m - 4.00 p.m |
| புனித தோமையார் ஆலயம், பருத்தித்துறை | A | 18-19.04.2024 | 5.00 p.m - 7.00 a.m |
| புனித அந்தோனியார் ஆலயம், மணற்காடு | A | 19.04.2024 | 8.00 a.m - 3.30 p.m |
| புனித பிலிப்புநேரியார் ஆலயம், செம்பியன்பற்று | A | 19-20.04.2024 | 4.30 p.m - 7.00 a.m |
| புனித கப்பலேந்தி மாதா ஆலயம், கட்டைக்காடு | A | 20.04.2024 | 8.00 a.m - 3.30 p.m |
| புனித மரியன்னை ஆலயம், பளை | A | 20-21.04.2024 | 4.30 p.m - 7.00 a.m |
| புனித நீக்கிலார் ஆலயம், மிருசுவில் | A | 21.04.2024 | 8.00 a.m - 4.00 p.m |
| புனித லிகோரியார் ஆலயம், சாவகச்சேரி | A | 21-22.04.2024 | 5.00 p.m - 7.00 a.m |

| பங்குகள் | வகை | காலம் | நேரம் |
|---|---|---|---|
| **கிளிநொச்சி மறைக்கோட்டம்** | | | |
| பூநகரி | A | 22.04.2024 | 8.30a.m - 2.00 p.m |
| வலைப்பாடு | A | 22 - 23.04.2024 | 4.00p.m - 7.00 a.m |
| குமுழமுனை | A | 23.04.2024 | 8.30a.m - 3.00 p.m |
| முழங்காவில் | A | 23 - 24.04.2024 | 4.00p.m - 7.00 a.m |
| அக்கராயன் | A | 24.04.2024 | 9.00a.m - 3.00 p.m |
| உருத்திரபுரம் | A | 24 - 25.04.2024 | 5.00p.m - 7.00 a.m |
| கிளிநொச்சி | A | 25.04.2024 | 8.00a.m - 4.00 p.m |
| பரந்தன் | A | 25 - 26.04.2024 | 5.00p.m - 7.00 a.m |
| வட்டக்கச்சி | A | 26.04.2024 | 8.00a.m - 12.00 p.m |
| **முல்லைத்தீவு மறைக்கோட்டம்** | | | |
| தர்மபுரம் | A | 26.04.2024 | 1.00p.m - 5.00 p.m |
| உடையார்கட்டு | A | 26 - 27.04.2024 | 5.30p.m - 7.00a.m |
| புதுக்குடியிருப்பு | A | 27.04.2024 | 8.00a.m- 12.30p.m |
| இரணைப்பாலை | A | 27.04.2024 | 2.00p.m- 5.00p.m |
| முல்லைத்தீவு | A | 27 - 28.04.2024 | 5.30p.m- 7.00a.m |
| சிலாவத்தை | B | 28.04.2024 | 7.30a.m- 9.30a.m |
| அளம்பில் | A | 28.04.2024 | 10.00a.m- 3.00p.m |
| கொக்குளாய் | B | 28 - 29.04.2024 | 5.00p.m- 7.00p.m |
| முகத்துவாரம் | A | 29.04.2024 | 8.00p.m- 7.00a.m |
| முள்ளியவளை | A | 29.04.2024 | 9.00a.m- 3.00p.m |
| கூளாமுறிப்பு | C | 29.04.2024 | 3.30a.m- 4.00p.m |
| மாங்குளம் | A | 29 -30.04.2024 | 5.00p.m- 7.00a.m |
| மல்லாவி | A | 30.04.2024 | 8.00a.m- 12.00p.m |

### மருதமடு அன்னையின் வருகைக்கான முன்னாயத்தங்கள்

- மருதமடு அன்னையின் வருகையை எதிர்பார்த்து, முதல் மூன்று நாட்களும் ஆயத்த திரிதின ஆராதனைகளை நடத்தவும்.
- மருதமடு அன்னையின் திருச்சுரூபத்தைத் தாங்கிவரும் ஊர்தி வரும் பாதைகளை இயன்றவரை துப்புரவு செய்து, அலங்கரித்து அழகுபடுத்தவும் குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்னர் மருதமடு அன்னையின் வருகை பற்றிய பதாகைகளை வீதிகளில் தொங்க விடவும்.
- முன்னதாகவே துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் மருதமடு அன்னை உங்கள் பங்கிற்கு வருகின்ற நிகழ்ச்சி நிரலை மக்களுக்கு அறியப்படுத்தவும்.
- போக்குவரத்து ஒழுங்குகள் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குகள் யாவும், முறையாகச் செய்யப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- பங்கில் உள்ள எல்லா ஆலயங்களுக்கும் வரவேற்பு நிகழ்வுகள் மற்றும் வழிபாடுகளில் சமத்துவம் வழங்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தவும்.
- பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், வேலைத்தளங்கள் ஆகியவற்றினைக் கருத்திற் கொண்டு ஒலிபெருக்கி ஆயத்தங்கள் ஆலயத்திற்குள்ளும், ஆலய வளாகத்திற்குள் மட்டுமே ஒழுங்கு செய்யவும்.
- இயன்றவரை அன்னையின் திருச்சுரூபம் மக்களின் வணக்கத்திற்காக, செபத்திற்காக ஆலயத்திற்கு உள்ளே வைப்பது விரும்பத்தக்கது.
- மக்கள் மிக அதிக அளவில் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டால் இறுதியான திருப்பலியையும், திருச்சொரூப ஆசீரையும் ஆலய முன்றலில் ஒழுங்கு செய்வது சிறந்தது.
- வழிபாடுகள், திருப்பலிகள், பக்திச் செயற்பாடுகள் ஆகியவற்றிற்காகத் திரு வழிபாட்டு ஆணையகத்தினால் வெளியிடப்படும் கைத்துணை நூலைப் பயன்படுத்த வும். இதில் உள்ள செபங்கள், பாடல்களை மட்டுமே பயன்படுத்துவது விரும்பத்தக்கது.
- மறைமாவட்டத்தின் பங்குகளுக்கு அன்னையின் திருச்சுரூப வருகை ஒழுங்கானது, ஆலயங்களில் திருச்சுரூபம் வணக்கத்திற்காக வைக்கப்படும் நேர அளவின் அடிப்படையில் **A.B.C** என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. எனவே மேற்குறிப்பிட்ட வழிபாட்டு ஒழுங்குகளை நேர அளவிற்கேற்பவும் தேவைக்கேற்பவும் ஒழுங்கு செய்யுமாறு பங்குத் தந்தையர்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.
- காலையில் அன்னையின் திருச்சுரூபம் தரிசிக்கும் **A** வகைப் பங்குகளில் திருப்பலியோடு* ஆரம்பித்து, இறுதியில் நற்கருணை ஆராதனை, திருச்சுரூப ஆசீரோடு நிறைவடையும்.
- மாலையில் அன்னையின் திருச்சுரூபம் தரிசிக்கும் **A** வகைப் பங்குகளில் ஆரம்ப வரவேற்பு நிகழ்வினைத் தொடர்ந்து நற்கருணை ஆராதனை இடம்பெற்று, பின் அதிகாலையில் திருப்பலி*, திருச்சுரூப ஆசீர்வாதம் ஆகியவற்றோடு நிறைவடையும்.
- **B** வகைப் பங்குகளில் திருப்பலியோடு ஆரம்பித்துப் பின்னர் மக்கள் அன்னையைத் தரிசிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுத்து, திருச்சுரூப ஆசீரோடு நிறைவடையும்.
- **C** வகை பங்குகளில் திருப்பலியோ, நற்கருணை ஆராதனையோ திருச் சுரூப ஆசீரோ இடம்பெறமாட்டாது. ஊர்தி தரித்து நிற்கும் வேளையில் பாடல்கள், ஆர்ப்பரிப்புக்கள், திருச்செபமாலை, மன்றாட்டு மாலை போன்றவற்றை குறிப்பிட்ட நேர அளவுக்கு ஏற்ப ஒழுங்கு செய்வது சிறந்தது.
- வயோதிபர்கள், நோயாளர்கள் அன்னையைத் தரிசிக்க முன்னுரிமை வழங்கவும்.
- ஒவ்வொரு பங்கிலும் உள்ள எல்லா உப ஆலயங்களையும் உள்வாங்கி வழிபாடுகளில் சம சந்தர்ப்பங்கள் வழங்குதல் சிறந்தது
- திருப்பலி ஒப்புக்கொடுக்கும் நேரங்கள்* - பங்குத்தந்தையர்கள் வசதிக்கு ஏற்ப ஒழுங்கு செய்வார்கள்.
- பட்டாசு வெடித்தல், வானவேடிக்கைகளைத் தவிர்த்தல் விரும்பத்தக்கது.

**முக்கிய குறிப்பு:- குறித்த நேரத்தில் அன்னையின் ஊர்தி பங்கை விட்டுப் புறப்படுவதைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவும்.**

**அவசர தேவை ஏற்படின் இவ்வொழுங்கில் மாற்றங்கள் ஏற்படலாம்**

குருமுதல்வர்
ஆயத்தக்குழு சார்பாக
யாழ். மறைமாவட்டம்

# செபத்தில் வளர்வோமா?



02

## ஓர் உளவள ஆன்மீகப் பயணத்தில் எனது தேடல்

> நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம்: மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில், நீங்கள் கேட்கு முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார்.

(முன் இதழ் தொடர்ச்சி)

பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திரு முகத்திலிருந்து ஒரு மேற்கோள் காட்டி பவுல் உருவகத்தில் பேசினார் என்று குறிப்பிட்டிருந்தேன். அதன் அர்த்தம் என்ன?

### இன்னமும் புட்டிப் பாலா?

குழந்தையாக இருந்தபொழுது தாய்ப்பால் குடித்தாய். அது தேவை. அது ஆரோக்கியமானது. குழந்தை வளரும் பொழுது, தாய்ப்பாலை விட்டு, பால்புட்டியில் பால் குடிக்க ஆரம்பிக்கும். இதுவும் அந்தப் பராயத்துக்குத் தேவை. மேலும் குழந்தை வளரும் பொழுது, பால்புட்டியை விட்டு ஒரு பாத்திரத்தில் (கிளாஸ்,கப்) பால் ஆரம்பிக்கும் வேளை சிறிது சிறிதாகத் திடமான உணவை உண்ண ஆரம்பிக்கின்றது. இதை ஒரு வளர்ச்சிப் படிமுறை என்று சொல்லலாம். இதுதான் மனித வளர்ச்சி. முரணாக பால் புட்டியிலேயே பால் குடித்துக்கொண்டிருந்தால் அந்தநிலையில் ஒரு தேக்கம் ஏற்படும். அதனால், திடமான உணவை உண்ண அக்குழந்தை முயற்சிக்காது. புட்டிப்பாலையே அருந்தியவர்கள் அதையே ஒரு பழக்கமாக்கி விட்டால், அதுவும் அதில் ஒரு திருப்திகளைக் கண்டு விட்டால், அந்தத் திருப்தி ஆரோக்கியமற்றதாக இருந்தாலும் கூட அத்திருப்திக்கு அடிமையாகி விடுவோம். இதையே நான் **prayer holic** என்று அழைக்கின்றேன். அடிமை அடிமை தான்.

புட்டிப்பாலைக் குடித்து வளரமுடியாது. வளரும் குழந்தைக்கு மேற்கொண்டுவளரத் திடமான உணவு தேவை.

இந்த உருவகத்தை செபத்திற்கு ஒப்பிட்டுப் பார்த்தால் - நீங்களும் நானும் செபங்களை மனப் பாடம் செய்து, வாய்ச் செபமாக செபிக்கின்றோம். அடுத்த படியாக, குழந்தை, வளரவளர, வளர்ச்சிக்கேற்ப செபமுறையும் மாறவேண்டும். மூன்றாவது கட்டமாக, கடவுளை மகிமைப்படுத்தும் செபங்களைச் சொல்ல ஆரம்பிக்கின்றோம். ஆயினும், இதுவும், வாய்ச் செபந் தான். அடுத்த கட்டச் செபநிலைக்கு நாம் பயணிக்க வேண்டும். இதையே பவுல் சொல்வதாக நான் நினைக்கின்றேன்.

### இறைவேண்டல்

இந்த ஆண்டை இறைவேண்டல் ஆண்டாகத் தான் போப் பிரான்சிஸ் அவர்கள் பிரகடனம் செய்தார். இந்தத் தலைப்பு நற்செய்திலேயே உள்ளது. மத்தேயு எழுதிய நற்செய்தியில், ஆறாவது அதிகாரத்தில் ஐந்தாம் வசனத்துக்கு முன்னர் இந்த உபதலைப்பு உண்டு. இயேசு என்ன சொன்னார்?

“நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது வெளிவேடக்காரரைப் போல் இருக்க வேண்டாம். அவர்கள் தொழுகைக் கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்று கொண்டு மக்கள் பார்க்க வேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகின்றேன்,” (மத்.6:5). உறுதியாக இயேசு சொல்லியிருக்கிறார்!. இயேசு கடினமான வார்த்தையைப் பயன்படுத்தினார். “வெளிவேடக்காரர்”. மேலும், “மக்கள் பார்க்க வேண்டு மென்று இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள்.”

இப்பொழுது சொல்லுங்கள். நீங்கள் எங்கே நின்று செபிக்கிறீர்கள்? எப்படிச் செபிக்கிறீர்கள்? இது இயேசுவின் சவால்.

“மேலும், இயேசு தொடர்ந்து சொன்னார்: “நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத் தவரைப்போலப் பிதற்ற வேண்டாம்: மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில், நீங்கள் கேட்கு முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார்.” இயேசு இவ்வளவு தெளிவாகவும் உறுதியாகவும் சொல்லிய பின்னரும் நாம் என்ன செய்கின்றோம்? எங்கள் வாய்ச் செபத்திலேயே தங்கிவிட்டோமா? நிறைய, நிறைய “மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே” நாம் செபிக்கின்றோமா? மற்றவர்கள் பார்க்க வேண்டுமெனக் கோவிலுக்கு போகின்றோமா? இல்லை ஒரு கட்டாயத்தின் நிமித்தம் கோவிலுக்குப் போகின்றோமா? இந்தக் கட்டாயம் உள்வாங்கப்பட்டு அதுவே என்னை அடிமைப்படுத்தி விடுகின்றதா? ஒரு கட்டத்தில், நான் வாயால், சொல்வதற்கும் எனது எண்ணங்களுக்குமிடையே ஒரு பாரிய இடைவெளி உருவாகிச் செபத்தை அர்த்தம் இல்லாமல் ஆக்கிவிடுகின்றது. கிளிப்பிள்ளை போன்று மனப்பாடம் செய்து திருப்தி திருப்பிச் சொல்லுகின்றோம். இதைத் தான், இயேசு “பிதற்ற வேண்டாம்” என்றார். இப்படிப் பட்ட செபத்தில்தான் எனக்கோர் அதிருப்தி தோன்றியது. அத்துடன், இயேசு எதைச் செய்யவேண்டாம் என்று சொன்னாரோ, அதையே பலமடங்காக்கி நாம் செய்கின்றோமே! ஏன்? எனக்கு தெரியாது.

### ஏதோ ஒன்று இல்லை!

பீட் கிறிவித்ஸ், ஓர் ஆங்கில நாட்டு பெனடிற்றின் சபைத்துறவி, மேற்கத்தைய நாட்டுச் செபத்தையிட்டுத் தனது நூலில் எழுதினார்: “ஆராதித்தல், மகிமைப்படுத்தல், விண்ணப்பித்தல், மன்னிப்புக் கேட்டல், நன்றி கூறுதலுடன் செபம் திருப்தி அடைகின்றது.” மேலும் அவர் கூறினார்: “மேல் நாட்டிலும், மேல் நாட்டுத் திரு அவையிலும் ஏதோ ஒன்று இல்லாமல் போய்விட்டது.” ஏதோ ஓர் இழப்புண்டு. மனிதரைப் பாகுபடுத்தி, “ஒருபக்க வளர்ச்சி கொண்டுள்ளதாக” அவர் உணர்ந்தார். மேல்நாட்டு செபமுறை மனிதரைப் பாகுபடுத்தி, ஒரு பக்க வாழ்வை வாழ முயல்கின்றோம். இதில் முழுமை இல்லை. **(Marriage of the East and the West, 1976)**. இப்படிப்பட்ட ஒரு செபமுறையைத் தான் மேல்நாட்டுக் குருக்களும் துறவிகளும் எங்கள் நாடுகளுக்கு இறக்குமதி செய்தார்கள். நாமும் காலம்காலமாக இந்தச் செபமுறையையே பழகி வருகிறோம். இயேசு சொல்லியதை புறந்தள்ளி விட்டோம். நான் ஏற்கனவே கூறிய எனது அதிருப்திக்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். ஆனால், அந்த நேரம் எனது அதிருப்தியை அடையாளங்காண முடியவில்லை. அப்பொழுதிருந்த ஆன்மீக வழிகாட்டிகள் (இன்று, இவர்களை நான் ஆன்மீகப் பயணத்தில் உடன் பயணிகள் என்றே அழைக்கின்றேன்), எனக்கு உதவக்கூடிய நிலையில் இருக்கவில்லை. இன்றுகூட, நான் குறிப்பிடும் ஒருவருடைய ஆன்மீகப்பயணத்தில் உடன் பயணிக்கக் கூடியவர்கள் பெரும்பாலும் இல்லை என்று கூறினால் அது யதார்த்தத்தை ஏற்றுக் கொள்வோர் மறுக்கமாட்டார்கள். திருஅவையில் உள்ள சில வறுமைகளுள் இதுவுமொன்று.

பீட்கிறிவித்ஸ் கோடிட்டுக்காட்டியது இருமைவாத மென்பதில் ஐயமில்லை. இக்கட்டத்தில் நான் தேட ஆரம்பித்தேன். செபிப்பதில் அர்த்தம் உண்டா? அர்த்தமில்லாத ஒன்றைத் திருப்பித் திருப்பிச் செய்வது மனிதமல்ல.

### திறந்தமனம்

இத்தேடலில் நான் சந்தித்த ஒரு நூல் - தொமஸ் கிறீன் எழுதிய இறைவன் பால் திறந்த மனமுடையவராக இருப்பது. செபநிலையில் இது ஓர் வளர்ச்சி. **openness to god.** சாமுவேலை ஆண்டவர் அழைத்தார். சாமுவேல் ஏலிதான் அழைக்கிறார் என்று எண்ணி, ஏலியிடம் ஓடினான். இவ்வாறு மூன்று முறைகள் சாமுவேலுக்கு ஓர் அழைப்பு வந்தது. ஏலி இறுதியாகப் புரிந்து கொண்டார். ஆகவே, “இன்னுமோர் முறை இந்த அழைப்புக் கேட்டால், என்ன செய்யவேண்டுமென்று கேளும்,” என்று ஏலி சாமுவேலுக்கு சொன்னார். சாமுவேலுக்கு மீண்டும் அழைப்புக் கேட்டது. ஏலி சொல்லியவாறு, சாமுவேல் ஆண்டவர் குரல் கேட்டு, சாமுவேல் சொன்னார்: “பேசும், உம் அடியான் கேட்கிறேன்,” (1சாமுவேல்.3:4-10). இந்த நிகழ்வில் ஒரு சில செய்திகள் உண்டு. முதலாவது, கடவுளுக்கும் சாமுவேலுக்கும் இடையில் ஏலி தரகராகவோ அன்றேல் இடையூறாகவோ இருக்கவில்லை. ஒருவருடைய ஆன்மீகப் பயணத்தில் உடன் பயணிப்பவர், கடவுளுக்கும், கடவுள் அழைத்த நபருக்கும் இடையில் ஒரு தரகராகவோ, ஆண்டவரின் குரலைத் தான் கேட்டமாதிரித் தனது விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப, தனது சார்புகளுக்கேற்ப எடுத்துரைப்பது உடன் பயணியின் பணியல்ல. இது, தவறான வழிநடத்தலாகவே அமையும்.

இரண்டாவது, ஆண்டவன் குரல் கேட்டதும், சாமுவேல் பேச ஆரம்பிக்கவில்லை. “ நீர் பேசும், உம் அடியான் கேட்கின்றேன்.” செபத்தில் இன்னுமோர் படி வளர்ச்சி, இந்நிலை. இறைவன் குரலுக்கு நான் செவிமடுக்கிறேன். அந்தத் தெய்வீகக் குரலைக் கேட்க, நான் திறந்த மனமுடையவராக இருத்தல் அவசியம். இது அவ்வளவு சுலபமானதல்ல.

திறந்த மனமென்று சொன்னால், நான் கேட்க விரும்புவதைக் கேட்பதல்ல, வடிகட்டிக் கேட்பதல்ல, மறைமுக விருப்புக்களுடன் **(Agenda)** கேட்பதல்ல, மனதில் எந்தவிதமான எண்ணப்பதிவுகள், உணர்ச்சிப் பதிவுகள் இல்லாத ஒரு வெறுமையான நிலையில் **(tabula rasa)** நின்று செவிமடுப்பதுதான் திறந்த மனச் செபம்.

### பிதற்றல்

எங்கள் செபத்தை பாருங்கள். எம்மில் பெரும் பாலானோர் சொல்வது என்ன? “ கடவுளே, கொஞ்சம் அமைதியாக இரும். ஒன்றும் பேசாதேயும். உம் அடியானைப் பேசவிடும்.” உண்மைதானே? அத்துடன் நின்று விடமாட்டோம். “உம் அடியான் உமக்குச் சொல்வதற்கு நிறைய உண்டு. பொறுமையாகக் கேளும்.” இதைத்தான், இயேசு சொன்னார்: “இறைவனிடம் வேண்டும் பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம்: மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்களை நினைக்கிறார்கள்.” ஆகவே,

**கரைவையூர்ச் செல்வம்**

முதலில் பிதற்றுவதை நிறுத்துவோமா? எங்கள் கோவில்களில், பயங்கரப் பிதற்றல்கள் இடம்பெறுகின்றன. இது போதாதென்று அந்தப் பிதற்றல்களை ஒலிபெருக்கி மூலம் சுற்றும்சூழலை ஒலியால் மாசுபடுத்துகின்றோம்.

பல தடவைகளில் எங்கள் வேண்டுதல் கடவுளுக்குக் கட்டளையிடுவது போல இருப்பதும் உண்டு. நாம் எமது செபத்தில் சொல்லாமல் சொல்லுகிறோம். “கடவுளே! உமது திட்டத்தை மாற்றி, எனது திட்டத்தை அமுல்படுத்தும்.” இதையும் செபந்தான் என்று வாதிடுவோர் இல்லாமல் இல்லை. இறைத்திட்டம் என்னவென்று உய்த்துணர முன்னரே தங்கள் திட்டங்களை செபமாக்குவோர், இவர்கள். இது, உண்மையான செபம் அல்ல பிதற்றல்

### அரசியல் கண்ணோட்டம்!

இயேசு பன்னிருவரைத் தம்முடன் வருவதற்கு அழைத்ததை நற்செய்தி கூறுகின்றது. இயேசு அவர்களை அழைத்த காரணம் வேறு, அவர்கள் இயேசுவின் அழைப்பைப் புரிந்து கொண்ட முறை வேறு. இயேசுவின் அழைப்பு சீடத்துவத்திற்கு. ஆனால், அவர்களோ, இயேசுவின் அழைப்பை ஓர் அரசியல் கண்ணோட்டத்தில் பார்த்து, உரோமை இராச்சியத்திற்கு எதிராகப் போராடி, இஸ்ராயேலில் ஒரு சுயஆட்சியை நிறுவ ஓர் போராட்ட இயக்கத்திற்கு அழைப்பெனத் தங்கள் மறைமுகத் திட்டத்துடன் இயேசுவைப் பின் சென்றார்கள். அதனாலேயே, பதவி ஆசைக்கு அடிமைப்பட்டார்கள். இதையும் நற்செய்தி எடுத்துக் கூறுகின்றது. இறுதியில் நடந்ததென்ன? தவறான நோக்கங்களுடன், அன்றேல் மறைமுகத்திட்டத்துடன் ஓர் அமைப்பில், அல்லது ஒரு கட்சியில், அல்லது ஒரு சபையில் சேரும் பொழுது விளைவுகள் விபரீதமாகும். அதனாலேயே, இயேசு ஆழ்வோரால் கைது செய்யப்பட்டபொழுது, ஒருவன் காட்டிக் கொடுத்தான் (நோக்கங்கள் வேறாக இருந்தாலும்), இன்னொருவன் இயேசுவை மறுதலித்தான். கல்வாரிப்பாதையில் யாருமே உடன் பயணிக்கவில்லை, கல்வாரியில் மட்டும் ஒருவன் விசுவாசத்தோடு நின்றான்.

(தொடரும்)

# அன்பின் மகிழ்வு

04



## பழைய ஏற்பாட்டு பார்வையில் திருமணம் குடும்பம் அலகு ஒன்று இலக்கம் 08

இந்தத் திருத்துாது உரையின் அலகு ஒன்றில் திருத்தந்தை இறை வார்த்தையின் ஒளியில் குடும்பங்களுக்கான விவிலிய அடித்தளத்தை எமக்கு எடுத்து இயம்புகின்றார். விவிலியமானது குடும்பங்களின் அன்பு கதைகளைத் தாங்கிய பொக்கிசம் ஆகும். சிறப்பாக இறைவனுடைய முதலாவது படைப்பாகிய ஆதாம், ஏவாள் தொடக்கம் விவிலியத்தின் இறுதிப் பக்கத்திலே நாம் காணுகின்ற மணமகளுக்கும் ஆட்டுக்குட்டிக்கு மான திருமணவிழா (திவெ 21:2-9) வரை திருவிவிலியத்தில் காணப் படும் திருமணத்தைப் பற்றிய பல முக்கிய விடயங்களைத் திருத்தந்தை விபரிக்கின்றார். ஒவ்வொரு குடும்பமும் மணல் மீது கட்டப்பட்ட ஒரு வீடாக அல்ல, மாறாகப் பாறை மீது கட்டப்பட்ட இறுக்கமான அடித்தளமுடைய வீடாகக் கட்டப்படவேண்டும். மேலும், ஒவ்வொரு குடும்பமும் ஒரு விளக்குத்தண்டு போல மற்றவர்களுக்கு ஒளி கொடுக்கின்ற குடும்பமாக அமைய வேண்டும். இவ்வாறு பாறை மீது கட்டப்பட்ட இல்லமானது எப்படி இருக்கும் என்பதனைத் திருப்பாடல் 128 மிக அழகாகக் குறிப்பிடுகின்றது என்கிறார் நம் திருத்தந்தை. இத்திருப்பாடல் ஆனது திருமணச்சடங்குகளில் பயன்படுத்தப்படக் கூடிய, குடும்பங்களில் சேர்ந்து செபிக்கக் கூடிய ஓர் திருப்பாடல் ஆகும். இத்திருப்பாடல் வெளிப்படுத்தும் ஓர் அழகான குடும்பத்துக்குள் நுழைவோம் என்று எங்களையும் திருத்தந்தை இத்திருப்பாடல் விபரிக்கும் அழகான குடும்பத்துக்குள் நம்மை அழைத்துச் செல்கின்றார்.

இத் திருப்பாடல் இறைவனுக்கு அஞ்சி வாழுகின்றவர்களுக்கு இறைவன் தரும் ஆசீர்களைப் பட்டியல் இடுகின்றது. இக்குடும்பத்தில் கடவுளுக்கு அஞ்சி வாழ்பவர்கள் தம் உழைப்பின் பலனைப் பெறுவார்கள். பலகுடும்பங்கள்கடினமாகஉழைத்தும்எப்போதும்கடனிலும் கண்ணீரிலும் வாழ்வதனைப் பார்க்கின்றோம். ஆனால் இந்தக் குடும்பம் தங்கள் உழைப்பின் பலனை அனுபவித்து நிறைவில் வாழும் குடும்பமாகும்.

இது இறைவன் அளிக்கும் முதலாம் ஆசீர் ஆகும். அடுத்ததாக இக்குடும்பத்தில் துனைவி கனிதருகின்ற திராட்சைக் கொடி போல இருப்பாள என்கிறது. கனிதருகின்ற திராட்சைக் கொடி என்ற உருவகம் துனைவிக்குக் கொடுக்கப்படுகின்ற அழகான உருவகமாகும். அந்தத் துனைவி எப்போதும் குடும்பத்தையே நினைத்துப் பல காரியங்களைச் செய்து கொண்டே இருப்பாள். பிள்ளைகளை ஒழுங்காக வளர்ப்பார், கணவனோடு நன்றாக வாழுவார். அயல் வீட்டுக்காரரோடு நன்றாகப் பழகுவார்

மேலும் ஆண்டவருக்க அஞ்சி வாழும் குடும்பத்திற்கு இறைவன் அருளும் மிகப்பெரும் பொக்கிசம் பிள்ளைகளாகும். அந்தப் பிள்ளைகள் ஒலிவக் கன்றுகளைப் போல உணவு வேளையில் பெற்றோரைச் சுற்றி இருப்பார்கள். இவ்வாறாக ஒரு மாலை உணவு வேளையில் இவ்வாறான குடும்பம் ஒரு அழகான காட்சியாக ஒளிர்வதனை நம் திருத்தந்தை சுட்டிக்காட்டுகின்றார். மேலும் இவ்வாறான குடும்பத்திற்கு இறைவன் வழங்கும் அடுத்த ஆசியானது மிகவும் பெறுமதியானது. அதாவது இவ்வாறான குடும்பத்திற்கு இறைவன் சீயோனில் இருந்து ஆசி வழங்குவாராக. சிறப்பாக இவர்களின் வாழ் நாள் எல்லாம் எருசலேமில் நல் வாழ்வைக் காண இறைவன் செய்வார். இவர்கள் தங்களின் பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண்பார்கள். இது ஒரு உன்னதமான குடும்பத்தைப் பற்றிய அழகான திருப்பாடல். இந்தத் திருப்பாடல் இஸ்ரயேல் மக்களுடைய திருமண வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்ட திருப்பாடல். இன்றும் திருமண வழிபாடுகளில் பயன்படுத்தபடும் திருப்பாடல். ஆகவே இந்தச் செப ஆண்டிலே ஒவ்வொரு குடும்பமும் செபிக்கும் போது இந்தத் திருப்பாடலைக் குடும்பமாகச் செபிக்கலாம், செபமாக மாற்றலாம்.

ஆண்டவரே எம்முடைய குடும்பத்தை உமக்கு அஞ்சி நடக்கும் குடும்பமாக ஆக்கியருளும். எம் குடும்பத்தில் எம் தாய் கனி தரும் திராட்சைக் கொடி போல ஆக ஆசி வழங்கும். எங்களின் பிள்ளைகள் ஒலிவக்கன்றுகள் போல எங்கள் குடும்பத்தில் சூழ்ந்து இருக்க அருளும். ஆண்டவரே நீர் எங்கள் குடும்பத்தை சீயோனில் இருந்து ஆசீர்வதியும். எம் குடும்பத்தில் நல்வாழ்விற்கான அருளைத் தாரும் எங்களுடைய பிள்ளைகளின் பிள்ளைகளை காண எம் குடும்பத்திற்கு அருள் தாரும். சிறப்பாக எம் குடும்பங்களுக்கு எப்போதும் நலம் உண்டாவதாக ஆமென்.

இவ்வாறு நாம் ஒவ்வொரு நாளும் எம் குடும்பங்களை ஆண்டவர் கரங்களில் ஒப்படைத்துச் செபிக்க அழைக்கப்படுகிறோம். திருத்தந்தை எம்முடைய குடும்பத்திற்குத் தருகின்ற மிகப்பெரும் கொடை இத் திருப்பாடல். ஆகவேஇந்தத்திருப்பாடலைநாங்கள்ஆழமாகச்சிந்தித்து அதிலிருந்து வாழ்வு பெறுவோம்.

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

## அகவொளி குடும்ப நலமையம் திருமண சேவை



**மணமகன் தேவை**

வயது : 31
தொழில் : ஆசிரியர்
சமயம் : றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: NDT , BBM (Degree)
உதவி அரசாங்க அதிபர் பிரிவு: சண்டிலிப்பாய்
வாழ்க்கைத்துணை பற்றிய எதிர்பார்ப்பு:
அரசாங்கம் அல்லது தனியார் துறையில் வேலை செய்பவர் விரும்பத்தக்கது.
உள்நாடு மிகவும் விரும்பத்தக்கது.

**மணமகள் தேவை**

வயது: 41
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: அபிவிருத்தி உத்தியோகத்தர் (அரச வேலை)
கல்வித்தகைமை: B.A , M.A (Reading)
உதவி அரசாங்க பிரிவு: யாழ்ப்பாணம்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
வேலையுள்ள, வேலையற்ற அல்லது வெளிநாட்டிலுள்ள பெண்

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்புகொள்ளவும்**
**அகவொளி குடும்ப நல மையம்**
**புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இலக்கங்கள்**
**077- 942 2970, 077- 904 7651**
**021- 222 2856**

### தம்பதிகளின் சிந்தனைக்காக

**கணவன் மனைவி தங்களை தாங்களே மதிக்கப் பழக வேண்டும் 60வது திருமண நாளை அழகான நன்றியுனர்வுடன் ஒரு கொண்டாட்டமாக கொண்டாடிய தம்பதிகளிடம் உங்களுடைய இந்த அழகான திருமண உறவானது ஒரு பெரும் சுவாலையாக இதுவரை காலமும் பற்றி எரிய முக்கிய காரணம் எது என்று அவர்களிடம கேட்கப்பட்டது. அதற்கு கணவன் கூறிய அழகான பதில்: என்மனைவி திருமணம் முடித்ததில் இருந்து இன்றுவரை எப்போதும் எனது கண்களுக்கு அழகாகவே இருந்து வருகிறாள். எனவே நான் என் வாழ்வில் இன்னொரு உறவை நினைக்கவோ நாடவேண்டிய தேவையோ எனக்கு இருக்கவில்லை. இந்த மனைவி இன்றைய யதார்த்தநிலை: சுமாரான அழகுஉடையவள்இ சற்று நிறைகூடியவள் முகத்தில் பல சுருக்கங்கள், காலத்தின் காரணமாக பழுதடைந்த பற்கள்.**

**இவ்வாறாக அவளுடைய தோற்றம் இருந்த போதிலும் அவள் அழகாக உடையை உடுத்தி இருந்தாள்இ மகிழ்வோடு இருந்தாள் அழகாக தன்னை அலங்கரித்து இருந்தாள். உண்மையில் எப்போதும் தன்னையே தான் மதித்தாள். அவள் தன்னை மதித்ததன் காரணமாக தன்னை எப்போதும் தன்னை அழகாக மகிழ்வாக நிறைவாக வைத்திருந்தாள். இதனால் தான் அவளுடைய கணவன் அவளை எப்போதும் அழகானவளாக பார்த்தான். அவளை என்றும் மதித்து அவளளால் கவர்ந்து ஈர்க்கப்பட்டான். அன்னை திரேசா தூரத்தில் இருப்பவர்களை அன்பு செய்வது இலகு எங்களுக்கு மிக அருகில் இருப்பவர்களை அன்பு செய்வது மிகக் கடினம். அன்பை உங்களுடைய குடும்பத்திற்கு கொண்டு வாருங்கள் ஏனெனில் அங்கே தான் ஒருவர் மற்றவரை அன்பு செய்கின்ற அன்பு பயணம் தொடர்கின்றது.**

## தடைகளைத் தாண்டி வாழ்க்கையைக் கொண்டாடு

**“நமக்கு ஏற்பட்ட சிக்கல்களுக்கு எப்போது முழுப் பொறுப்பு எடுக்கிறோமோ, அப்போதே நமக்கான தடைகள் நீங்கி, வலி நீங்கி, வழி பிறப்பதற்கான தெளிவு கிடைக்கும்.”**

**ம. இருதயராஜ்**

ஒவ்வொரு மனிதனும் பல ஏற்ற இறக்கங்களைத் தாண்டித் தான் வாழ்க்கையை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்ல முடிகிறது. ‘எனக்கெல்லாம் தொடர்ந்து துன்பம் வந்துகொண்டே இருக்கின்றன, என்ன தான் செய்ய?’ எனும் பெருமூச்சோடு வாழும் நிலை இருக்கும்.பிரச்சினைகளும், சிக்கல்களும் யாருக்குத்தான் இல்லை. என்ன வந்தாலும், அவற்றை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, வாழ்க்கை எனக்கு என்ன தரக் காத்திருக்கிறது என்பதை நோக்கி ஆர்வத்தோடு ஓடிக்கொண்டே இருப்பவர்களை நாம் பார்த்திருப்போம். இதில் நாம் எந்த வகை என்பதை அடையாளம் காண்பதில்தான் சில மறைமுகச் சிக்கல்கள் இருக்கும்.

‘நான் எல்லாத்தையும் நல்லாத்தான் செய்கின்றேன், எனக்கு அடுத்து இருப்பவர்களால்தான் இவ்வளவு பிரச்சினையும்’, ‘எனக்கு நேரம் சரியில்லை. அதனாலதான் இவ்வளவு பிரச்சினைகளும் வரிசையாக வருகின்றது’, ‘நான் எங்கேயோ இருக்க வேண்டிய ஆள், என்னோட கெட்டகாலம், இங்க வந்து குப்பை கொட்ட வேண்டியிருக்கு’, ‘இது மட்டும் எனக்குக் கிடைச்சிருந்தா, நான் எங்கேயோ போயிருப்பேன்’ என்று இதுபோலப் பல சாக்குப்போக்குகள் சொல்லி மனத்தை ஏதோ ஒரு வகையில் ஆறுதல் படுத்துபவர்களும் உள்ளனர்.

உளவியல் அடிப்படையில் பார்க்கும்போது, பொறுப்புணர்வு இல்லாத எவரும் எக்காலத்திலும் முன்னேற்றம் காண முடியாது எனத் தெரிகிறது. அப்படியென்றால், எனக்கு வரும் பிரச்சினைக்கு எல்லாம் நான் மட்டும் தான் காரணமா? ‘ஆம்’ என்பது மட்டும்தான் இதற்கான பதிலாக அமையும். நமக்கு ஏற்பட்ட சிக்கல்களுக்கு எப்போது முழுப் பொறுப்பு எடுக்கிறோமோ, அப்போதே நமக்கான தடைகள் நீங்கி, வலி நீங்கி, வழி பிறப்பதற்கான தெளிவு கிடைக்கும். இல்லையெனில், அந்தச் சிக்கல் அப்போதைக்கு மறைந்து போனாலும், பின்னால் வருகின்ற சிக்கல்களை எதிர்கொள்ளும் மனநிலை மங்கிவிடும்.

‘என்னை யாருமே புரிந்து கொள்ளவில்லை, என்னுடைய திறமை யாருக்குமே தெரியவில்லை’ என்று குறை சொல்பவர்களுக்கு மத்தியில், **எந்தத் தடைகள் வந்தாலும் அதைப் புரிந்து, அவற்றினை எதிர்கொள்ளக் கூடிய திறனை வளர்த்து,** முழுமூச்சோடு இறங்கி வெற்றி காண்பேன் எனும் தீர்க்கமான உணர்வோடு செயலாற்றும் பலரை நாம் கண்கூடாகப் பார்த்திருப்போம். அவர்கள்தான் நமக்கான உந்துசக்தி. அவர்கள் முன்னெடுக்கும் செயலாற்றலை அப்படியே உள்வாங்கி நாம் செயற்படுத்தும்போது, நாமும் அசைக்க முடியாத மனிதராக வலம் வருவோம்.

நம் திறமைகளைப் புரிந்துகொண்டு, நமக்கான வழிகளை உருவாக்கி, நம்மை நாம் விரும்புகிற உயரத்திற்குக் கொண்டு போகும் அளவிற்கு யாரும் நமக்காக வரமாட்டார்கள். வாழ்க்கையின் ஓட்டத்தில் சந்திக்கின்ற மனிதர்கள், சிந்திக்க வைக்கின்ற செயல்கள் மூலம் மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும். இதை உணரும் போதுதான், நம்மை நமக்குப் புரிய வைக்க முடியும். அதன்மூலம் உலகிற்கு நம்மைப் புரியவைக்க முடியும்.

ஒரு சிலருக்கு எத்தனையோ திறமைகள் இருப்பினும், அதை முறையாகப் பயன்படுத்தி முன்னேறும் வாய்ப்பு இல்லாமல் தடுமாறுவார்கள். அவர்களுக்கு எங்கோ ஒரு சிறு உதவி அல்லது சிறு வெளிச்சம் தென்பட்டாலும், அதைச் ‘சிக்’கெனப் பிடித்து, முன்னேறும் ஆற்றல் கொண்டவர்கள் நமக்கான முன்னோடிகள். அந்த வரிசையில் நாம் எப்போது சேரப் போகிறோம் என்பது நம் கையில்தான் உள்ளது. எல்லா நிறுவனங்களிலும், திறமையை வெளிப்படுத்தும் தளம் இருந்தாலும், சில பல தடை கள் சிலரால் ஏற்படுத்தப்படும். அந்த நேரத்தில் பொறுமை மட்டுமே நம்மைப் பாதுகாத்து, உயர் நிலைக்கு இட்டுச் செல்லும், எல்லாவற்றையும் எதிர்த்து நிற்காமல், எதிர்கொள்ளும் ஆற்றலை நாம் வளப்படுத்திக் கொள்வோம். அதுதான் நம் உயர்விற்கு மிகப்பெரிய அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கும்.

நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும் பயன்படுத்தாத திறமை அதன் திறனை இழந்துகொண்டே இருக்கும். ஆதலால், எதிர்வரும் தடைகளை எதிர்கொள்வோம். அது தரும் படிப்பினைகளை ஏற்றுக்கொண்டு வளம் காண்பதே நம் முழுமுதல் நோக்கமாக இருக்கட்டும். நீங்கள் செல்லும் வேகத்தை விட, நீங்கள் செல்லும் திசை மிக முக்கியமானது! தொடர்ந்து பயணிப்போம்...

# ஒத்திகை

சாந்தா , உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன். உன்னை மன்றாடிக் கேட்கிறேன். இந்தத் தடவை , இந்த ஒரே ஒரு தடவை மட்டும்!
என்னை அனுமதித்து விடு சாந்தா அனுமதித்து விடு!
ஏன் சாந்தா முறைக்கிறாய்! தயை கூர்ந்து என்னை அப்படி முறைக்காதே ! சாந்தா ! என் அன்பிற்கினியவளே ! நான் உனக்கு என்ன குறைவைத்தேன்! என்ன கெடுதல் புரிந்தேந்தேன்! கடை கடை சியாகக வந்த காஞ்சிபுரம் சேலை வாங்கித் தரவில்லையா! உன் ஆசைக்கு, புதிய வீடு வாங்கித் தரவில்லையா! ஏன், நீ ஆசைப்படுகிறாய் என்று, புதிய கார் கூட வாங்கித் தரவில்லையா! ஏன் அதற்கும் அப்பால், உன் ஆசைத் தம்பிக்கு மோட்டார் சைக்கிள் வாங்கிக் டுக்கவில்லையா? என்ன குறை வைத்தேன் சாந்தா , உனக்கு என்ன குறைறை வைத்தேன்! குழந்தை இல்லை என்ற குறையத்த விர, வேறு என்ன குறை வைத்தேன்
என் அன்பே !

'உந்த நாடகத்தைக் கொண்டு போய் அங்க மேடையில விடுங்கோ ! என்னட்ட உது அவியாது. உப்பிடித் தான் ஒவ்வொரு முறையும் எனக்கு 'ஐஸ்'வைச்சு என்னை மயக்கிப் போட்டு போறனியள். இந்த முறை சரிவராது'
'சாந்தா கடைசியாக, ஒரே ஒரு தடவை!'
'முடியாதென்றனல்லே விடமாட்டன் எண்டால் விடமாட்டன். நீங்கள் நாடகம் நாடகம் என்று கிடைக்கிற ஒரு ஞாயிற்றுக்கிழமையையும் உல்லாசமாய் ஊர் சுத்திப் போட்டு வருவியள். நான் இஞ்ச வீட்டில இருந்து ஒவ்வொருத்தற்ற புளுகையும் கேட்டுக்கொண்டு கிடக்கவேணும்! என்ன மாதிரியெல்லாம் என்னைக் குத்திக் குடைவாளவை .

ஒருத்தி தன்ர பிள்ளைதான் வகுப்பில முதலாவதாம். இன்னொருத்தி தன்ர பிள்ளைக்கு அரங்கேற்றமாம். இன்னனொருத்தி தன்ர பிள்ளைக்கு ஏற்ற பொம்பிளை இந்த உலகத்திலேயே இல்லையாம்'...
சாந்தா தன் பிடியில் உறுதியாய் இருந்தாள்.
இவளை இந்தத் தடவையும் எப்படியாவது வென்றுவிடவேண்டுமென்று என் மூளை தீவிர ஆலோசனையில் இறங்கியது. சாந்தாவின் மன உளைச்சல் எனக்குப் புரியாமலில்லை . ஆனால் என்னுடைய மனவேதனையை அவளால் புரிந்துகொள்ள முடிய வில்லையே என்பதுதான் எனக்குள்ள ஒரே கவலை. குழந்தை இல்லை என்ற குறை அவளை நிறையவே பாதிக்கிறது. சாமங்களில் எழுந்திருந்து அவள் படும் வேதனையை என்னால் உணர முடிகிறது. என்னால் என்ன செய்ய முடியும்? நான் எத்தனையோ ஆலோசனைக னைகள் சொல்லியும் அவள் கேட்கவில்லை. கோயில் குளங்களில் ஏறி இறங்கி னாலாவது அவளுக்கு அமைதி கிடைக்கலாம் என்று, அவளுடைய விருப்பத்திற்காக , அவளுக்குப் பின்னால் நான் அலையாத கோயிலில்லை. குழந்தை இல்லை என்ற கவலை அவளுக்கு மட்டுமா என்ன ? நான் யாருக்குச் சொல்லித் தீர்ப்பேன்!
என் அண்ணன் கூட, தன் ஒரே மகளின் கலியாணத்தில் என்னை ஒதுக்கிவிட்டது, சாந்தாவுக்கு மறைத்தபடி எனக்குள் எவ்வளவு புழுங்கித் தீர்த்தேன்! இந்தக் கவலைகளைக் கடக்கவும் தானே நான் நாடகத்துள் நுழைகிறேன். எனக்கிருக்கும் ஒரே ஆறுதல் நாடகம்தான். என் வேலையிடத்து நெருக்க டிகளை க்கூட இந்தக்கலை வாழ்வு தானே ஆற்றுப்படுத்துகிறது! இதையும் விட்டால் என் மனநிலை எப்படி ஆகும் என்று எனக்குத் தெரியாது.

சாந்தா நல்லவள். ஆனாலும் குழந்தை இல்லை என்பதற்காக அவளது ஆழ்மனது என்னை ஒருவகையில் பழிவாங்கத் துடிக்கிறது. என்னைப் போலவே அவளும் தன க்குப்பிடித்த துறை ஒன்றில் நாட்டம் கொள்வாளெனில் பிரச்சினையில்லை. அதுவும் அவளால் முடியவில்லை.
அவளுக்குக் குழந்தையைத் தவிர இப்போ வேறெதிலுமே நாட்டமில்லை. தன் ஆறுதலுக்காக என்னைச் சிறைப் பிடிக்கிறாள். என்னால் ஒரு எல்லை க்குமேல் முடியாது. முடியவே முடியாது.
இந்தத் தடவை , கார் எனக்குக் கை கொடுத்தது. 'சாந்தா , காருக்கு 'ஒயில்' மாற்றவேண்டும். இந்த ஞாயிறையும் விட்டுவிட்டால் பிறகு கஸ்ரம்' என்றேன். பாவம் அவள் நம்பிவிட்டாள்.
அவள் நம்பிக்கையை இன்னும் வலுவாக நான் ஒரு மணிநேரத்திற்கு முன்பே நாடகப் பயிற் சி மண்டபத்திற்கு வந்துவிட்டேன்.
எனக்கு நேரம் முக்கியம். மற்றவர்களைப்




பற்றியெல்லாம் எனக்குக் கவலை கிடையாது. யார் வருகிறார்கள் இல்லை நான் நேரம் தவறமாட்டே ன். தவறக்கூடாது என்பது என் பிடிவாதம். குறிப்பிட்ட நேரத்தை விட அரை மணி தாண்டிவிட்ட து. யோசேப் அண்ணன் தாண்டித் தாண்டி வந்து சேர்ந்தார்.
யோசேப் அண்ணனைப்பார்கப் பாவமாக இருந்த து. ஒரு கையில் ஆர்மோனியப் பெட்டி மறுகையில் பிய்ந்து போன. ஆர்மோனியப் பெட்டியின் பாரத்திற்கு அவர் உடம்பு ஒரு பக்கத்திற்குச் சரிய, பாரத்தைச் சுமக்க முடியாமல் சுமந்தபடி வந்து சேர்ந்தார் அவர்.
அவர் என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தது நான் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். இது வழமையாக நடக்கும் விடயம்தான். வேண்டுமென்றே முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டேன். யோசேப் அண்ணன் புரிந்துகொண்டார். ஒவ்வொருவராய் மாறி மாறித் தொலை பேசினார். சிலர் பேசினார்கள். சிலர் பேசவில்லை. இன்னும் ஒருவர் கூட வரவில்லை. நான் ஏதாவது பேசினால்
கூட அவருக்கு ஆறுதலாயிருக்கும். ஆனால் நான் பிடிவாதமாய் இருந்தேன். விறைத்த பார்வையை மட்டும் அண்ணன்மேல் அடிக்கடி வீசினேன். கையில் வைத்திருந்த ஒற்றைப் பிரசுரத்தையும், நாடகப் பிரதியையும் எத்தனை தடவைதான் என்னால் திரும்பத் திரும்பப் படிக்கமுடியும்?
யோசேப் அண்ணன் ஒத்திகை மண்டப வாசலுக்குச் செல்வதும் வீதியை நீள்தூரத்திற்கு நாடி உயர்த்திப் பார்ப்பதும் பின் சலித்துத் திரும்புவதுமாக இருந்தார். அவருக்கு வாழ்க்கையே வெறுத்துப் போகு மளவிற்கு இருந்தது. இது இன்று நேற்றல்ல பாரிசில் இருபத்தை ந்து வருடங்களுக்கு மேலாக இதுதா ன் நடக்கிறது. இதை விட இலங்கையில் நாடகம் போட்டு நொந்து நூலான வரலாறு வேறு அவருக்கு.
ஒவ்வொரு முறையும் நாடகம் போடும் போதும் 'இதுதான் கடைசி. இனிமேலைக்கு ஆர் வந்து கெஞ்சினாலும் இல்லை ' இந்தப் பிடிவாதத்தோடு-தான் தொடங்குவார். ஆனால் நாடகம் முடிந்து அடுத்த கிழமையே ஆர் மோனியப் பெட்டியைத் தூசு தட்டத் தொடங்கிவிடுவார்.
அண்ணனுக்கு இதை விட்டா ல் வாழ்க்கை இல்லை. இதை யாரும் புரிந்து நடப்பதாயும் இல்லை. வீட்டில் மனிசி, பிள்ளைகளுக்குப் பயந்தும், நடிகர், இயக்குநருக்குக் கட்டுப்பட்டும் 'இந்த வயதில் இது தேவையா' என்றுதா ன் தோன்றும். ஆனாலும், யோசேப் அண்ண னுக்குள் இருக்கும் ஆன்மா வேறு. அது எல்லோராலும் புரிந்து கொள்ள முடியாதது.
தள்ளாதவயதிலும், ஆர்மோனியப் பெட்டியையும், தபேலாவையும் காவியபடி இரண்டு பஸ் ஏறி இறங்கி, பயிற் சிகளுக்கு அலைவதைப் பார்த்தால் 'உந்த மனுசனுக்கு விசர்' என்றுதான் தோன்றும். ஆனாலும், நாடகம் முழந்து எழும் கரகோச மும்நடிகர், இயக்குநருக்கான பாராட்டும் யோசேப் அண்ணனை எல்லா வற்றையும் மறக்கச் செய்துவிடும்.
அவர்களைப் பாராட்டும் போது தன் பிள்ளைகள் பாராட்டுப் பெறுவது போல யோச ப் அண்ண னின் மனம் கசிய கண் கள் ஈரமாகும்.ரெலிபோன் அடித்தது. பதறியடித்து அவசரமாய் அழுத்தினார் யோசேப் அண்ணன்.
'என்ன ? கொலண்டில நிக்கிறிய ?'
'.......'
'எனக்கு... வாயில வருகுது. உனக்கெல்லே சொன்னான் இண்டைக்கு 'றியேசல்' எண்டு...'
'அதெல்லாம் மேடையில வெல்லுவன்'



மனோ சின்னத்துரை

'உப்பிடி விசர்க்கதை கதைச்சுத்தான் அண்டைக்கு ராகுலன் வேண்டிக் கட்டினவர் தெரியும்தானே !'
'அது அவன், இது நான்' 'அந்தாள் சொல்ற தில ஞாயம் இருக்கு எருமை . 'றியேசலுக்கு' ஒழுங்கா வராமல் அங்க வந்து நீங்கள் ஒண்டும் கிழிக்க வேண்டாம். நாடகம் ஒரு கூட்டு வேலை. ஒராள், நீங்கள் 'கொம்பு' வரேல்லையெண்டா எத்தின பேற்ற நேரத்தை அநியாயமாக்கிறியள் தெரியும் '
'ஏதோ அவர் தன் பாரிசில பெரிய இயக்குநர் கணக்கா ஞாயம் சொல்லுறார்'
இவனுடன் கதைத்துப் பிரயோசனமில்லை . நாள்வேறு நெருங்கிவிட்டது.
விட்டால் வேறு ஆளையும் பிடிக்கமுடியாது, யோசேப் அண்ணன் அமைதியானார்.
'இவனோட ஒப்பிடும் போது அன்பு எவ்வ ளவு கண்ணியமான பெடியன்.
என்ன திறமான பாட்டுக்காரன்.
நடிகன். அவன் ஒராள் காணும் மேடையைச் சமாளிக்க. ஆனா
அவனுக்கும் மனிசிக்காரியோட, பிள்ளையளும் சேர்ந்தல்லே மறிக்குதுகள். அதில ஒரு ஞாயம் இருக்குதுதா ன். அன்பு, இருதயம் வெட்டிப் பிளந்து ஒரு வருசம்கூட ஆகேல்ல. எப்பிடி விடுங்கள்? ஆனால் அன்பு ஆசைப்படுகிறான். மேடையேறத் துடிக்கிறான். எதுக்கும்
இன்னும் ஒருக்காக் கேட்டுப் பாப்பம்'
என்று துணிந்தார் யோசேப் அண்ணன்.
'அண்ணை, உங்கடை வயசுக்கு ஒரு மரியாதை தந்து கதைக்கிறன். அவரை விடமாட்டன். அவர் உப்பிடி நாடகம் நாடகம் எண்டு திரிஞ்சு உயிரை விட்டா எங்கட குடும்பத்தை ஆர்பாக்கிறது?'
'இல்லை பிள்ளை , அன்பு வெளிவேலையெண்டு நாடகம் மட்டும்தானே செய்யிறான். மற்றவையைப் போல குடிச்சுவெறிச்சுத் திரி யிறானே ! தானுண்டு தன்ர வேலையுண்டு குடும்ப முண்டு என்று இருக்கிறான். அவனுக்கும் வாழ்க்கையில சந்தோசம் ஒண்டு வேண்டாமே உங்களை விட அவனில எங்களுக்கு அக்கறை இருக்கு. குடும்பத்துக்காக்காக வேண்டி ஒரு மனிசன் எவ்வளவத்தைத்தான் இழக்கிறது.
அவங்களுக்கும் தனிப்பட்ட ஆசாபாசங்கள் இருக்காதே !
ஆகலும் நாங்கள் சுயநலமாய் இருக்கப்படாது பிள்ளை.
தன் மனதிற் கிடந்த வைகளைக் கழட்டிவிட்டு ஒரு பெரு மூச்சோடு நிமிர யோசேப் அண்ணனுக்கு தனது நிலை மனதுக்குள் அசரீரியாய் அறைந்தது. யோசேப்பூ உன்ர வீட்டில மட்டும் என்ன வாழுது! உப்படித்தானே நீயும் கிடந்து உழருறாய். நாடகம் நாடகம் எண்டு திரிஞ்சு நாலு வே லையை ப் பறிகொடுத்தா ய்! வீட்ட கிடந்தந்த சருகை ச்சீலை, கூறைச்சீலை முதல் கொண்டு தாறு வாச்சி கட்டவெண்டு மனிசிக்குத் தெரி யாமல் கொண்டுபோய் நாசமறுத்தாய்! மேக்கப் சாமானுகள் நாடகச் சாமானுகளை நாடகம் முடிஞ்ச களைப்பில துலைச்சுப் போட்டு உன்ர காசைப் போட்டு இரகசியமாய் வேண்டிக் குடுத்தாய்!
உப்பிடி எவ்வளவு அநியாயத்தைப் பண்ணிப் போட்டு...ஓம்! நீ உழைக்கிறாய் உண்மைதான் யோசேப்பு ஆனா உன்ர மனிசிக்குப் பயந்து பிள்ளைகளுக்குப் பயந்து நீ வாழுற வாழ்க்கையை விடவா அன்பு கெட்டுப் போனான்.
யோசேப் அண்ணன் திரும்பவும் தெருவுக்கு நடந்து பார்த்தார் எவருமில்லை தொலைபேசிகள் தூங் கிக் கொண்டு கிடந்தன. இன்னும் இழண்டு கிழமையில் நாடகம் அரங் கேறப்போகிறது.
பயிற்சி இல்லாமல் மேடையேற்ற இயக்குநனர் அனமதிக்கமாட்டார். நேரம் போய்க்கொண்டிருந்தது. நான் சூடாகிக்கொண்டே இருந்தேன். சாந்தாவை நினைக்க, சூடு இன்னும் அதிகமாகியது.
கோவிக்காதேயுங்கோ உங்கட நேரத்தை இந்தக் கிழமையும் வீணாக்கிப்போட்டன். அடுத்த கிழமை எப்படியும் இரண்டு மூன்று தரம் பாப்பம் என்று என்னைச் சமாதானப்படுத்தியபடி ஆர்மோனியப் பெட்டியையும் தபேலாவையும் மூட்டை கட்டினார் யோசேப் அண்ணர்.
கார்டியனை அழைத்து
'நன்றி அம்மணி, இன்றைய எங்கள் ஒத்திகை மிகச் சிறப்பாக நடந்தேறியது' என்று அவர் சொன்னபோது எனக்குச் சிரிப்பும், கோபமும் ஒருசேர
வந்தது. உங்களுக்கு மீண்டும் எங்கள் நன்றிகள் என்று அவர் விடைபெற்ற போது அம்மணி இதயம் நிறைந்த ஒரு புன்னகையைப் பரிசளித்தார்.
காதறுந்த தபேலாப் பையை தலையில் தூக்கி வைத்தபடி தனது சக்திக்கு மீறி ஆர்மானியப் பெட்டியையும் தூக்கிக்கொண்டு நடக்கத் தொடங்கினார் யோசேப் அண்ணர். இந்தா ஒயில் மாற்றி வருகிறேன் என்று புறப்பட்ட எ ன்னுடைய கார் என்னையும் சேர்த்துப் பரிதாபமாகப் பார்த்தது.
அடுத்த
கிழமையும் சாந்தாவுக்கு ஏதாவது றீல் விட எனக்கு ஒரு ஐடியா கிடைக்காமலா போய்விடும்.
●

# மலர்ச்சி பெறும் தவக்கால ஆற்றுகை மரபுகள்

கிறிஸ்தவர்களின் தவக்காலப் பகுதியில் இறைமகன் இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப் பினைத் தியானிக்கும் நோக்கத்துடன் பல்வேறு தவக்கால ஆற்றுகை மரபுகள் காலங்காலமாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன. கடந்த யுத்தகாலச் சூழல்களில் குறைவடைந்திருந்த பல்வேறு ஆற்று கைப் பராம்பரியங்கள் தற்போது மீள் எழுச்சி பெறுவதனை அவதானிக்க முடிகின்றது. அவற்றி னையும் அவற்றின் பெறுமானங்களையும் அலசுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கிறிஸ்தவர்களில் குறிப்பாக கத்தோலிக்-கர்கள் மத்தியிலே இறை மகன் இயேசுவின் பாடுகள் மரணம்
உயிர்ப்பினைத் தியானிக்கின்ற தவக்காலப் பகுதி யில் அத் தவக்காலப் பக்தியை அதிகரிக்கச் செய் கின்ற பல்வேறு கலை இலக்கியப் பாரம்பரியங்கள் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றன. அவை அனைத்தும் மேற்கில் இருந்து கொண்டு வரப்பட்டவையாகவும், எமது பண்பாட்டிற்கேற்ப இங்கேயே தோற்றம் பெற்றவையாகவும் அமைந்துள் ளன. இப்பாரம்பரியங்கள் பல யுத்த காலச் சூழல்க ளில் மிகவும் பின் தங்கியவையாகவும் நலிந்து செல்லுகின்ற மரபுகளாகவும் காணப்பட்டன. ஆனால் அவை தற்போது சில ஆண்டுகளாக மீள்எழுச்சி



**பசாம் பாடுதல் (வியாகுல பிரசங்கம் இசைத்தல்)**

இலங்கைக் கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுகின்ற யாக்கோமே கொண் சால்வேஸ் அடிகள் தமிழிலும் சிங்களத்திலும் எழுதிய வியாகுல பிரசங்கமே 'பசாம்' என்ற பெயரிலே வழங்கி வருகின்றது. ஒன்பது பிரசங்கங்களாக இயேசுவின் பாடுகள் மரணத்துடன் தொடர்புடைய சம்பவங்களை கவித்துவத்துடன் பாடப்படுவதற்கேற்ற வகையில் எழு-தப்பட்டுள்ளது. அது மிகவும் இரக்க ஓசையுடன் பாட-ப்படுவதற்கு ஏற்றவாறு அமைந்தள்ளது. இப்பசாம் பாடுதலானது தவக்காலப்பகுதியின் முக்கிய செயற் பாடாக கத்தோலிக்க கிராமங்கள் தோறும் பாடப்பெற்றன. வீட்டுக்கு வீடு அதனைப் பாடுவர்கள் இருந்தார்கள் பெரியர்கள் சிறுவர்கள் சூழ இருந்து தியானிக்க இப்பா-டல் ஓதப்பெற்றது.

சிலகாலங்களுக்குமுன் இதனைப் பாடுவோர் இன்றியும் கேட்போர் இன்றியும் நலிவு பெற்றிருந்த இம்மரபு அண்மைக் காலங்களில் அதனை ஒரு போட்டி நிகழ்ச்சியாகச் சில பங்குகளும் தொலைக் காட்சிகளும் நடத்தத் தொடங்கியதன் பின்னணியில் பல இளையவர்கள் அதனைப் பாடுகின்ற நிலமை கள் உருவாகியுள்ளன. ஆலயங்களில் ஒலிபெருக்கி பொருத்தி அதனைப் பாடுகின்றார்கள். பாடக்கூடியவர் கள் இல்லாத இடங்களிலும் இறுவட்டுகளைப் பயன் படுத்தி ஒலிக்கச் செய்கின்றனர் இந்த மீள் எழுச்சியா னது பாராட்டப்படத்தக்கது. இன்றைய இளம்சமூகத்தி னர் மத்தியில் விருப்புக்குரியதாக இப்பாடல் ஆற்றுகை பரப்பப்படவேண்டும் அதற்கான முயற்சிகள் அனைத் தும் பாராட்டப்படத்தக்கவை. அதேவேளை இதனைப் பாடுவதற்கான ஒழுக்கங்களும் முறைமைகளும் வலியுறுத்தப்படுவதும் முக்கியமானது.

இதனை எவ்வாறு பாடவேண்டும் என வியா குல பிரசங்கம் நூலின் முன்னுரையில் விளக்க-ப்பட்டுள்
ளது. *யாக்கோமே கொண்சால்வேஸ் என்னும் அருந் தவ முனிவரால் அருளிச் செய்யபட்ட வியாகுல பிரசங் கம் என்னும் புத்தகமானது கிறிஸ்தவர்களுக்குப் பக்தி யையும் பாவத்தில் வெறுப்பையும் வருவித்தற்குரிய வொரு மேலான கருவியாகும் "இதனை வாசிப்பவர்கள் உலகக் கவலைகளை ஒழித்து மனதை ஒருவழி நிறுத்தி அமைதியாக இருந்து தலையில் பாகை முதலியவை இல்லாமலும் வாயில் தாம்பூலம் முதலியன போடாம லும் சந்தோச காரணங்கள் யாவையுந் தள்ளி மிகுந்த வியாகுலத்துடனே இயேசுக் கிறிஸ்து நாதர் பாடுபட்ட அந்த நாளை இந்த நாளாகப் பாவித்து அவர் பட்ட பாடுகள் எல்லாம் தம்கண் முன்பாக சம்பவிக்கிறதாக ரூபித்துக் கொண்டு இரக்கவோசையாக வாசித்தல் வேண்டும்."*

இவ்வுரையினை நோக்கும் போது கேட்டலின் வழியாக இறைமகன் இயேசுவின் பாடுகள் மரணம் பற்றித் தியானிப்பதற்கான ஒரு தியான மார்க்கமாகவே இது இயற்றப்பட்டிருக்கின்றது. அக்காலத்தில் அத்த கைய மன ஒருமைப்பாட்டுடனேயே அதனை வாசித்த ளித்தனர் ஆனால் இன்று பாடுகின்றவர்கள் அதன் அர்த்தத்தினை எந்தளவில் விளங்கி உணர்ந்து வாசிக் கின்றனர் என்பதும், அதனைப் பக்தி பூர்வமாக வாசிக் கின்றார்கள், கேட்கின்றார்கள் என்றும் கூறமுடியாதுள் ளது எனவே அந்த தியான உணர்வுகளைத் திரும்ப வும் கொண்டு வருதல் இன்றியமையாதது.

ஒன்பது பிரசங்கங்களும் ஒரு தொடர்ச்சியைக் கொண்டுள்ளன ஒவ்வொன்றும் முழுமையாக வாசிக்-கப்படுவதும் ஒன்றிற்குப்பின் ஒன்றை வாசிப்பதும் அடிப்படையானது. ஆனால் இன்று முழுப்பிர சங்கங் களும் வாசிக்கப்படுவதில்லை அத்துடன் தொடர்ச்சி யாகவும் வாசிக்கப்படுவதில்லை. அத்துடன் கருத்து உணர்ந்து விளங்கி வாசிக்கப்படுவதில்லை. வாசிக்கும் போது ஓதப்படும் ஓசைத்தொடருக்கு ஏற்பவே கருத்து வெளிப்பாடு புலப்படும் எனவே அந்த ஓசை தொடரை விளங்கிங் கொள்ளாமலே வாசிக்கப்படுவது பல இடங்களில் அவதானிக்கப்படுகின்றது. எனவே இவற்றினை வாசிக்க விரும்புகின்றவர்கள் இக்குறைபாடுகளையும் களைந்து வாசிப்பார்களாயின் பொருத்தமாக இருக்கும். அதுமட்டும-ன்றி பசாம் இலக்கியத்தினைப் போலவே அன்னை அழுங்-கல் ஒப்பாரி, பேரின்பக்காதல் சிந்தாகுலத்திரட்டு போன்ற பல துக்கப்பாடல்களும் இக்காலங்களில் பாடப்பட்டன அவையும் வழக்கொழிந்து செல்லுகின்றன அவற்றுக்கும் போட்டிகள் மூலமாக மீள் உயிர்ப்பு வழங்க வேண்டும்

**காட்சிகளாகும் சிலுவைப் பாதை**

தவக்காலத்தின் பக்தி முயற்சிகளில்மிக முக்கிய மாகக் கருதப்படுவது திருச் சிலுவைப்பாதை. இதனை ஆலயங் கள் தோறும் அமைக்கப்பட்டுள்ள 14 நிலைகளின் ஒளிப் படங்களின் முன்பாக நடத்தபடுவது இன்றும் நடைமுறை யில் இருக்கின்றது. அதனை யொட்டிய கல்வரிக்களப் பய ணங்களும் சாட்டி, மாங்குளம், என நடைபெறுகின்றன. இவை உறை நிலை சிற்பங்களையும் படங்களையும் அடிப் படையாகக் கொண்டு 14 நிலைகளுக்கும் பக்தர்கள் நடந்தும் நின்றும் முழந்தாள் படியிட்டும் தியானிக்கின்ற நிகழ்வு களாக உள்ளன.(இத்திருப்பயணங்களை சிலர் உல்லாசப் பயணங்களாக்கிக் கொள்வதும் நடைபெறுகின்றது) இதன் மற்றொரு பரிணாமமாக மனிதர்கள் வேடமிட்டு அக்காட்ச-ியில் உறைநிலையாக நிற்கத் தியானிக்கின்ற ஆற்றுகை வழக்கமும் சற்று நீட்சி பெற்று பாடுகளின் நாடகங்களின் சில கூறுகளையும் உள்வாங்கிக்கொண்டு சிறிய காட்சிகளை வேடமிட்டு ஆற்றுகை செய்வதனூடாகத் தியானம் செய்கி-ன்ற வழக்கமும் அண்மைக்காலங்களில் காணப்படுகின்றது. இதன் ஒரு புதிய மரபாக 'கடல் பாஸ்' என அழைக்கபடுகின்ற பாடுகளின் காட்சித் தியானம் அண்மைக் காலமாக அறிமுக மாகி நிகழ்த்தப்படுகின்றது. அதாவது தியானிக்கும் மக்கள் கடற்கரையில் நிற்க ஒவ்வொரு நிலைகளுக்குமுரியவர்கள்

**காவலூர் யோவான்**

வேடமிட்டு ஒவ்வொரு தோணிகளில் நிற்க அத் தோணிகள் நகர்ந்து உரிய இடங்களுக்கு வருவதாகவும் மக்கள் அத னைத் தியானிப்பதாகவும் அக்காட்சிகள் அமையப்பெறு கின்றன. வடமராட்சியிலும் குருநகர் பாசையூர் எழுவை தீவு போன்ற ஊர்களிலும் இவ்வருடத்திலும் கடந்த வருடத்தி லும் இக்காட்சி நிகழ்த்தப்பட்டுள்ளமையை இதற்கு உதார ணமாகக் குறிப்பிடலாம். கடலை அண்டி வாழும் மக்க ளுக்குக் கடலோடு தொடர்புடைய காட்சிகளில் ஒரு லயிப்பு இருக்கின்றதென்ற வகையில் இக்காட்சிகள் வரவேற்கத்தக் கவை. ஆனால் சிலுவைப்பாதையின் தியானத்திற்கப்பால் அவை வேடிக்கை தருகின்ற நிகழ்ச்சியாக மாறுவது தவ-ிர்க்க முடியாததாகின்றது. அடுத்ததோணி வருவதனை எதிர்-பார்ப்பது அதற்குள் காட்சி அமைத்த விதத்தினை இர சிப்பது என அது வினோதத்தினை இரசிக்கும் ஒன்றாக அமைகின்றதே தவிர ஆழமான தியானத்தினைக் கொண்டு வருமா என்பது கேள்விக்குறியே.

**திருப்பாடுகளின் நாடகங்கள்**

இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பினைச் சித்திரிக் கின்ற பொம்மைக் காட்சிகளைத் தொடர்ந்து மனிதர்கள் நடி-க்கின்ற திருப்பாடுகளின் காட்சிகள் உருவாகின என் பதனை யாவரும் அறிவர். இலங்கையின் வடபுலத்தில் 1952 ஆம் ஆண்டு புனித பத்திரிசியார் கல்லூரியில் அருட் தந்தை லோங் அவர்களினால் ஆங்கிலத்தில் நிகழ்த்தப் படும் நாடக மரபாக அறிமுகமாகி பின்னர் அருட்தந்தை மரியாம்பிள்ளை அடிகளினால் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டு மேடையேற்றும் பாரம்பரியமாக மாற்றம் பெற்று பின்-னர் மரிய சேவியர் அடிகள் புதிதாக திருப்பாடுகளின் நாடகங்களை எழுதி அதற் கென திருமறைக் கலாமன்றத்தினையும் உரு வாக்கி, தொடர்ச்சியாக அதனை மேடை-யேற்றி வந்ததன் பின்னணியில் திருப்பாடுக-ளின் நாடகங்களுக்கென காத்திர-மான அரங்குப் பாரம்பரியம் ஈழத்தில் உருவாகி நீட்சி பெறுகின்றது.

திருமறைக்கலாமன்ற பாடுகளின் நாடகங்களைப் பின்பற்றி பல பங்குகளில் மலர்ச்சி பெறும் வடிவ மாக இப்பாடுகளின் நாடகங்கள் மேடையேறுகின்றன. யுத்த காலங்களில் இதன் மேடையேற்றங் கள் குறைவடைந்திருந்த நிலைகள் மாறி தற்போது பல இடங்களில் இக் காட்சிகளை நிகழ்த்தும் வழக்கம் உருவாகி வருவது ஆரோக்கிய மானது. கடந்த வருடம் மன்னார் முல்லைத்தீவு, மணற்காடு நாரந் தனை மற்றும் பத்திரிசியார் கல்லூரி எனப் பல இடங்களிலும் இது நிகழ்-த்தப்பட்டது. இவ்வருடமும் நாரந்-தனையிலும் மன்னாரிலும் நிகழ்த்தப்பட்டது குறிப்பிடத்-தக்கது.


இப்பாடுகளின் நாடகமானது பல மனித தொகுதியின் கூட்டு முயற்சியில் உருவாக்கம் பெறுவது. இதில் ஈடு படும் நடிகர்கள் மத்தியில் பக்தியும் தியானமும் அற ஒழுக்கமும் வேண்டப்படுவது மட்டுமன்றி நேர்த்-தியாகச் செய்து முடிப்பதற்கான பயிற்சியும் தேர்ச்சியும் அவசிய
மானவை. அவை பிறழ்வுபட்டதனாலேயே உடக்குப் பாஸ் எனப்படும் பொம்மைகளைக் கொண்டு நிகழ்த் தப்படுகின்ற திருப்பாடுகளின் காட்சிகள் ஒரு கால கட்டத்தில் ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அவர்களி னால் தடைசெய்யப்பட்டன. எனவே மனிதர்கள் நடிக்கி-ன்ற திருப்பாடுகளின் காட்சிகளை உருவாக்கு பவர்களும் இதனை மனதிற்கொண்டு அவற்றினை மேற்கொள்வது அவசியமானது. இறைமகன் இயேசு வின் புனிதம் மிக்க வரலாறானது கூடிய அளவுக்கு யதார்த்தமாகவும் நம்பும்படியாகவும் அமையப்பெறும் போதே மக்களுக்கு அப்பாடுகளின் காட்சி வியாகுலத்தி னையும் பக்தியையும் உருவாக்கும். திருமறைக் கலா மன்றம் அதனை மிகுந்த பிரயத்தனங்களின் மத்தியில் வருடந்தோறும் நிகழ்த்தி வருகின்றது. எனவே பங்கு



களிலும் இதனைப் புதிதாக நிகழ்த்துபவர்கள் அவை குறைவுபடாது மேற்கொள்வது அவசியமானது.

**பெரிய வெள்ளியில் உடக்குப்பாஸ்**

இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்ப-ினைப் பொம்மைகளைக் கொண்டு நிகழ்த்தப்படும் பாரம்பரியமே 'உடக்குப்பாஸ்' என அழைக்கப்பட்டது. ஒரு காலகட்டத்தில் வடபுலத்தின் பல பங்குகளில் இப்பாரம்பரியம் இருந்தது. தற்போதும் மன்னார் பேசாலைக் கிராமத்தில் இவ்வழக்குக் காணப்படுகி-ன்றது. இதன் எச்சமாக பல பங்குத் தளங்களில் பெரிய வெள்ளி அன்று 'அறைந்து இறக்கும் பாஸ்' என இயேசு சிலுவை யில் உயிர்விடும் காட்சி கல்லறை ஆண்டவரின் உருவத்தினைக் கொண்டு நிகழ்த்-தப்படுகின்றது. பசாம் பாடல்களைப் பின்னணியாகப் பாட இயேசு சிலுவையில் உயிர் விடுவதும் அவரது உடலை இறக்கி தேவமாதாவின்
மடியில் வளர்த்துவதும் பின்னர் ஆசந்தியாக எடுத்-துச்சென்று ஆலயத்தில் முத்திசெய்தும் வழக்காக உள்ளது. இந்நிகழ்வு பல பங்குகளில் சிறப்பாகப் பக்-தியுடன் நிகழ்த்தப்படுகின்றது. ஆனால் சில பங்குக-ளில் அங்கு பரம்பரையாகச் செய்பவர்களே அதனைச் செய்யவேண்டும் என்ற வன்முறையான நடவடி-க்கைகளினால் குழப்பங்களை எற்படுத்துவதனை பக்தியற்ற முறையில் அக்காட்சிகளை
நிகழ்த்துவதனையும் அவதானிக்க முடிகின்றது. இது அக்காட்சி நிகழ்த்தப்படுவதற்கான நோக்கத்தினை-யே மாற்றி விடுகின்றது. பெரியவெள்ளி தினத்தின் தூய்மையையும் கெடுத்து விடுகின்றது.எனவே பாரம் பரியம் என்பதற்காக அதனை நிகழ்த்தாது உண்மை யான அர்த்தத்துடனும் தேவைப்பாட்டுடனும் நிகழ்-த்துதல் அவசியமானது. (தொடர்ச்சி 12ம் பக்கம்)



# மாற்றங்களை ஏற்படுத்தவல்ல உயிர்ப்பு!

அருட்சகோதரி ரூபி ஜோஸ்பின் CIC.

மனமாற்றம் என்பது, பொய்மையில் இருந்து வாய்மையை நோக்கி, இருளில் இருந்து ஒளியை நோக்கி, தீமையிலிருந்து நன்மையை நோக்கி, சாவில் இருந்து வாழ்வை நோக்கிக் கடந்து செல்வது ஆகும். உருவில் வரும் மாற்றம் மனமாற்றம் அல்ல. மாறாக, உள்ளத்தில் ஏற்படு கின்ற மாற்றம் உணர்வில் ஏற்படு கின்ற மாற்றம் பேசும் வார்த்தைகளில் ஏற்படுகின்ற மாற்றம் செய்யும் செயல் களில் ஏற்படுகின்ற மாற்றம் நம் நடத் தைகளில் ஏற்படுகின்ற மாற்றம் இதுவே உண்மையான மனமாற்றம்! பழைய வாழ்வில் இருந்து புதிய வாழ்வை நோக்கி, பழைய மனநி லையில் இருந்து புதிய மனநிலையை நோக்கி நாம் கடந்து செல்வது. உள் ளத்தில் தூய்மை, எண்ணத்தில்

> “மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால், உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்”

நேர்மை, உதட்டில் வாய்மை, இத யத்தில் தாழ்மை, சொல்லில் உண்மை, செயலில் நன்மை! இவையே ஒரு மனிதனை உயரிய மகான் ஆக்கும். நம் வாழ்வில் சொல்லும், செயலும் இணைந்ததாக இருக்க வேண்டும். சொல்லும், செயலும் ஒரு நாணயத் தின் இரு பக்கங்கள்!

பழைய மனித இயல்பைக் கடந்து செல்ல வேண்டும். செல்லும் வழியில், வாழும் வாழ்க்கையில், பேசும் வார்த்தையில் நாம் தன்னு ணர்வோடு செயல்பட வேண்டும். 'ஏன்? என்ன? எதற்கு?' என்ற வினாக் களைத் தனக்குள் எழுப்பித் தன்னை உணர வேண்டும். தனக்குள் நடக்கும் உராய்வுகளை அசை போட வேண் டும். தன்னிலை அறிய வேண்டும் தன் நிலை அறிவதே உண்மையான மனமாற்றம் தன்னிலை அறிவதன் மூலமாகத் தன்னை உணர முடி யும். பிறரை உணர முடி யும். படைப்புகளை உணர முடியும்.

தன்னை, பிறரை, படைப்புகளை நாம் உணரும் பொழுது, நம்மைப் படைத்த இறைவனை முழுமை யாக உணர முடியும் முழுமையாக அன்பு செய்ய முடியும். தன்னை உணர்வதன் மூலம் தனக்குள் அக வொளி கிடைக்கும். தன்னில் கிடைக்கும் அகவொளி தான் அவனை மனிதனாக் கும், புனிதனாக்கும். ஒரு மனிதன் புனித னாகும்போது, அவன் பார்க்கின்ற பார்வை மாறும். பார்க்கின்ற மனிதர்கள் அனைவருமே நல்லவர்கள், தூயவர்கள் என்ற மனநிலை உருவாகும்.

இதைத் திருவிவிலியக் கோணத்தில் நாம் பார்க்கும்போது தன்னிலையறிந்த ஊதாரி மகன் தந்தையின் அன்பை உணர்ந் தான் திருந்தி முழு மனிதனாய் வாழ்ந்தான். தன்னிலை அறிந்த மகதலா மரியா தன் கண் ணீரால் இயேசுவின் பாதம் துடைத் தாள் ஆண்டவர் இயேசுவின் அன்பை முழுமையாகப் பெற் றாள் இயேசுவின் அன்புச் சீடத்தி யானாள். இயேசுவின் பார்வை பட்டதால், தன்னிலை அறிந்த சக் கேயு, தன் தாழ்நிலை உணர்ந் தான் தன்னிடம் உள்ளதை ஏழை களுக்குப் பகிர்ந்தான் இறையாட்சியில் முழு பங்கினைப் பெற்றான். ஆண்டவர் இயேசுவால் ஆட்கொள்ளப்பட்டுத் தன்னிலையறிந்த சவுல், பவுலாய் மாறினார் இயேசுவின் நற் செய்தியைத் தீவிரமாக அறிவிக்கும் நற் செய்திப் பணியாளரானார் இயேசுவுக்காக அனைத்துத் துன்பங்களையும் துணிவுடன் ஏற்றார். 'கிறிஸ்துவுக்காக அனைத்தையும் குப்பை எனக் கருதுகிறேன்' என்று கூறிய தோடு மட்டுமல்லாமல், 'வாழ்வது நானல்ல, என்னுள் கிறிஸ்துவே வாழ்கிறார்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு இயேசுவின் தீவிர மான நற்செய்திப் பணியாளரானார் தூய பவுல்.

தன்னிலை அறிந்த பேதுரு, தன் தவறை உணர்ந்தார் மனம் வருந்தினார் மன்னிப்புக் கேட்டார் இயேசு வின் அன்பை முழுமையாகப் பெற்று முதல் மூன்று சீடருள் ஒருவராய், திரு அவையின் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார் இயேசுவுக்காகத் தன் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்து, துன்பங்களைத் துணிவுடன் ஏற்றார். தன்னிலை அறிந்த தாவீது தன் தவறினை உணர்ந்தார் அரச நிலையிலிருந்து விலகி, சாதாரண நிலைக்குச் சாக்கு உடுத்தி, சாம்பலில் இருந்து தன் தவறுக்காக மனம் வருந்தி ஆண்டவரின் மன்னிப்பை வேண்டினார் திருந்தி முழு மனிதனாய் வாழ்ந்தார் இயேசுவின் தலைமுறை அட்டவணையில் இடம்பெறும் பேற்றினைப் பெற்றார். இவ்வாறாக, திருவிவிலியத்தில் இன்னும் எத்தனையோ நபர்கள், உவமைகள் மற்றும் கதாபாத்திரங்கள் நமக்கு முன்னுதாரணமாக விளங்கு கின்றன. கிறிஸ்துவை நமது சாயலாகக் கொண்டுள்ள நாம், கிறிஸ்துவின் மதிப்பீடு களை நம் வாழ்வால், சொல்லால், செயலால், நடத்தையால் பிரதிபலிக்க நாம் அழைக்கப் படுகின்றோம். நம் ஆன்மா புத்துணர்ச்சி யும், புதுப் பொலிவும், புது வாழ்வும் பெற வேண்டுமாயின், உடலில் மட்டுமல்ல, உள்ளத்திலும், உணர்விலும், உணர்ச்சி யிலும் நாம் முழுமையான மனமாற்றம் அடைய வேண்டும்.

'என்னை மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்' என்று விரும்புவதைத் தவிர்த்து, நான் மற்றவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும். 'என்னை எல்லாரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று எதிர்பார்ப்பதைத் தவிர்த்து, நாம் மற்றவர் களை முழுமனத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். 'பிறர் என்னை அன்பு செய்ய வேண்டும். பிறர் என்னை மதிக்க வேண் டும்' என்று விரும்புவதைத் தவிர்த்து, நாம் பிறரையும், நம்மை விடத் தாழ்நிலையில் உள்ளவர் களையும் அன்பு செய்ய வேண்டும் மதிக்க வேண்டும்."மனி தர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப் பீர்களானால், உங்கள் விண்ணகத் தந்தை யும் உங்களை மன்னிப்பார்" என்ற இறை வார்த்தைக்கு ஏற்ப, ஒருவர் நம்மைப் பற்றி வசைபாடும்போது, இல் லாதது பொல்லாதது கூறும்போது, நம்மைப் பற்றிப் பிறரிடம் இழிவானதைப் பேசும்போது, நம்மீது பொறா மைக் கண்கொண்டு பார்க்கும்போது, தேவையற்ற வார்த்தைகளால் நம்மைக் காயப்படுத்தும் போது, எரிச்சலுக்கு நம்மை உட்படுத்தும் போது, நம்மைக் கோபப் படுத்தும்போது, பிறரின் கோபக்கனல் நம் மீது சீறியெழும்போது, நாம் அவர்களை மனதார மன்னிக்க வேண்டும்.

“உனக்கு அடுத்து இருப்பவ ரிடம் அன்பு கூருவாயாக் உங்களிடத் தில் அன்பு செலுத்து வோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால், உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்?” என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப, நாம் வாழ்கின்ற சமுதாயத்தில், நம் குடும்பத்தில் நமக்கு எதிரானவர்களை, நம்மைத் துன்பத்திற்கு உள்ளாக்கி யவர்களை, நம்மைத் தேவையற்ற வார்த்தைகளால் காயப்படுத்தியவர் களை, நமக்கு எதிராகச் செயற்பட்ட வர்களை, நமக்கு முற்றிலும் பிடிக்காத வர்களை விரும்பி அன்பு செய்யும் போது ஆண்டவர் இயேசுவும் நம் குற்றங்களை மன்னிப்பார். நமக்கு நாம் விரும்பித்தேடும் நிறை வாழ்வை யும், நிறையருளையும், நிறை மகிழ்ச்சி யையும், நிறை அமைதியையும், நிறை வளத்தையும் நம் வாழ்விலும், குடும்பத்திலும் மழை யெனப் பொழிவார்.

# சிந்தி! வருந்து! வழிநட!



## சிலுவைப் பாதை (ஹைக்கூ கவிதை)

கூட இருப்பவர்களுக்கே குழி பறிக்கும் பிசாசு காசு யூதாசு... வாரிசுகள்!!

1

பதவி நாற்காலிக்குப்
பரம பிதாவே பலியானார்
அதிபதி பிலாத்து..!

2

சுமை சுமந்து சோர்ந்தவருக்கு
இளைப்பாற்றி தருவேன்
என்றார் இயேசு
சுமைதாங்கிக்கே சுமை!

3

வற்றிய மரங்கள் விழுவது இயற்கை
பச்சை மரங்கள் விழுவது செயற்கை
இயேசு முதல் முறை விழுகிறார்!

4

கருக் கொள்வது தாய்மையின் சக்தி
மழலைச் சிரிப்பு தாய்க்குச் சக்தி தாய்
சந்திப்பு இயேசுவுக்குச் சக்தி!

5

கொழுகொம்புகளால் தான் சா-
தனையாளர்கள் பெருகுகின்றார்கள்
கொழுகொம்பு சீமோன்!

6

அடர் வனத்தில் சுடர் தேடி
இடர் பட்டு நுழைந்து மகிழும்
பெண்தளிர் வெரோனிக்கா!

7

சூரியன் விழுந்தால் நட்சத்திரம் எழும்
சூரியன் எழுந்தால் நட்சத்திரம் விழும்
இயேசு இரண்டாம் முறை விழுவது?

8

தனக்காக மட்டும் அழுபவன் மனி-
தன் பிறருக்காக அழுபவன் புனிதன்.
இயேசுவுக்காக அழும் எருசலேம்
மகளிர்?

9

வாழ்வில் விழுவது இயல்பு
வாழ்வில் விழுந்து விழுந்து
எழுவது சாதனை இயேசு மூன்றாம்
முறை விழுந்து எழுவது?
உரிமைகளைப் பறிப்பது

10

இயற்கையைப் பறிப்பது மூடத்தனம்
இயேசுவின் ஆடைகளைப் பறிப்பது?
உலக உயிர்களைச் சுமப்பது பூமி

11

உலக மீட்பரின் உயிரைக் குடித்தது
மூன்று ஆணி! அவமானத்
தின் சின்னம் சிலுவை

12

கொடிய கல்வாரி மலையும் புனித
மானது மன்னித்த மாபரன் இறப்பால்!
கன்னி மடியில் சிசு பாலன்

13

அன்னை மடியில்
உசிரில்லாத் தேவன்
அன்னை மடி அதிசயமடி!

14

உதவியால் தொழுவமும் கல்லறையும்
மணிமகுடம் சூடிக் கொண்டன
ஏழையின் வடிவாய்ப் பிதாமகன்!

வள்ளல்கள் வாழ்கிறார்கள் என்றும்
நல்லவர்கள் இறவாது வாழ்கிறார்கள்
இறந்தும் உயிர்த்த இயேசு எப்போதும் வாழ்கிறார்!

# சித்தம் செய்த இரத்தம்



சித்தம் செய்த இரத்தம்
எம்மை சிந்திக்க வைத்து
சிலுவையில் சிதறிய
ஏழு வார்த்தைகள் இவை ...

மரணத்தின் விளிம்பில்
ஒரு மன்னிப்பு உரைப்பு....

ஒரு காவியம்
எம்மில் பொழிந்த
கடைசிக் காதல் இவை ...

கசிந்தொழுகும் உதிரத்திலும்
கடைசித் தருணத்திலும்
கதறிக் கேட்டு கொண்டு உரைத்த
கடவுளின் வார்த்தை இவை ...

மனிதனாய் வந்த மனுமகன்
மனம் வருந்தி
மன்னிப்புக் கேட்டார்....
தமக்காய் அல்ல , எமக்காய்
எம் பாவங்களுக்காய்

பாவி நாம் இருக்க
பாவம் அறியா அவர் இறக்க
பரலோக தன் தந்தையிடம்
பரிந்து பேசிய வார்த்தை இவை

ஆடைகளைந்து , அவமானம்
பொழிந்து
முட்கிரீடம் தரித்து,
முழுவதும் துறந்து
மூன்று முறை விழுந்து ,முகம்
குப்புற எழுந்து
பாவம் ஏற்று, பலிப்பீடம் சென்று
பாவி எமக்காய் பரமனிடம்
வேண்டினார்.....

சிரித்துச் சிரித்து
சிதைத்து கொண்ட
கூட்டங்களுக்கும்
அவர் சரீரம் கிழிய
உதிரம் சிந்திய மக்களுக்கும்
மன்னிப்புக் கேட்டு
மனம் நொந்து அழுதார்.....

மன்னிக்க மறக்கும் மனங்களுமாய்
மன்னிப்புக் கேட்க மறுக்கு மனிதமுமாய்
நாம் இருக்க
மாமனிதன் மரணத்திலும்
மன்னிப்பு உரைத்தார் ......

இருபுறக் கள்வர் நடுவே இறைமகன்
வலம் இடம் நடுவே வந்துதித்த
மனுமகன்
அவமான சிலுவையில் அறைப்பட்டு
அழுது துடிக்க

நகைப்பும் , நக்கலும்
ஒருபுறம் இருக்க
திகைப்பும், வியப்புமாய்
மறுபுற கள்வன்
மனுமகனை நோக்க

தவறியும் , தவறிழையா
இறைமகன்
நாம் செய்த தவறுக்காய்
தண்டனை ஏற்றார்....

ஆண்டவரின் அவலம் கண்டு
அன்னை அவள் துடி துடிக்க
அவர் அன்புச் சீடன்
அங்கு உடனிருக்க
" அதோ உம்மகன் , இதோ உன்
தாய் " என
உரைத்துக் கூறி அன்னையவளை
கையளித்த அரும் பெரும்
வார்த்தை இவை ...!

ஏளனமாய் இவரொலிக்கு
கீழிருந்து சிலர் சிரிக்க
எதுவுமறியா மக்கள்
பலர் இதைக் கேட்டு
என்னவென்று வியக்க
பாவமறியாப் பரமன்
பாவி எமக்காய்
இப் பலிப்பீடம் சுமந்து
பரலோக தகப்பனிடம்
பரிந்து கேட்டழுதார்......

பாவ இருள் சூழ்ந்த பாவியருக்காய்
பாசமகன் பாடுகளில் பரிதவிக்க.....
பாவிக் கோலம் போர்த்தப்பட்டு
பாவம் அறியா வதனம்
பாவங்களால் மறைக்கப்பட்டு
பாசதந்தையின் உறவு
எம்மால் முறிக்கப்பட்டு
மரண அவஸ்தையில்
அவதிப்பட்டு அழுது துடித்த
அழுகுரல் அகிலத்தையே
அன்று உலுக்கியது...

நகர் முழுதும் இருள் சூழ
ஆண்டவன் திருவுளம்
நிறைவேற ஆறுமணி நேர
நரகவேதனை இவர் ஏற்க ... .
விடைபெறும் நேரத்தில்
விடுத்த வலி சூழ்ந்த
வார்த்தை இவை....

கரடு முரடுப் பாதையிலும்
கசையடி வேளையிலும்
காடி நீர் அவர் அருகிருக்க
தாகம் எடுக்கா
அவர் உடல் நிலை
உயிர் பிரியும் நேரத்தில்
உரக்க கூறிக் கேட்டுகொண்டது

" தாகமாயிருக்கின்றேன்"
அருந்திய காடி
இறங்கிய சொற்பத்தில்
முடிந்தது அவர் உயிர்
முழுமை பெற்றது
அவர் பணி ....!

தலைசாய்த்துத் தலைமகன்
தம்பணி முடிக்க
"முடிந்தது என்ற வார்த்தையில்
எல்லாம் முடிந்தது
அவர் மூச்சும் , பேச்சும்
அதிலேயே முடிந்தது.......

ஆலயத்திரை கிழிந்து
வான்மேகம் இருண்டு
வான்மகனின் முடிவினை
வானத்துப்புறா வாழ்த்தொலிக்க
எல்லாம் முடிந்து
எல்லாம் நிறைந்தது

மேகம் கசிந்த நீரத் துளிகள்
மனுமகன் இறப்பை
மழைத்துளி வழியே
மண்ணுலகிற்கு எடுத்துரைக்க

அன்னை மனம் வழியே
வேதனை வாழ்
நெஞ்சுருவால் ஊடுருவ
எல்லாம் முடிந்தது
அந்தச் சிலுவையிலேயே
தேவமகன் உயிர் பிரிந்தது .....

**கவி கிறேஸ்**

# யூதாஸின் முத்தங்கள்

நாம் யூதாஸ்"களைத் தான்
அதிகம் நேசிக்கின்றோம்
யூதாசுகளோடு தான் எம்
நாட்களைக் கழிக்கின்றோம்

சிலுவைகளில் அறையப்படா
வரைக்கும் யூதாசுக்களை நாம்
கண்டுகொள்ள வாய்ப்புகள் இல்லை

காலங்களின் கடவைகளில்
கட்டி அணைத்துக் கஸ்டத்தில் உடன்
நின்றவர்களில் யாரா ஒரு
யூதாஸ் முறைமுகமாக இருக்க
அன்பு முத்தம் தரும்
சிலுவையை இங்கு
யாரோ யாருக்காகவோ
சுமக்கத்தான் செய்கின்றோம்.

முத்தம் இன்றி
சத்தம் இன்றி
சிலுவைகள்
பலர் சுமக்க
யூதாசுகள்
கூட்டத்தோடு
கூட்டமாக எம்முடனே
இருக்கின்றனர்.



**கல்கி**

# உயிர்ப்பின் நாயகன் உலகிக்கு வந்துவிட்டார்

திறந்தது கல்லறை விழந்தது
புது உலகு மறைந்தது காரிருள்
உதித்தது புது உதயம் தெளிந்தது
நம் இதயம்
மிளிர்ந்தது எங்கும் அன்பு

பாவம் அறியாப் பாமரன் பாரினில்
சுமந்தது சிலுவை ... தேகம்
எங்கிலும் காயம்
தோளில் கனத்த பாரம்
நம்மை மீட்கத் தன்னை இழந்தார்
நம் பாவம் போக்கத் தரணியில்
இறந்தார்

மாசற்ற இருதய ஆண்டவர்
மாசு கொண்ட மானிடர் நடுவே
சேற்றினில் மலர்ந்திட்ட
செந்தாமரை போல் நறுமணம் வீச
வந்து பிறந்தார்
உயிருடன் வந்தவர் உயிரற்றுப்
போனார் மானிடர் நம் பாவக்
கறையால்...

தன்னுயிர் பிரிந்தவர் மூன்றாம் நாள்
உயிருடன் எழுந்தார்...
புது ஒளி கொடுத்தார்
உயிர்ப்பின் நாயகன்
இயேசு ஆண்டவர்
மீண்டும் பிறந்ததால் பூமி
புத்துயிர் பெற்றது...

இனி உயிர்ப்பின் நாயகன்
உலகிற்கு வந்ததால் உலகினில்
என்றுமே பாவங்கள் இல்லையே

தேவனின் கருணை என்றும்
தேவையே நமக்கு ... இயேசுவை
நம்பினால் இனி மற்றவை எதற்கு??

மரணத்தை வெற்றி
கொண்டார் இயேசு... மீண்டும்
உயிர்த்தெழுந்தார் ... உலகத்தை
வென்று விட்டார் உன்னதர்
உயிர்பெற்றே எழுந்து விட்டார்..

**அ.ஜான்கவி**

# வலிகளின் விளைநிலமானது இயேசுவின் திருமேனி எதற்காக?

வலிகளின் விளைநிலமானது
இயேசுவின் திருமேனி எதற்காக?

ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு
மறு கன்னத்தையும் மறுப்பின்றி
வழங்கினார் இயேசு எதற்காக?
மாற்றங்களை மனித மனங்களில்
அணையாத ஒளியால் ஏற்றி
அவலங்கள் அனைத்தையும்
அகலச் செய்வதற்காக

விடியலின் ஒளியொன்று
விடிவினை இலக்காய்க் கொண்டு
இடறி விழுந்திட்டபோதும்
தடுமாறினாலும் தடம்மாறாமல்
மீண்டுமெழுந்து மும்முறையும்
பயணத்தைத் தொடர்ந்ததே எதற்காக
பாருலக பாவச்சுமையை தாங்குவதற்காக

இரக்கமற்ற இதயங்களால்
இகழப்பட்டு ஆடைகள் களையப்பட்டு
பரிகாச அடையாளமாய்
செந்நிறப் போர்வை ஒன்று போர்த்தப்பட்டு

ஜெருசலேம் வீதிகளில் இழுக்கப்பட்டாரே
எம் அகந்தைகளும் ஆணவமும்
அடியோடு களையப்படுவதற்காக

முட்களில் கிரீடமொன்று
சிரசில் அடிக்கப்பட்டு செந்நீர்
அருவியாக விழிகளில் விழுந்து
வேதனையின் வடுக்கள்
இதயத்தைப் பிளக்க
தனிமரமாய்த் தவித்து
ஏங்கி நின்றது எதற்காக
தரணியை மீட்கத் தந்தையின் திருவுளம்
நிறைவேற்ற வந்தேன் இவ்வுலகில்
என்பதற்காக

வேதனையின் வெடிப்புக்களிலும் இயேசு
தன்னை இகழ்ந்து வதைத்தோர்க்காய்
தந்தையிடம் இரக்கமுடன் இறைஞ்சி
மன்னிப்பு வழங்குமென மன்றாடியது
எதற்காக
மாற்றங்கள் காண முடியாத
உன் வாழ்வை மீண்டுமொருமுறை
மறுசீர் செய்வதற்காக

வார்த்தைகளில் சொல்ல முடியாத
வலிகளை அனுபவித்தபோதும்
எல்லாம் நிறைவேறிற்றென்று
இறுதியாய் உரக்கச் சொல்லி
சிலுவையில் உயிர்நீத்ததுடன்
உயிர்ப்பின் மாட்சியை உலகிற்கு
வெளிப்படுத்தி சான்றானாரே
எதற்காக
உம் மீட்பை உறுதிப்படுத்தி
மகிழ்வடையச் செய்வதற்காக

**சேரருபன் மேரி அருள்மதி**



# உண்மைகளை உரைக்கும் உயிர்ப்பு விழா

உண்மைகளை உரைப்பது தான் ஊடகம் - இன்று
தின்மைகளால் வாடுவதெங்கள் தாயகம்
நன்மை தரும் இயேசு மறை போதகம் - இங்கு
வளர்ச்சிபெற்றால் ஒளிந்து போகும் மாபாதகம்

சத்தியத்தின் வழிமுறைகள் விளங்கவே - இயேசு
எத்திசையும் சென்று பணியாற்றினார்
நித்தியத்தின் மேன்மையினை விளக்கவே - தந்தையின்
சித்தமதை நனவாக்கி வாழ்ந்து காட்டினார்

துச்சமெனத் தன்னுயிரை மதித்தவர் - மனித
மீட்புக்காக அனைத்தையுமே - துறந்தவர்
அச்சமது தான் அகற்றித் தந்தையின் - உயர்
பட்சமதாய் தம் பணியைத் தொடர்ந்தவர்

துன்பங்களை இறுதிவரை சுமந்தவர் - இடையில்
தப்பியோடும் மனநிலையை மறுத்தவர்
உறுதியுடன் கல்வாரியைக் கடந்தவர் - தமது
இறுதி மூச்சையும் மக்களுக்காக ஈந்தவர்

சாவு என்னும் பலிக்களத்தை நிறைவேற்றி - இயேசு
வாழ்வு என்னும் அருங்கொடையை வழங்கினார்
இறைவல்லமையால் கல்லறையைத் தளர்த்தினார் - உயிர்ப்பின்
உண்மையினை உலகமெங்கும் வெளிப்படுத்தினார்

திருமுழுக்கால் கிறிஸ்தவராக அழைக்கவே - அவர்
திருச்சபையைத் தோற்றுவித்தார் - திருமறை தழைக்கவே
உன்னதரின் உயர் பணிக்காய் உழைக்கவே - எங்கும்
அன்னவரைத் தேர்ந்தெடுத்தார் அரும் பணியாற்றவே

உண்மையை எதிர்த்த வரை - தூதுரைக்க அனுப்பினார் - தினம்
தம்மையே ஏற்பவர்க்கு புதிய வாழ்வு தருகிறார்
அதிகாரங்களை ஆணவத்தை அடியோடு அகற்றினார் - நற்செய்தி
தூதுவராக நம்மை எல்லாம் ஆக்கினார்.

**வன்னிவாழ் சூசைமுத்து**



# கார் மேகத்தின் கதிரொளி...



சாவை ஏற்றார் கிறிஸ்து
சிலுவைச் சாவை ஏற்றார்
மனித குலம் மண்ணில்
மீட்புப் பெறத் தன்னுயிரையே
தியாகம் செய்தார்...

இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட
கிறிஸ்து இனிமேல்
இறக்க மாட்டார்
அவர் சாவின் ஆட்சிக்கு
உட்பட்டவர் அல்ல
என்கின்றது வேதாகமம் ...

வரலாற்றில் பல நிகழ்வுகள்
ஆண்டாண்டு காலம்
தொடர்ந்து வந்தாலும்
வரலாற்றை வியக்க வைத்தவர்
நம் உயிர்ப்பின் நாயகன்
இயேசுக் கிறிஸ்து...

இயேசு பட்ட பாடுகளை
நீயும் பட இளைஞனே
எழுந்து வா
அவரைப் போல நீயும்
சிலுவைப் பயணம்
நடந்து செல்ல
விரைந்து வா ...
கத்திக்குத்து, சண்டை சச்சரவுகள்,
வாள்வெட்டுக்கள் ,
கற்பழிப்புகள், வன்முறைகள்
இவற்றைக் கொண்டு செல்லும்
மனிதனே நீ ஒரு முறை
சிலுவையினை
சுமந்து பார் அத்தனைக்கும்
முற்றுப்புள்ளி வைப்பாய் ...

வெற்றுக் கல்லறை வாசலில் ஒளிக்கீற்றாய்
அவர் உயிரோடு எழுந்த அடையாளம்... இனி
மரிக்க மாட்டார் மானிட மகன் இயேசு கிறிஸ்து

நம்பிக்கை இல்லாத மானிடர்க்கு இயேசுவின்
உயிர்ப்பு நம்பிக்கை தரும் மருந்து... ஏற்றுக்
கொள்ள இயலாத மானிடர்க்கு இயேசுவின்
சிலுவை மரணம் எதையும் தாங்கிடும்
பக்குவம் தரும் அழைப்பு ...

வெறுமையான கல்லறை
வாழ்வில் உணர்த்தும் பாடம்
என்னவென்றால்... இந்த வையகத்து
வாழ்வையும் கடந்து செல்லும்
அனுபவத்தை நீயும் பெற்றுக் கொள்
என்பதைத்தான் ...

உயிர்ப்பு என்பது கொண்டாட்டம்... அது
ஆண்டவரின் வெற்றியின்
நாள்...கிறிஸ்துவின் துன்பங்களை
நாமும் தோளில் சுமந்தால் மாபெரும்
வெற்றிக்கனி நம் நா ருசிக்கக்
கிடைக்கும்...

கிறிஸ்துவின் உயிர்ப்பின் போது
இலங்கையில் அன்று பல
உயிர்கள் காவு கொள்ளப்பட்டன...
அவர்கள் இறக்கவில்லை
இறைமகன் கிறிஸ்துவுடன் இன்றும்
என்றும் வாழும் உயிர்கள் ...

வீரம் மிகுந்த உடல்
விவேகம் நிறைந்த உடல் பாரச்
சிலுவையின் சுமையால் பலமுறை
நிலத்தில் விழுந்த உடல்...

இரக்கமற்ற அரக்கர்களால்
காயப்பட்ட உடல் ...
அநியாய மனிதர்களால்
அவஸ்தைப் பட்ட உடல்..
ஆணிகள் ஏற்றப்பட்ட இயேசுவின்
பொன்னுடல் ...

என் விருப்பம் அல்ல
உம் விருப்பப்படியே ஆகட்டும்...
தந்தையின் விருப்பத்தை
நிறைவேற்றிய மகன்...
இன்று எத்தனை இளைஞர்கள்
இயேசுவைப் போல் வாழ்கிறார்கள்?
என்று சிந்திக்கத் தோன்றுகிறது மனது...

ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு
கன்னத்தையும் காட்டு என்று மனிதருக்கு
எடுத்துரைத்த இயேசுவின் கன்னத்தில்
எத்தனை அறைதல்கள் ...
கைகளிலும் கால்களிலும் ஆணியின்
அறைதல்கள்... இத்தனையும் கடந்து
வெற்றி பெற்றார் ஆண்டவர் இயேசு ...

நான் உங்களுக்குச் செய்வதைப் போல
நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யுங்கள்...
இது இறைமகனின் வார்த்தை அல்ல
நாம் வாழும் அன்பு வாழ்க்கைக்கான
அர்த்தமும் கூட ...

முள்முடி தரித்த தலையில் குருதியின்
அலங்கரிப்புகளே அதிகம்... இன்று தம்
சிரத்தை அழகுப்படுத்தும் இளைஞர்கள்
மத்தியில் எத்தனை பேர் முள்முடிகளைச்
சிரமதில் தரிக்கத் தயார்???

சிலுவைப் பாதையில் பயணித்த
இறைமகன் எமக்காய்
இரத்தம் சிந்தினார், இளைஞனே
சிலுவைப்பாதை உனக்கு வேண்டாம்...
நல்ல பாதையில் நீ நடந்தாலே போதும்
நீயும் இளைஞன் இயேசுவாய்
மாறிடலாம்...

ஒளியற்று இருளாய் கிடக்கும்
கார்மேகம் சூழ்ந்த வானம் போல
ஒளியின்றி இருளாய் கிடக்கும்
இதயங்களிலும் கார்மேகத்தின் கதிர்
ஒளியாய் இயேசு வந்து உதிக்கட்டும்.

**கொன்சன்ரையின் டயான்**

# மீண்டும் ஒருமுறை...

உம் நாமம் சொல்லி இருவர் மூவர்
கூடியிருக்கையில் அவ்விடம் நோக்கி
விரைந்து வருவேன்: உரைத்தது நீரே
வரைந்து வாரும் மனிதனாய் மீண்டும்

காரிருள் நடுவினிலே
ஜோதியாய் மனுவானவரே
கலங்கமற்ற எம்மவர் அவலம் கேட்டு
விரைந்து வாரும் மனிதனாய் மீண்டும்


கல்லான நெஞ்சுடனே
இறுகியே உள்ள எம் தெசம்
சதையாலான உம் இதயம் கண்டிட
விரைந்து வாரும் மனிதனாய் மீண்டும்

ஊருக்கு ஊர் சாதியென்றோம்
கோவிலும் கட்டி சாதியென்றோம்
சாதியென உடைந்த உள்ளங்களை
உயர்த்திட விரைந்தே வாரும்

போசில் மரித்து மருத்துப் போன இப்பூமி
இன்று போதையிலே மாய்வதனால்
மயக்கம் தெளிய வேண்டுகின்றோம்
எம் இளையோரைப் பாதுகாத்திட
விரைந்து வாரும்

பதுக்கல், சுரண்டல், ஒழித்திடவே
பல கையூட்டு, கரங்களும்
கறை நீக்கிடவே
காவி உடுத்தும் எம்மவர்கள்
நீரே கதியென வாழ்ந்திடவே
விரைந்து வாரும்

விண்செல்லும் வீடுகளும்
மண்ணாலான குடிசை
ஓலைகளும்
முக்கியமல்ல நீர் உயிர்க்க
உடைந்த உள்ளமே
தேடுகின்றாய்
உள்ளங்கள் உயர்ந்திடவே
மீண்டும் ஒருமுறை
மனிதனாவாய்..



**அருட்பணி. அல்பிரட் அருண்ராஜ், அ.ம.தி**



# புது விடியல் பிறந்தது

மண்ணகம் மீட்க விண்ணகம்
இருந்து மானிட மகன் மனு வடிவம்
கொண்டார்...

மானிடர்களின் பாவம் கழுவ
தன்னுயிரை இன்னுயிராய்
ஈந்தார்

மரணத்தை ஏற்றுக் கொண்டார்
அதுவும் சிலுவை மரணத்தை
ஏற்றுக் கொண்டார்...

கனமான பாரத்தைத் தன் தோளிலே
சுமந்து சென்றார் எனக்காக மூன்று
முறை மண்ணிலே விழுந்தார்

பாவக்கறை நீக்கித் தன் உயிரைத்
தியாகம் செய்தவர் சாவின்
விளிம்பில் நின்று வெற்றி
கொண்டார் இயேசு



தேகம் மண்ணில் விழ நெற்றியின்
இருந்து வழிந்த வியர்வை
மண்ணை முத்தமிட மீண்டும்
எழுந்து வெற்றி நடை போட்டார்...
வெற்றியின் நாயகன் இயேசுக்
கிறிஸ்து...

பாவிகளை மன்னித்தார் ஆவிகளை
விரட்டி அடித்தார் ஏழைகள் வாழ்வில்
ஒளி ஏற்றினார்... சாவை வென்ற
சரித்திரநாயகன்...

நீதியின் நாயகனுக்கு மரண
தண்டனை விதிக்கப்பட்டது நேரிய
பாதையில் அவர் சென்றதால் அவர்
மீது சிலுவை மரம் சுமத்தப்பட்டது...

கூரிய ஆயுதங்கள் அவர் உடலை
கீறிக் கிழித்தது சிந்தியது இரத்தம்
அல்ல அது எம் பாவக்கறை கழுவும்
பரிசுத்த நீர்...

மரணித்தார் மூன்றாம் நாள்
உயிர்த்தெழுந்தார் மரணத்தின்
சூழ்ச்சிதனைக் கச்சிதமாய் வெற்றி
கொண்டார் இயேசு...

கல்லறை திறந்தது புது விடியல்
பிறந்தது இயேசு மீண்டும்
உயிர்த்தெழுந்தார் அவர் அதே
மனிதனாய்

**கொ.பிலிஸ்ரன்ராஜ்**




**வாழ்வளிக்கும் வார்த்தைகள்**

இந்நாள்வரை இறைமகன் இயேசு சிலுவையில் தொங்கி உரைத்த இறுதித் திருமொழிகள் ஏழும், மனிதராய் அவர் போதித்த மீட்புத்திட்ட மறையுண்மைகளுக்கு நிறைவேற்றமாயும், முன்னடையாளம் தருவதாயும் இருந்தன என்பதைத் தியான ஒளியில் மிளிர்விக்கும் ஒரு சிறு செபமே இது, செபத்தின் வழியாய் இயேசுவிடம் கெஞ்சிக் கேட்கும் ஒரே ஒரு மன்றாட்டு பேரின்ப வாழ்வு. தனிமையில், தூய ஆவியானவரின் அருள்துணையோடு செபிப்பவர் பெறுகின்ற கல்வாரி அனுபவப் பாடங்களைத் தன் வாழ்வில் புகுத்தி வாழ்வாக்கிடத் தேவைப்படும் அருளையும், பலத்தையும் வழங்கும் அருள் வாய்க்காலாய் இந்தச் செபம் இருக்கும்.

**முதல் வாக்கியம்**

மூன்று ஆணிகளுள் மூன்று மணி நேரமாய் சிலுவைதனில் தொங்கி, உயிரைத் துளித்-துளியாய் விட்டுக் கொண்டிருக்கும் இயேசுவே! வாழ்க் கையின் இறுதி நேரம் நெருங்கி வருகையிலே, கொடியோர் கூடி நகைத்துச் சிரிக்கையிலே, பரமனே! உன் னையே பகைத்தோரை, அடித்தோரை, சிலுவையில் அறைந்தோரை, அத்தனைக்கும் காரணராம் ஆளுநரை. ஆயக் குருவை, யூதப் பெரியோரை, படைவீரர்களை மனக்கண் முன் கொ-ண்டு வந்து நிறுத்தி, நிதானித்து, சிந்தித்து, குறைபட்ட மனிதனென்று அவர்கள் கொடு-த்த சிலுவையை, ஆணிகளை, முள்முடியை, கசையடிகளை, பழிப்புரைகளை, தெய்வ நிந்தனைகளை முழு மனத்துடன் ஏற்று, இப்பாவங்களை அவர்கள் மேல் சுமத்தாதிரு-க்க, உம் திருப்பாடுகளால் நிந்தனை செய்து தந்தையிடம் மன்னிப்புக் கேட்டீர். “தந்தை-யே! இவர்களை மன்னியும். ஏனெனில், தாங்கள் செய்வது என்னவென்று இவர்களு-க்குத் தெரியவில்லை” (லூக் 23:34) என்றீர்.

**இரண்டாவது வாக்கியம்**

உம் திரு உடைகளைப் படைவீரர் தங்களுக்குள் பகிர்வதைப் பார்த்தீர். தொட் டோர்க்கெல்லாம் நலமருளும் அருள் வாய்க்காலாம் உமதருள் அங்கி யாருக்கென்றறி-ய சீட்டுப் போடுவதையும் பார்த்தீர். கோபுர முகட்டில் உம்மைச் சோதித்துப் பின்வாங்கிய அலகை. தற்போது பின்வாங்காமல், தருணம் நோக்கிக் காத்திருந்து, வானகத் தந்தை யால் கைவிடப்பட்ட இந்த நேரத்திலே, மீட்க வந்த உமது அன்பு மக்களையே தூண்டி விட்டு உம்மைப் பழித்துரைக்கவும், ‘பிறரைக் காப்பாற்றியவனே, உன்னையே நீ இப்போது காப்பாற்று. இறை மகனாய் நீ இருந்தால் சிலுவையினின்று இறங்கி வா! நம்புவோம்’ என்று இடித் துரைக்கவும் செய்து, சோதிக்கும் அலகையை நான் எப்போதும் வென்ற-ிட வேண்டும் என உணரச் செய்துள்ளீர், அவ்வாறே, எவ்வகைச் சோதனைக்கும் நான் ஒரு போதும் இடம்கொடாதிருக்க, இடைவிடாது செபியுங்கள் என்று மொழிந்தீரே! அவ மானத்-தின் அகோரப் பிடியில் துடிதுடிக்கும் வேளையிலும் செபித்தீர். கைவிட்ட தந்தையிடம் முறை-யிட் டீர். “என் இறைவா! என் இறைவா! ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்….” என்றே அழுதீர்.

**மூன்றாவது வாக்கியம்**

நடுவர் நடுவில், நல்லோர் வலப்புறம், தீயோர் இடப்புறம் நடுத்தீர்வைக் காட்சி யன்றோ, கல்வாரியில் யாம் காண்பது, உலகில் உம்மை அறிந்தும் ஏற்காதோர், தன் கதி உணராதோர், இவர்களின் உருவாம் தீய கள்வன், இடப்புறச் சிலுவையில் தொங்கி, உம்மைப் பழித்துரைத்தான். நீர் கடவுள் இல்லை என்றான். வலப்புறக் கள்வனோ, தான் பாவி என்று ஏற்று, திருந்தி வாழும் நல்லோர் சார்பில் சிலுவையில் தொங்கி, தீய கள்வ-னைத் திருத்துவதையும். நடுவராகிய நீர் இறையாட்சி உரிமை பெற்று வரும் நாளில், பாவியாகியத் தன்னை நினைவு கூரும்படி உம்மிடம் கெஞ்சுவதையும் கேட்டு மனது உருகினீர்.

மனம் மாறி வரும் பாவியை அரவணைத்து ஏற்கும் வானகத் தந்தையின் ஒரே நேசத் திருமகன் இயேசுவே! சிலுவையிலே உயிர் துறக்கும் வேளையிலும் கண்டெடுத்-ததோர் ஆட்டினால், வானகமே மகிழ்வதைக் காட்ட, சிலுவையிலே, மரிக்கும் தரு ணத்-திலே, திருந்திய கள்வனுக்கு நிபந்தனை ஏதும் விதிக்காமல் “இன்றே, நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய்” என்று அவனுக்கு ஆசீர் அளித்தீர், மனம் மாறி வரும் பாவிகளு-க்கு மன்னிப்பும், பேரின்ப வாழ்வும் உண்டு. இந்த நம்பிக்கைக்குச் சிலுவையிலே புதுப்ப-ிறப்பளித்தீர். கள்வனாய் அறையப்பட்டான். நல்லவனாய் உயிர் நீத்தான். வான் வீட்டில் உம்மோடு வாழும் வாய்ப்பும் பெற்றான். இன்னதென்று அறியாமல், இறைத் திருவுளம் தெரியாமல், உம்மைச் சிலுவையில் அறைந்த படை வீரர்களும், சிலுவைக் காட்சியைத் தியானிக்கும் நாங்களும் உணரும் விதத்தில், இறையருளால் வருகின்ற மனமாற்றம-தைத் தடுத்திட எவராலும், எவ்வகைச் சக்தியாலும் இயலாது, என்ற உண்மையை வெளிப்படுத்தினீர்.

**நான்காவது வாக்கியம்**

‘பெற்றோருக்குச் செய்கடனெல்லாம் நேர்த்திக் கடனாய் ஆயிற்று’ என்று பெற் றோரை வீதியிலே தள்ளுகின்ற பரம்பரையை எதிர்த்தவரே! பெற்றோர் காப்பைக் கட்டளை-யாகத் தந்தவரே. இறைமகனே! சிலுவைக் காட்சியும், சீமோன் வாக்கும் வியாகுல வாளாய் இதயத்துள் பாய, எழுச்சியை, மாட்சியைச் சிலுவை வழியில் எதிர்பார்த்திருக்கும் வியாகுல அன்னை, எழுச்சி அருளும் இறைமகன் நீரென, உம்மைப் பின்தொடர்ந்து பணிவிடை புரிந்தோர் வீழ்த்தப்பட்ட உம்மைக் கண்டு கண்ணீர் வடிப்பதைக் காணும் அன்னை. பாடுகள் படுத்தும் பாதகர் பாரில் பார்ப்பார் வீழ்ச்சி பாரார் மீட்சி அழிவுறும் படை யினர் அறியாச் செயலது அளிக்கும் வேதனை தாங்கிடும் அன்னை.

பிறப்பிலும், இறப்பிலும் நிறைவேறி வருகின்ற இறைவாக்கனைத்தையும் நம்பிய அன்னை இத் திருப்பாடுகள் இறைவாக்கொளியில் எதிர்பார்த் திருந்த நம்பிக்கை அன்னை. உனவாய், உயிராய் சிலுவையில் தொங்கி உரைக்கும் சொற்களின் தெய்வீகத்தன்மை உணர்ந்து, உள்ளத்தில் பதித்து உம்மைப் பார்த்துத் தவிக்கும் பாசத்-தின் அன்னை. பாடுகள் படும் உம் இதயத்தின் இதயமாய் இணைந்தது அன்னையின் இதயம். எனவே, தலைமுறைக்கெல்லாம் தாயாய் வாழ்ந்து தரணியை மீட்கத் திருவுளம் கொண்டீர்.

உம் தூய உறைவிடம் தேடிய யோவான் உம் சொல் கேட்ட-ார் வந்தார், பார்த்தார், கல்வாரிக் குன்றில் கழுமரச் சிலுவையில் தலை சாய்த்திருக்கும் பலியுணவாக. உம் தூய நெஞ்சத்தின் மீதினில் சாய்ந்து கலங்கிய இதயத்தின் ஒலியினைக் கேட்ட அன்புச் சீடரின் அருகில் அன்னை, அன்புச் சீடரை அன்னைக்குக் காட்டினீர். அம்மா!.. இதோ உம் மகன்! யோவானே இதோ உன் தாய்!” என்றீர். அந்நேரமே அச்சீ-டர் மறுப்பேதுமின்றி உம் அன்னையைத் தம் அன்னையாய் ஏற்றார், ஆதரித்தார்.

பெற்ற தாயை விட்டுப் பிரியுமுன் பெற்றவருக்குத் தேறுதலும், ஆறுதலும் அளித்த அருள் பெரும் குருவே, கன்னியின் மகனே! பெற்றே-ாரைக் காப்பதில் முன்மாதிரி அருளிய இறைமகனே! சீடருள் சீடராய், சிதறிய சீடரைத் தேடிச் சேர்த்து, தாழ்ச்சியின் சிகரமாய், திரு அவைத் தாயாய், திருமறையின் வளர்ப்புப் பணியிலே ஈடுபட்டு என்றும் எம் அன்னையாய் இன்றும் எம்மோடு வாழச் செய்துள்ளீர்,

**ஐந்தாவது வாக்கியம்**

இயேசுவே! வற்றாத ஜீவ நீரூற்றே! வறண்ட பாலை நிலமும் அதிசயமாய் நீர் சுரக்கச் செய்பவரே! மீட்பருளும் தண்ணீரை அனை வரும் பருக, வருக, வருக எனப் பெருங்குரல் எழுப்பி அழைப்பவரே! பருகுவோர்உள்ளத்தின் ஆழத்திலிருந்து, உயிர் தரும் தண்ணீர்வற்றாத நீரோடை யாய் பெருக்கெடுத்தோடச் செய்யும் அருட்சுனை ஆனவரே! சமாரியப் பெண் உம்மிடம் உயிருள்ள தண்ணீர் கேட்டார். தாய்மைப்படு-த்தி அருள் வாழ்வில் இணைக்கும் உம் தூய இதயத்தின் ஆவியே, அந்த உயிருள்ள தண்ணீர் என அறிந்து நம்பினார்.

கன்னித்தாய், அன்புச்சீடர், பணிவிடை புரிந்து சிலுவையடியில் நிற்கும் பெ-ண்கள், திருந்திய கள்வன்… இவர்கள் போல் எல்லாரும் உம்மைச் சிலுவையில் பார்த்து, உம் தூய இதயம் சிந்தப் போகும் இறுதித் துளித் தண்ணீரைப் பருகி, ஆவியான வரின் அருள் மழையில் நனைந்து. உம் மீட்பின் சாட்சிகளாய் உலகெங்கும் செல்ல வேண்டும் என்ற தாகம். தணியாத தாகமாய், உமக்குள் இருப்பதை வெளிப்படுத்தி,
“தாகமாய் இருக்கிறது” என்றீர்.

**ஆறாவது வாக்கியம்**

மீட்படையத் தாகிப்போரைத் தேடித் தேடி, தாகம் தாகமெனக் கதறும் என் மீட்பராம் இயேசுவே! எல்லார்க்கும் எல்லாம் ஆனவரே! நாடுவோர் இதயத்துள் தங்கி, பசி தாகம் தீர்ப்பவரே! கைநெகிழ்ந்தார் தந்தை. அதை அறிந்தான் சாத்தான் தந்தையைப் பழிக்க! மீட்புத் திட்டத்தைக் கைகழுவத் திட்ட மிட்டு, உம்மைத் தாகத்தால் துடிதுடித்துச் சாகும்படி வதைத்தான். நீரோ தந்தை அன்பில் நிலைத்தே நின்றீர்! தணியாத் தாகத்-திலும் தந்தை அன்பில் நிலைத்து நிற்க அனைவருக்கும் ஊக்கம் தந்தீர். சிலுவையில் அதற்கு முன்மாதிரி அளித்தீர். அம்மா! சிலுவையின் அடியில் நின்று வியாகுலங்களை நிறைக்கும் ஆறுதலின் அம்மா! விண்ணவரை மன்னவராய்ப் போற்றி, உம் திரு உதிர-த்தால் வளர்த்த தியாகத் திரு உருவே அம்மா! இறை மகனை ஏழையாய், ஏழ்மை யின் பிறப்பிடமாய் எளிய குடிலில் நன்மனமுடன் பெற்றெடுத்த இறைவனின் தாயே! படுகொ-லைக்குப் பயந்தோடி, எகிப்தில் அவரை அகதியாய் காப்பாற்றி வளர்த்த விவேகம் நிறை-ந்த அம்மா!

நாசரேத்தில் நம்பிக்கை நாயகனாய் நடத்தி, ஆலயத்தில் பெரியோர்க்குப் போ-திக்கும் சிறுவன் யேசுவாக்கி, எத்திக்கும் எதிர்பார்க்கும் மெசியாவாய் வழியனுப்பி, நற்செ-சய்திப் பணி வாழ்வில் அவருக்குத் துணை நின்று, நற்செய்தி போதிக்கும் யாவர்க்கும் துணை நிற்கும் வரம் பெற்ற அம்மா! மெசியாவின் பாடுகளை இறைவாக்கு ஒளியில் எதிர்பார்த்த ஞானத்தின் இருப்பிடமான அம்மா!



கொலைக்களக் கல்வாரியைத் தம் தூய இரத்தத்-தால் புனிதப்படுத்தி, அவமானச் சின்னமாம் சிலுவையை மீட்புச் சின்ன சிலுவையாக்கத் தாகித்த இயேசு. கைவ-ிடப்பட்டவராக, சிலுவையில் தாகிக் கும் இந்த நேரத்தில், அம்மா! நீரும் கைவிடப்பட்ட வராக, மகனுக்குத் தாகசாந்-தி கொடுக்க இயலாதவராக, சிலுவையின் அடியில் நின்று, அனைவருக்கும் இன்று அடைக்கலம் அருளும் அம்மா!
நீரும், பெண் சீடர் குழுவும் கண்ணீர் வடிக்கும் பரிதாபக் கோலம் கண்டு, ‘என் சீடர் என்பதற்காக, இவர்களுள் ஒரு-வருக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவனும் கை-ம்மாறு பெறுவான்’ என்றுரைத்த இயேசுவுக்குத் தண்ணீர் கொடுப்பதற்காக ஓடினான் படைவீரன் ஒருவன் கடற்பஞ்சைக் கையிலெடுத்தான், ஈசோப்புத் தண்டில் அதைப் பொ-ருத்தினான். புளிப்பேறியத் திராட்சை இரசத்தில் அதைத் தோய்த்தான் உயர்த்தினான். இயேசுவே! அதை உம் நாவில் வைத்தான். கைம்மாறு பெற்றவனானான். இயேசுவே, நீரோ
அதைச் சுவைத்தீர். “எல்லாம் நிறை வேறிற்று” என்றீர்.

**ஏழாவது வாக்கியம்**

இப்போது விடப்போகும் மூச்சே இறுதி மூச்சு என்றுணரும் இயேசுவே! ‘வான-கம் விட்டேன், வையகம் வந்தேன். இறை-மனித இணைப்பாளராய் செயற்பட்டேன். தந்தையே! உலகில் நீர் தேர்ந்து, என்னிடம் ஒப்படைத்தவர்களைத் தீயோனிடமிருந்து விடுவித்துப் பாதுகாத்தேன். என்னைப் பற்றி எழுதப்பட்டுள்ள இறைவாக்குகளை நிறை-றவேற்றினேன். கசப்புக் கலமான பாடுகளின் பாத்திரத்தில், இறுதித் துளிவரை பருகிவ-ிட்டேன். மீட்புத் திட்டத்தை முழுமையாய் நிறைவேற்றிவிட்டேன்’- இவ்வாறு தந்தையிடம் பேசி, துடிப்பினை நிறுத்தித் துளையுறப் போகும் உம் தூய இதயத்தைத் திடப்படுத்தினீர். இமைக்கும் இமைகளை அகலத் திறந்தீர். மங்கும் விழிகளால் சிலுவை முன்னால் கண்ணீர் வடிக்கும் அனைவரையும் கண்டீர், கருணை கொண்டீர், ‘நீரே மெசியா, நீரே இறைவன், நீரே இறைமகன், நீரே இறைவனிடமிருந்து வந்தவர் எனப் போற்று வோரின் இதயக் குரலைக் கேட்டீர், அனைவரையும் ஒன்றுபடுத்தி, புது வாழ்வருளும் உன்னதக் குருவாய் ஒளிர்வதற்காக, வானகத் தந்தையின் திருத் தூயகத்தில் நுழையும் நேரம் வந்தபோது. இமைக்கும் இமைகளை இறுகமூடி இறுதி மூச்சை இழுத்து, ‘தந்-தயே! உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்’ என்றே உரக்கக் கூவி உயிர் துறந்தீர்.

மாசற்ற செம்மறியான இயேசுவே! பாஸ்காப் பெருவிழாவில் பலியாகி உம் தூய இரத்தத்தால் மனுக்குலப் பாவக் கறை கழுவி உயர்ந்த உன்னதக் குருவாய் வானகத் தந்தையின் திருத்தூயகத்தில் நுழையும் புனிதமான நேரமதை, தேவாலயத் தூயாதித் தூயகத் திரை தானாய் அதிசயமாய்க் கிழிந்து திறந்து அறிவிக்கச் செய்தீர்,

# உலக அரசியலும் சர்வதேச சட்ட நியாயங்களும்

## யேசுவின் உயிர்ப்பு நாளில் சிந்திக்க வேண்டிய தமிழ்த்தரப்பு பலஸ்தீன விவகாரம் தரம் செய்தி

உலக அரசியல் ஒழுங்கு குழப்பமடைந்து வல்லரசு நாடுகள் தடுமாறிக் கொண்டிருக்கும் சூழலில் ஈழத்தமிழர்கள் தமது அரசியல் விடுதலை குறித்த நிலைப்பாடுகளை சர்வதேச அரங்கில் நிலைபெறச் செய்யவதற்கான வழிமுறைகள் உண்டு. ஆனால் தமிழ்த்தரப்பு குறிப்பாக தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் தேர்தல் வியூகங்களில் மாத்திரமே கவனம் செலுத்துகின்றன.

அரசியல் விழிப்புணர்வை மக்களிடம் ஊட்ட வேண்டிய தமிழ்த்தேசியக் கட்சிகள் தங்கள் வாக்கு வங்கிகளுக்குரிய சலுகை மற்றும் நிவாரண அரசியலில் ஈடுபடுகின்றன.

யேசுநாதர் பிறந்த ஜெருசலேம் நகரை மையப்படுத்தி நடைபெற்று வரும் இஸ்ரேல் - கமாஸ் போர் பல உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தி வரும் நிலை யில் அதனைத் தடுப்பதற்குச் சர்வதேசச் சட்டங்களை சர்வதேச நீதிமன்றம் பயன்படுத்தி வருகின்றது. அதே சர்வதேச சட்ட முறைகள் ஈழத்தமிழர்களுக்கும் பொருந்தும். ஆனால் அது பற்றி எந்தவொரு ஆராய்வும் இல்லாமல் தமிழ்த்தரப்பின் அரசியல் மந்த மடைந்துள்ளது.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப் பற்றிச் சட்ட விளக்கம் கோரியுள்ள சர்வதேச நீதிமன்றம், விவாதங் களை நடத்தியுள்ளது. விளக்கம் கோரும் இந்த விவாதாத்திற்குச் சுமார் நாற்பதுக்கும் அதிகமான நாடுகள் பலஸ்தீனத்துக்கு ஆதரவாகச் செயற்படுகின்றன.

அமெரிக்கா உட்பட பத்து நாடுகள் மாத்திரமே இஸ்ரேலுக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் கருத்திடுகின்றன.

பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி ஆரம்பித்த இந்த விவாதம் பெப்ரவரி 26 ஆம் திகதி வரை நடைபெற்றது.

பதினைந்து நீதிபதிகள் கொண்ட குழு இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு, மக்கள் தொகை அமைப்பு, ஜெருசலேம் புனித நகரத்தின் தன்மை, பலஸ்தீன மரபுவழி பிரதேசங்களில் குடியேற்றம் செய்யும் இஸ்ரேலின் அடிப்படை நோக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பாரபட்சமான சட்டம் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய சட்டப் பொருள் விளக்கங்களை ஆராய்கின்றனர்.

இது தொடர்பாக ஐ.நா.வுக்கு நீதிபதிகள் பதிலளிக்க சுமார் ஆறு மாதங்கள் எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

ஐ.நா பொதுச் சபையின் இந்த பொருள்கோடல் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அமெரிக்கா இது அரசியல் விவகாரம் என்றும் ஆகவே ஆக்கிரமிப்புப் பற்றிய சட்ட விளக்கம் கோர இயலாது என்றும் வியாக்கியானம் செய்துள்ளது.

குறிப்பாகப் பேசசுவார்த்தைகள் மூலம் இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரத்துக்குத் தீர்வு காண முடியும் என்ற கருத்தை அமெரிக்கா வெளிப்படுத்தியிருக்கிறது.

அத்துடன் ஐ.நா.சட்ட விளக்கம் கோருவதற்கு இஸ்ரேலியப் பிரதமர் நெத்தன்யாகுவும் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார். ஐ.நாவின் கோரிக்கையின் பிரகாரம் சர்வதேச நீதிமன்றத்திடம் கோரப்பட்டுள்ள சட்ட விளக்கத்துக்கு ஒத்துழைக்க முடியாது என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

பலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புத் தொடர்பாக விளக்கம் கோரப்பட்டால் சர்வதேச நியமங்களின் பிரகாரம் பின்வரும் மூன்று விடயங்கள் வெளிப்படும்.

ஒன்று-- பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமை, இரண்டாவது-- சட்டவிரோத ஆகிரமிப்புக்கு எதிராகச் செயற்படுதல், மூன்றாவது - திட்டமிடப்பட்டுப் பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட மக்களை மீண்டும் அந்தப் பிரதேங்களில் குடியமர்த்த அனுமதித்தல்.

ஆகவே இந்த மூன்று விடயங்களுக்குமான சட்டரீதியான பொருள் விளக்கங்களைச் சர்வதேச நீதிமன்றம் வழங்குமானால், பலஸ்தீனப் பிரதேசத்தில் 1967 இல் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள், அந்தப் பிரதேசங்களில் மீண்டும் குடியமர்த்தப்பட வேண்டிய கட்டயாம் ஏற்படும்.

ஆகவே இது பலஸ்தீனம் தமது பிரதேசம் என்ற இஸ்ரேலின் கொள்கைக்குப் பெரும் ஆபத்தாக அமையும். அதன் காரணமாகவே இது அரசியல் விவகாரம் எனவும் பேச்சுவார்த்தைகளின் ஊடாகவே தீர்வு காண முடியும் என்ற கருத்தையும் அமெரிக்கா முன்வைக்கிறது என்பது வெளிப்படை.

சட்டரீதியான பொருள்கோடல் வெளிவந்தால் 1967 இல் இருந்து கைப்பற்றப்பட்ட பலஸ்தீனப் பிரதேசங்களை மீளவும் ஒப்படைக்க வேண்டிய ஆபத்து நேரலாம் என்பதாலேயே இஸ்ரேலியப் பிரதமரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்திருக்கிறார் என்பது பகிரங்கமாகிறது.

இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரத்துக்கு ‘இரு அரசு’ என்பதுதான் தீர்வு என்று அமெரிக்கா கூறியுள்ளது. ஆனாலும் பேச்சுவார்த்தையின் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என அமெரிக்கா அழுத்தம் கொடுப்பதற்கு, சர்வதேச நீதிமன்றத்தில் ஐ.நா சட்ட விளக்கம் கோரியமையே பிரதான காரணமாகும்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்றால் இஸ்ரேல் 1967 இல் இருந்து கைப்பற்றிய பலஸ்தீனப் பகுதிகளை மீளவும் ஒப்படைக்காமல் தற்போது பலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் மிகக் குறைந்தளவிலான பிரதேசங்களுடன் மாத்திரம் தனி அரசாக அங்கீகரித்து விடலாம் என்றும் அமெரிக்கா கருதக்கூடும்.

ஆனாலும் அமெரிக்கா அவ்வாறு கருதுவதைக்கூட இஸ்ரேல் கடுமையாக எதிர்க்கிறது. ஏனெனில் இரு அரசு தீர்வு என்பதை ஏற்க இஸ்ரேல் மறுக்கிறது.

அதாவது பலஸ்தீனத்தைத் தனி அரசாக அங்கீகரிக்க இஸ்ரேல் ஒருபோதும் விரும்பாது. இப் பின்னணியில்தான் சர்வதேச நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்று வரும் சட்டப் பொருள்கோடல் தொடர்பான விவாதம் இஸ்ரேலுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்திருக்கிறது.

காசாவில் நடப்பது இனஅழிப்பு என்று கடந்த டிசம்பர் மாதம் தென்னாபிரிக்கா சமர்பித்திருந்த மனுவை விசாரணை செய்த சர்வதேச நீதிமன்றம் ஒரு மாதத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிட்டிருந்த நிலையில், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி ஐ.நா.பொதுச்



அ.நிக்ஸன்

சபை ஐம்பத்தியிரண்டு நாடுகளுடன் இஸ்ரேலின் பலஸ்தீனம் மீதான ஆக்கிரமிப்புப் பற்றிய சட்டப் பொருள்கோடலை கோரிய விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

பலஸ்தீன விவகாரம் இவ்வாறு இருக்கும் நிலை யில் உலக அரசியல் நடைமுறைகளையும் சர்வதேச சட்ட நுட்பங்களையும் ஆராய்ந்து ஈழத்தமிழர் விவகாரத்தில் சர்வதேச ரீதியாக நகர்த்தக் கூடிய அணுகுமுறைகளைக் கையாளாமல், வெறுமனே பதவிப் போட்டிகளும் கட்சியின் யாப்புச் சரியா பிழையா என்று இலங்கை ஒற்றையாட்சி நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்வது போன்ற தேவையற்ற விடயங்களில் தமிழ்த்தரப்புக் கவனம் செலுத்தி வருகின்றமை ஆரோக்கியமானதல்ல.

பலஸ்தீனப் பிரதேசங்களில் 1967 இல் இஸ்ரேல் மேற்கொண்ட ஆக்கிரமிப்புப் பற்றிய சட்டத்தன்மைகளை ஆராய்ந்து சட்ட விளக்கம் தருமாறு சர்வதேச நீதிமன்றத்திடம் ஐ.நா கோரியது போன்று, இலங்கை ஒற்றையாட்சி அரசும் 1941 இல் கிழக்கு மாகாணம் கல்லோயாவில் சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்தில் இன்று வரை மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்புப் பற்றிய சட்ட விளக்கங்களைக் கோரினால், நிச்சியமாக அங்கு குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் வெளியேற வேண்டிய நிலைமை உருவாகும்.

ஆனால் ஐ.நா.பொதுச் சபையின் ஆதரவுடன் சர்வதேச நீதிமன்றத்திடம் அவ்வாறான சட்ட விளக்கம் கோரக்கூடிய அளவுக்கு ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு இல்லை. பலமும் இல்லை.

ஏனெனில் 2009 இற்குப் பின்னரான சூழலில் அமெரிக்க - இந்திய அரசுகளின் செல்லப் பிள்ளைகளாக தமிழ்த்தேசியக் கட்சிகள் மாறியிருப்பதே அந்த ஆதரவு இன்மைக்கான பிரதான காரணமாகும்.

1970 களில் இருந்து தமிழர் அரசியல் சூழலில் தமிழ்ச் சட்டத்தரணிகள் தங்களுக்குரிய சொந்த நலன்கள் மற்றும் தமிழ் இன அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையியிலேயே ஈழத்தமிழ் அரசியல் விவகாரங்களையும் கையாண்டிருந்திருக்கின்றனர்.

அன்றில் இருந்து இன்றுவரை தமிழ்ச் சட்டத்தரணிகள் பலரின் செயற்பாடுகள் இவ்வாறான தாகவே அமைந்திருக்கின்றன.

வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் ஈழத்தமிழர்களுக்குச் சாதகமாக இருக்கக்கூடிய சர்வதேசச் சட்ட நுட்பங்களை அறிந்துகொள்ள முற்படுவதில்லை.

மாறாகச் சர்வதேச நீதிகோரி ஆர்ப்பாட் டங்களையும் பேராணிகளையும் நடத்துகின்றனர். ஆனால் சர்வதேச நீதிக்கு ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் போதுமானதல்ல. சா்வதேச சட்ட நுட்பங்களை ஆராய்வதே அவசியமானது.

காசாவில் நடப்பது இனஅழிப்பு என்று தென்னாபிரிகா சர்வதேச நீதிமன்றத்தில் வழங்குத் தாக்குதல் செய்துள்ளது. மியன்மாரில் ரோகின்ய முஸ்லிம்கள் இனஅழிப்புக்கு உள்ளாகின்றனர் என்று காம்பிய என்ற ஒரு சிறிய நாடுதான் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

ஆனால் இது போன்ற அணுகுமுறைகள் எதுவும் தமிழ்த்தரப்பிடம் இல்லை. ஜெனீவா மனித உரிமைச் சபையில் இலங்கை விவகாரம் தொடர்பாகப் பேசப்படுகின்ற விடயங்களை ஐககிய நாடுகள் சபைக்குப் பாரப்படுத்த வேண்டிய சட்டப் பொறிமுறை தொடர்பான விளங்கங்கள் அல்லது அது பற்றி அறியக்கூடிய முறைமைகள் குறித்து ஆராய வேண்டும் என்ற ஆர்வமும் இல்லை. இதுவரை ஆராயப்படவுமில்லை.

இப்படியான ஒரு பின்னணியில்தான் வடக்குக் கிழக்குத் தாயகப் பிரதேசங்களில் செயற் படும் தமிழ்த்தேசியக் கட்சிகள் வெறுமனே தேர்தல் வியூகங் களை மாத்திரம் வகுத்துக் கொண்டிருக்கின்றன.

தத்தமது கட்சிகளுக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, தனிப்பட்ட முறை யில் ஒவ்வொருவரும் தமக்குரிய நாடாளுமன்றக் கதி ரைகளைத் தக்க வைக்கும் உத்திகள் மற்றும் மாகாண சபை, உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தத்தமது கட்சிகளின் ஆசனங்களை அதிகரித்தல் என்று பேரம் பேசுதல்களுடன் ஈழத்தமிழர் அரசியல் சுருங்கிவிட்டது.

ஆனால் இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பு சர்வதேச அரங்கில் இருந்து ஈழத்தமிழர் விவகாரத்தை முற்றாக நீக்கம் செய்து அதனை இலங்கைத்தீவின் உள்ளக விவகாரமாக மாற்றக்கூடிய அத்தனை நகர்வுகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா மனித உரிமைச் சபை அமர்வில் இலங்கை தொடர்பான விடயம் ஆராயப்படவுள்ளது.

அதனை முறியடிக்க ஏறத்தாள நாற்பத்தியாறு பக்கங்களில் நல்லிணக்கப் பொறிமுறைச் செயற்பாடுகள் குறிப்பாகத் தமிழர் தாயகப் பகுதிகளில் இலங்கை அரசு என்ற கட்டமைப்பின் செயற்பாடுகள் பற்றிய இரண்டு அறிக்கைகள் ஜெனீவாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

சென்ற டிசம்பர் மாதமும் சென்ற ஜனவரி மாதமும் இரு அறிக்கைகளும் தனித் தனியாக அனுப்பப்பட்டிருக்கின்றன

ஆனால் இலங்கை அரசின் இந்த இரு அறிக்கைகளும் உண்மைத் தன்மையற்றது என்று விளக்கமளித்துத் தமிழர் பகுதிகளில் இலங்கை அரசு திட்டமிட்டு மேற்கொண்டு வரும் பௌத்த மயமாக்கல் பற்றிய ஆவணங்கள் எதுவும் தமிழ்த்தரப்பினா




# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

(ஆனந்தன் - கிளிநொச்சி)

**கே: 'எல்லோரும் ஒரு குலம் எல்லாரும் ஓரினம் எல்லாரும் இலங்கை மக்கள், எல்லாரும் ஒரு நிறம், எல்லாரும் இந்நாட்டு மன்னர் நாம்' என ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க மகாகவி பாரதியின் கூற்றினைத் தமது பாணியில் குறிப்பிட்டு இவ்வாண்டின் கொள்கைப் பிரகடன உரையை சில வாரங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் ஆற்றியிருக்கின்றார். என்னவாக இருக்குமோ?**

ப: மனந்திறந்து உண்மையைச் சொன்னால் ஆனந்தன் நாம் வீதியில் பயணிக்கும்போது நாய் வந்தால் அது எப்பக்கம் திரும்பும் என்பதை எவரும் அறியார்! அதுபோலதான் இந்த மனிசனின் செயற்பாடுகளும் இருக்கும்! கண்டே பிடிக்கேலாது ஆனந்தன்! ராஜதந்திரி'!

(வினுஷா - யாழ்ப்பாணம்)

**கேள்வி: மக்களிடமிருந்து வரிப் பணம் அறவிடத் தொடங்கியிருகின்றது அரசு! இவ்வாண்டின் ஜனாதிபதி தேர்தல் நாடாளுமன்றத் தேர்தல்களுக்காக பத்து பில்லியன் ஒதுக்கப் பட்டுள்ளது. இதன் பெறுமதி என்னவென்று தெரியுமா? 01 பில்லியன் 1000 மில்லியன். அவ்வாறாயின் 10000 மில்லியன். பத்து மில்லியன் ஒரு கோடி ரூபாவாகும். அப்படி யென்றால் 1000 கோடி ரூபா ஜனாதிபதி நாடாளுமன்றத் தேர்தல்களுக்காக இவ்வாண்டு 2024 இல் செலவு செய்யப்பட இருக்கின்றது! இவ்வாறு சென்றால் இந்நாடு உய்யுமா?**

ப: நாடு இருக்கின்ற நிலையில் போகின்ற போக்கில் உய்யலாம்! ஆனால் இப்போதைக்கு உருப்படாது!

(றெஜி - யாழ்ப்பாணம்)

**கேள்வி: வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் நாடாளுமன்ற உரையிலும் ஜனாதிபதி ரணில் அவர்கள் அபிவிருத்தி பற்றிப் பேசுகின்றாரே தவிர அரசியல் தீர்வு குறித்து சிறிதும் அலட்டிக் கொள்ளவில்லை! சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தவிர வேறு எவரும் ஜனாதிபதியின் இந்நிலைப்பாடு குறித்து கேள்வி எழுப்பியதாகவோ அல்லது கருத்துக்கள் கூறியதாகவோ தெரியவில்லை! நமது இலங்கை ஆயர்மன்றமும் இதுபற்றி எதுவும் கூறவில்லையே! ஏன்?**

ப: கூறியது கூறலாகிவிடும் என்பதால் கூறவில்லைப் போலும்!

(அமலா - யாழ்ப்பாணம்)

**கேள்வி: 'என் கேள்விக்கென்ன பதில்' 100 ஆவது பகுதியை எட்ட இருக்கின்றது. விசேட நிகழ்வுகள் வைப்பதாக ஏதும் ஏற்பாடு செய்கின்றீர்களா?**

ப: அமலா விசேட நிகழ்வுகள் வைப்பதாக எண்ணம் இதுவரை இல்லை. அப்படி வைத்தால் இசை நிகழ்ச்சியாகத் தான் இருக்கும். அதுவும் முற்றவெளியில் தான் இடம்பெறும்! பனையேறிப் பழகிக்கொள்ளுங்கள் பயன்படும்!

(ராணிரூபவ் யாழ்ப்பாணம்)

**கேள்வி: தங்களின் கேள்வி பதில் பகுதிக்காகக் தவம் கிடக்கின்றோம்? கொஞ்சம் அதிகமாக எழுதினால் என்ன?**

ப: ஒன்று என் கேள்விக்கென்ன பதிலுக்காகத் தவம் கிடந்து இத்தவத்தை தவக்காலத் தவமாக ஆக்கிவிடாதீர்கள் ராணி! இரண்டு 'ஒரு சொல்போதுமென்றால் ஏன் இருசொற்களைச் செலவு செய்கின்றாய்!' என்றொரு அறிஞரின் கூற்று இருக் கின்றது. அதனால் தான் வார்த்தைகளில் கொஞ்சம் கஞ்சத்தனம்.

(துவம் - கொழும்பு)

**கேள்வி: "அரசு எம்மை ஏமாற்றினால் விளைவுகள் விபரீதமாகும்!" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். இது பழைய செய்தியா புதிய செய்தியா?**

ப:அது 'விளையாட்டுச் செய்தி'!

(விது - கிளிநொச்சி)

**கேள்வி: தமிழரசுக் கட்சி அக்கட்சியின் புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கு ஒன்று கூடியதில் மூவர் போட்டியிட்டுபின்னர் ஒருவர் வாக்களிப்பின் மூலம் தெரிவானர். அவ்வாக்களிப்பு ஜனநாயக ரீதியில் இடம்பெறவில்லையென எனத்தெரிவித்து கட்சியின் ஒரு பகுதியினர் நீதிமன்றத்தைநாடியிருக்கின்றனர்! இவர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?** ●

## இறுதி வாக்கியங்கள்

( 10ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாணிகளுள் முடங்கி, மூன்று மணி நேரமாய் நீர் உரைத்ததோ உயிர்தரும் ஏழே ஏழு வாக்கியங்கள். வேதனை தாங்கும் வேளையிலும், அளவோடு பேசி, அறிவுக்கு விருந்தாகி, உயிருக்கு ஊட்டமாகி, மறை உண்மைகளின் விளக்கமாகி, அழியா வாழ்வின் அமுதாகி, எம்மை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி, உம் இரண்டாம் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கச் செய்துள்ளீர்.

வாழ்வின் சிலுவைகளை அனுதினமும் சுமந்து, முழு மனத்துடனே சிலுவை வழியில் உம்மைப் பின் தொடர்ந்து, உலகில் உம் திருவுள மதனை நிறைவேற்றி, உம் மீட்பின் பலன்களையாம் பெற்று. இறுதியில் உம்மைப் போல் எம் ஆன்மாவை விண்ணகத் தந்தையின் கையில் ஒப்படைத்து, உமது பேரின்ப வாழ்வில் வந்து சேர வரம் அருள வேண்டும் என்று ஆ ஆணி பதிந்த உம் திருப்பாதங்களில் எம் முகம் பதித்தே வேண்டுகின்றோம். ஆமென்.

## பாதுகாவலன் மறை அறிவுப் போட்டி - 2024

பாதுகாவலன் பத்திரிகையில் பாதுகாவலன் மறை அறிவுப் போட்டியொன்றை இவ்வாண்டில் ஆரம்பிக்கின்றோம். இப்பகுதியில் கத்தோலிக்க மறை அறிவை மேம்படுத்தும் நோக்கோடு திரு அவையின் படிப்பினைகள், சூழமைவியல், இறையியல் சிந்தனைகள் மற்றும் வத்திக்கான், உலகத் தலத் திருஅவை, கத்தோலிக்க செய்திகளை மையப்படுத்தி இவ்வினாவிடைப் பகுதி அமைகின்றது.

ஒவ்வொரு மாதமும் ஆரம்பத்தில் வெளிவரும் பாதுகாவலன் பத்திரிகையில் முன்னைய வினாக்களுக்கான விடைகள் வெளியிடப்படும். தெரிவு செய்யப்படும் முதன்மை வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் உயிர்ப்புப் பெருவிழாவின் போதும், கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவின் போதும் வழங்கப்படும்.

பத்திரிகை வெளியீட்டுத் திகதியிலிருந்து 20 நாட்களுக்குள் விடைகளைக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**" பாதுகாவலன் மறை அறிவுப்போட்டி - 2024"**
**360, புனித வளன் கத்தோலிக்க அச்சகம்**
**பிரதான வீதி, யாழ்ப்பாணம் - ஆசிரியர்**

66.தற்போதைய யாழ் ஆயரின் குருத்துவப் பொன்விழா கொண்டாடப்
படும் நாள் எது?
67.திருக்குடும்ப இணைக் குருக்கள் (Holy Family Priests Associates) அமைப்பின் உலகலாவிய தற்போதைய தலைவர் யார்?
68. கூட்டொருங்கியக்க திரு அவை பற்றிய ஆயர் மாமன்றத்தின் இரண்டாம் கட்ட அமர்வு இவ்வருடம் எந்த மாதத்தில் நடைபெற உள்ளது?
69. பத்திமா அன்னை காட்சி கொடுத்த நாடு எது?
70. விவிலியத்தில் புதிய ஏற்பாட்டின் இறைவாக்கினராகக் கருதப் படுபவர் யார்?
71. யாழ் மறைமாவட்ட புனித யோசவ்வாஸ் திருத்தலம் எங்கு அமைந்துள்ளது?
72. திரு அவையின் நான்கு பண்புகளும் எவை?
73. மருதமடுத்திருத்தல திருச்சொரூபம் ஆரம்பத்தில் எந்த இடத்தில் கோவில் கொண்டு வைக்கப்பட்டது?
74. திருத்தந்தை பிரான்சிசினால் எழுதப்பட்ட இரண்டு திருமுகங்கள் தருக?
75. திருத்தந்தையர்கள் ஐவரின் பெயஉகளைத் தருக?
76. புனித லூக்காவினால் எழுதப்பட்டதாக கருதப்படும் இரு நூல்கள் தருக?
77. புனித லூக்காவின் பரம்பரைத் தொழில் என்ன?
78. புதிதாக ஆயர்கள் நியமனம் பெற்ற இலங்கையின் இரண்டு மறைமாவட்டங்களும் எவை?
79. கத்தோலிக்க திருஅவையின் நம்பிக்கையின் உண்மைகள் எத்தனை?
80. திருஅவையின் இரண்டு பெண் 'திருஅவையின் வல்லுனர்கள்' (Doctor of the Church) தருக?
81. புனித டென்போஸ்கோ எந்த நாட்டைச் சார்ந்தவர்?
82. மிகக் குறுகியகாலம் திருத்தந்தையாக இருந்தவர் யார்?
83. மன்னார் வேதசாட்சிகள் யாரால் கொல்லப்பட்டார்கள்?
84. யாழ் பேராலயம் யாருடைய காலத்தில் கட்டிமுடிக்கப்பட்டது?
85. இலங்கை ஆயர்கள் மன்றத்தின் தற்போதைய தலைவர் யார்?
86. திருஅவைத் தந்தையர்கள் மூவரின் பெயர்களைத் தருக?
87. திரு அவையில் பயன்படுத்தப்படும் தூய தைலங்கள் எவை?
88. கிறிஸ்து குருத்துவத்தை ஏற்படுத்திய நாள் எது?
89. திருவழிபாட்டுக் காலங்கள் எவை?
90. யாழ் புனித வளனார் கத்தோலிக்க வளாக இயக்குனர் யார்?
91. டிடாக்கே என்றால் என்ன?
92. இந்திய மண்ணில் வேதசாட்சியான திருத்தூதர் எனக் கருதப்படுபவர் யார்? 93. பாஸ்காத்திரி யாரைக் குறித்துக் காட்டுகிறது?
94. இலங்கையில் நெஸ்ரோறிய கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததாகக் காருதப்படும் ஆண்டு என்ன?
95. ஒல்லாந்தர்கள் பின்பற்றிய மதம் எது? 96.புனித யோசவ்வாஸ் எங்கே இறந்தார்? 97.மறுமலர்ச்சிக் காலம் எது?
98.கொதிக்கும் எண்ணைக்குள் போடப்பட்ட திருத்தூதர் யார்?
99.இலங்கைக் கிறிஸ்தவர்களின் கலாபனைக் காலம் எது?
100. ஆண்டவரே அறையப்பட்ட நல்ல கள்வனின் பெயர் என்ன?

தொகுப்பு: அருட்பணி தே[illegible]தாஸ்


நினைவழியா நினைவுகளுடன்...

1ம் ஆண்டு நினைவு



அமரர்
அந்தோனி சேவியர்
பிறப்பு – 26.07.1947
இறப்பு – 19.03.2023



அமரர்
கி. யூட்அமலி சுபோதினி
பிறப்பு – 13.09.1978
இறப்பு – 05.03.2023

'சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்'

சென்யூட்-இளவாலை

28ம் ஆண்டு நினைவு



அமரர்
கபிரியேல் சூசை
பிறப்பு –14.05.1925
இறப்பு – 04.03.1996

'உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன்இறப்பினும் வாழ்வான்'
(யோவான் 11:25)

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

AD-15


## மலர்ச்சி பெறும்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

**முடிவுரை**

தவக்காலத்தில் பல்வேறு ஆற்றுகை முறைகளும் பாரம்பரியங்களைப் பேணுவதும் வரவேற்கப் படத்தக்கவை ஆனால் அவை அனைத்தும் அதற்குரிய பத்தியையும் ஒழுக்கத்தினையும் பின்பற்றுபவையாக விசேடமாக இறைமகன் இயேசுவின் பாடுகள் மரணத்தின் கனதியை நாம் உணர்ந்து மனம் திருந்துவதற்கான உறுதிப்பாட்டினை வழங்குபவையாக இருப்பது மட்டுமன்றி பங்குச் சமூகங்களில் ஒற்றுமையை அதிகரித்து பாகுபாடுகளற்று ஒன்றுபட்டு இயங்கும் பங்கு ஆன்மீகத்தினை மேம்படுத்துபவையாகவும் அமைவதுடன் ஆடம்பரமற்று எளிமையாகவும் அதிக நிதிச் செலவுகளை கொண்டவையாக இல்லாமலும் அமைதல் பொருத்தமானது

# பெருமான் இயேசுவின் சிலுவைக் கொலையில் இருட்டடிக்கப்பட்ட யதார்த்தங்கள்



இயேசு சிலுவையில் அறையப்பட்டுக் கொலை செய்யப்பட்டது பழைய ஏற்பாட்டில் மோசஸ் தொடக்கம், இறைவாக்கினர்கள், திருமுழுக்கு யோவான் ஈறாக ஆற்றிய சேவைகள், நீதி ஒழுக்க நெறிகளை மக்கள் ஏற்றுக் கொள்ளாமையின் நீட்சியாகப் பார்க்கப்பட வேண்டும். ஒடுக்கப்பட்டவர்களின் முழு மனித மீட்புப் பற்றிய ஆழ்ந்த கொள்கையை ஏற்படுத்திய ஆசியாவின் இயேசுவைக் கொலை செய்த உரோம, கிரேக்க தத்துவ இயல், இவற்றைக் கருத்தில் கொள்ளாது இயேசு மனித குலத்தின் பாவங்களுக்கு மட்டும் உயிரைக் கொடுத்தார் என்ற கூறுகட்டல் இயேசுவின் வாழ்வு, போதனையின் உள்ளீட்டை சரிவரப் புரிந்து கொள்ளாத நிலை என்றே கூற முடியும். இதனால் இயேசு கொணர்ந்த உண்மையான பாதையைத் தவறவிடலாம்.

**தனிமனித - சமூக விடுதலை நோக்கி:**

தனிமனித விடுதலையை நோக்குகையில் பாவம், சுயநலத்திலிருந்து மீட்பு மட்டுமல்ல...... தம்மிடம் திருமுழுக்குப் பெறப் புறப்பட்டு வந்த மக்கள் கூட்டத்தைக் கண்டு யோவான்: "மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்" என்ற தொனி ( லூக் - 3:8) பாவத்திற்கான மனம் திரும்புதல் என்று மட்டும் பொருள்படாது என்பது தெளிவு.

**சமூக விடுதலை நோக்கி:**

சமூகம் ஒட்டுமொத்தமாகப் பூரண விடுதலை நோக்கி நகர்த்தப்பட வேண்டும். மனிதன் தனது அன்றாட வாழ்வில் மனிதத்தை இழந்து, ஆளுமையை இழந்து, நாளாந்த உணவு இன்றி எலும்பும் தோலுமாக, நடைப்பிணமாக வாழ்கையில் அவன்/அவள் பாவத்திலிருந்து விடுபட்டால் மட்டும் போதாது. சமூக அடக்கு முறையில் இருந்தும் விடுவிக்கப்பட வேண்டும். இவ்விரண்டும் ஒன்றோடொன்று செருகிப்போயுள்ளது.. சமூகமாற்றத்திற்குத் தனிமனித மனந்திரும்பலும், தனிமனித வளர்ச்சிக்கு அநீத சமூக அமைப்புகளும் மாறவேண்டும். "ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டவரை விடுதலை செய்து அனுப்பவும்" அவர் என்னை அனுப்பியுள்ளார் (லூக். 4 : 18-19) அதாவது இறைத்தந்தை மக்களைப் பல தளைகளில் இருந்து விடுவிப்பதற்கு இயேசுவை இவ்வுலகுக்கு அனுப்பியுள்ளார் என்பது தெளிவாகிறது.

**அநீத அமைப்புகளில் தாக்கப்படும் தொழிலாளிகள் பற்றி புரட்சிக் கவிஞன் பாரதியின் கவிதையில்.....**

**......பொழுது தோறும்**
**புனலுக்கும், அனலுக்கும், சேற்றினிற்கும்,**
**கக்கும் விஷப்பாம்பினுக்கும், பிலத்தினுக்கும்,**
**கடும் பசிக்கும், இடையறா நோய்களுக்கும்**
**பலியாகிக் கால் கைகள் உடல்கள் சித்தம்**
**பச்சை இரத்தம் பரிமாறி இந்நாட்டை**
**சலியாத வருவாயும் உடையதாகத் தந்தவர்?'**

**பெண் தொழிலாளிகள் வதைகள் பற்றி:**

**"கற்பிழந்து, மலை பிளந்து, கனிகள் வெட்டி,**
**கருவி எல்லாம் செய்து தந்த கைதான் யார் கை?**
**பொற்றுகளை கடல்முத்தை, மணிக்குலத்தைப்**
**போய் எடுக்க மூச்செவரின் மூச்சு?"**

அநீத சமூக அமைப்புகளின் தாக்கத்தால் சிக்குண்டவர்களை நாம் மறக்க முடியாது. இயேசு இவர்களில் தொடர்ந்து குருதி சிந்திக் கொண்டிருக்கிறார். 2000 வருடங்களுக்கு முன்னதாகச் சிந்தப்பட்ட குருதி இன்னும் காயவில்லை. எனவே பின்வரும் உண்மைகளை அல்லது கருத்துப் பரப்புரையை ஏற்றுக்கொள்ள உந்தப்படுகிறோம்.

**கொலை செய்தவர்கள் யார்?**

எனவே இயேசுவைக் கொலை செய்தவர்கள் யார்? அக்காலத்தின் மரபு வழிவந்த அரசுரிமையும், பணமும், பொருளும், ஆட்சியும், செல்வந்தர்களும், பலம் பொருந்திய குருக்களும்.

- நோய் துன்பம் மரணம் ஒடுக்கப்பட்ட ஏழைகளுக்கும் என்கின்ற அமைப்பை மாற்றி அமைத்தபடியாலும்,
- துன்புறுபவர்களின் பக்கம் இருந்து சமாதானத்திற்கு செயற்பட்ட படியாலும்,
- தலைமைக் குருக்களையும், ரோமப் பேரரசையும் இறைவனுக்குச் சமமாகக் கருதுகின்றதை முரணானது என்று எடுத்துக் கூறியதாலும்
- உயர்வு தாழ்வு, மத இன மொழி வேறுபாடுகள் அற்ற உண்மையான சமத்துவத்தின் பேரரசை உருவாக்க செயற்பட்டதாலும் இயேசு கொலை செய்யப்பட்டார்,
- உரோமப் போர் வீரர்கள், அல்லது யூதரோ அல்ல. மாறாக மக்களைத் துன்புறுத்திய உரோமைப் பேரரசும் துன்பத்தை இரட்டிப்பாக்கிய தேவாலயத்துக்கு வரி வசூலித்துக் கடவுளின் பெயரால் பேரரசுக்காக மக்களைத் துன்புறுத்திய குருக்களின் நிர்வாகமும் இயேசுவின் கொலையாளிகள்.

"செலட்ஸ்" என்ற தீவிரவாதிகளின் இயக்கம் இயேசுவின் காலத்தில் உரோமைப் பேரரசையும், சமய அடக்குமுறைகளையும் தகர்ப்பதற்கு பறபாஸ், யூதாஸ் போன்ற தீவிரவாதிகள் இயங்கியதும், ஆனால் இயேசு ஆன்மீக விடுதலை, முழுமனித விடுதலை இரண்டையும் இணைத்து வன்செயலைத் தவிர்த்ததினால் இத் தீவிரவாதிகள் இயேசுவை விட்டு விலகியது மட்டுமல்ல இயேசுவைக் கொலை செய்வதற்கும் அவர்கள் யூதக் குருக்களால் பயன்படுத்தப்பட்டார்கள். இயேசுவின் கண்களாலும், உள்ளத்தாலும் பார்ப்பதற்குப் பதிலாக, மேற்கூறிய குறுகிய கண் பார்வைக்குள் சிறைப்பட்டிருக்காமல் சிந்திக்க இத்தவக்காலம் உதவுவதாக.

**அருட்பணி அமிர்த யெயபசேகரம்**

நீதிக்காகச் செயல்களும்
விடுதலைக்கான போராட்ட ஈடுபாடுகளும்
நற்செய்தி அறிவிப்புப் பணியின்
பாங்கான பாகங்களே ஆகும்

அடிமை செய்யும் ஒவ்வோர்
அமைப்பினின்றும்
மனித சமுதாயத்தை விடுவிப்பது
திருச்சபையின் கடமையும்
நற்செய்திப் பணியுமாகும்

*உலக ஆயர் பேரவை*
*உரோமை 1971*

---

# தேசியவாதத்தின் தாக்கம்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.



யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

*(10.09.2023 பத்திரிகையின் இன் தொடர்ச்சி)*

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

**கத்தோலிக்க பாடசாலைகளை மதித்த பிரதமர்கள்**

கத்தோலிக்க பாடசாலைகளுக்கு அவர்களது பிள்ளைகளை அனுப்ப வேண்டாம் என்றும் பௌத்த பாடசாலைக்கு அனுப்பும்படியும் பௌத்த பிக்குகள் பண்டாரநாயக்கா தம்பதியை ஏற்கெனவே கோரியிருந்த போது, தமது பிள்ளைகளின் விடயத்தில் அவர்களைத் தலையிட வேண்டாம் என்று எச்சரித்தனர் பிரதமரும் அவர் பாரியா ரும். எனவே இருவரும் கத்தோலிக்க பாடசாலை களின் இன்றியமையாத தன்மையை ஏற்றுக் கொண்டிருந்ததில் இருந்து, தேசிய மயமாக்குதல் தமதுசொந்த விருப்பத்திற்கு அப்பாற்பட்ட, பௌத்த பிக்குகள் மற்றும் தம்மாலேயே தூண்டப்பட்ட இனவாதத்திற்கு அடிபணிந்து, நாட்டின் குழப் பங்களை அமைதிப்படுத்துவதற்காக அநியாய மாக எடுக்கப்பட்ட முடிவென்பது தெளிவாகியது. தேசியமயமாக்கல் காரணமாக மதநிறுவனப் பாடசாலைகளில் அவரவர் மதச் சூழ்நிலை இல்லாமல் போவதால், நல்லொழுக்க நெறியில் மாணவர்கள் வளர முடியாததோர் அபாயம் தவிர்க்க முடியாது என்பது, அன்று இவரால் தூரத்தில் நோக்கப்பட்ட இன்று நிலவும் பயங்கரமாகும்.

**பௌத்த ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகள்**

தேசிய கல்விக் கொள்கை அமுலாக்கம், பாடசாலை அதிபர்களையோ, முகாமையாளர்களையோ, அந்தந்த மதங்களுக்குப் பொறுப்பான மறைப்பணித் தலைவர்களையோ கலந்தாலோசித்து எடுக்கப்பட்ட முடிவல்ல. மாறாக இது அனைத்திலங்கைப் பௌத்த ஆணைக்குழு அறிக்கையின் சிபார்சினாலும் வற்புறுத்தலினாலும் எடுக்கப்பட்ட முடிவாகும்.

இவ்வறிக்கையின் பிரதானமான சிபார்சுகள் பின்வருமாறு: ஐரோப்பிய மறைபரப்பாளர்களை வெளியேற்றுதல். நாட்டினுள் அவர்கள் உட்புகத் தடை விதித்தல். பொது விடுமுறைத் தினத்தைச் சனி, ஞாயிறு தினத்தில் இருந்து போயா தினத்திற்கும் அதற்கு முதல் நாளிற்கும் மாற்றி அமைத்தல் (அகில உலக வர்த்தக முரண்பாடுகள் காரணமாக 1971இல் மீண்டும் முன் பிருந்தபடி மாற்றப்பட்டது). அரசு நிதி உதவி பெறும் எல்லா இரண்டாம், மூன்றாம் தரப் பாடசாலைகளைச் சுவீகரித்தல். சமய நிறுவனங்களின் சொத்துக்களுக்கு வரிஅறவிடுதல் மூலம் கட்டுப் படுத்துதல். கிறிஸ்தவ சமய அமைப்புக்களின் மத மாற்ற முயற்சிகள் யாவற்றையும் தடைசெய்து கட்டுப்படுத்தல். இது வரை கிறிஸ்தவர்களாக இருந்த அனைத்து அரசியல் தலைமைகள், அரச, தனியார், மற்றும் இராணுவ அமைப்புக்களின் தலைமைகளை மாற்றி அவ்விடங்களைப் பௌத்த மதத்தினரால் நிரப்புதல். மக்களின் நாட்டுப்பற்றையும் தேசிய உணர்வையும் மழுங்கடிக்கக் கூடிய உரோமைத் திருச்சபைக்கும் பாப்பரசருக்கும் பிரமாணிக்கமான அனைத்து அம்சங்களையும் இந்நாட்டில் இருந்து அகற்றுதல். கத்தோலிக்க துறவிகள் பாடசாலைகளில் கற்பிப்பதைத் தடைசெய்தல் போன்றவையாகும்.

**மறுப்பு அறிக்கைக்குப் பதிலில்லை**

இவ்வறிக்கைக்குத் தக்க மறுப்புப் பதில் கத்தோலிக்க பொதுநிலையினர் அமைப்புக்களின் சார்பில் தமது சமயத்தின் நிலைப்பாட்டை விளக்கி 1958இல் வெளியிடப்பட்டது. இலங்கைக் கத்தோலிக்க ஒன்றியத்தின் அறிக்கை மூலம் பௌத்த மதத்திற்கு நம்பிக்கைத் துரோகம் என்ற அறிக்கையின் தரவுகளும், தகவல்களும் சுட்டிக் காட்டப்பட்டன. ஆயினும் இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவின் படுகொலையின் பின்பு பிரதமராகிய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தேசியமயமாக்கலை மிகுந்த தீவிரத் துடன் அமுல்படுத்த முனைந்தார். (தொடரும்...)

# யாழ் மறைமாவட்ட பங்குகளின் விசேட நிதி சேகரிப்பு- 2023

| இல. | பங்கு | திருப் பாலத்துவ தினம் | பரிசுத்த வாரம் | இறை அழைத்தல் தினம் | பாப்பரசர் தினம் | சுதேச குருக்கள் தினம் | மறைபரப்பு ஞாயிறு தினம் | நல்லாயன் தினம் | கிறிஸ்மஸ் தினம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **யாழ்ப்பாண மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | பேராலயம் | 45,000.00 | 120,000.00 | 73,000.00 | 30,000.00 | 41,000.00 | 110,000.00 | 52,300.00 | 83,500.00 |
| 2. | குருநகர் | 26,000.00 | 90,000.00 | 30,000.00 | 25,000.00 | 20,000.00 | 88,000.00 | 83,150.00 | 60,000.00 |
| 3. | அடைக்கல அன்னை ஆலயம் | 11,300.00 | 19,600.00 | 42,330.00 | 3,000.00 | 38,820.00 | 35,030.00 | 25,000.00 | 21,900.00 |
| 4. | பாஷையூர் | 48,000.00 | 142,225.00 | 42,640.00 | 17,000.00 | 21,000.00 | 37,000.00 | 25,000.00 | 70,000.00 |
| 5. | நாவாந்துறை | 20,000.00 | 71,000.00 | 32,000.00 | 12,500.00 | 42,200.00 | 131,900.00 | 21,000.00 | 42,000.00 |
| 6. | அஞ்சனந்தாழ்வு | 4,100.00 | 7,800.00 | 1,540.00 | 3,140.00 | 4,070.00 | 5,080.00 | 4,870.00 | 5,720.00 |
| 7. | பண்டியன்தாழ்வு | 7,400.00 | 20,000.00 | 7,100.00 | 4,000.00 | - | 7,180.00 | 6,650.00 | 14,000.00 |
| 8. | கொழும்புத்துறை | 17,000.00 | 15,000.00 | 17,000.00 | 11,000.00 | 15,000.00 | 12,000.00 | 12,000.00 | 15,000.00 |
| 9. | கொய்யாத்தோட்டம் | 8,160.00 | 6,000.00 | 7,120.00 | 5,000.00 | 5,120.00 | 21,200.00 | 6,300.00 | 5,300.00 |
| 10. | திருநெல்வேலி | 4,040.00 | 7,460.00 | 5,070.00 | 3,115.00 | 9,560.00 | 3,050.00 | 2,340.00 | 5,290.00 |
| 11. | கோப்பாய் | 11,550.00 | 68,100.00 | 7,200.00 | 5,440.00 | 10,725.00 | 12,910.00 | 5,100.00 | 15,550.00 |
| 12. | சுண்டிக்குளி | 19,025.00 | 35,245.00 | 19,490.00 | 7,680.00 | 21,150.00 | 17,960.00 | 8,200.00 | 12,550.00 |
| 13. | நல்லூர் | 5,600.00 | 11,200.00 | 5,000.00 | 5,700.00 | - | 2,670.00 | 4,280.00 | 6,105.00 |
| 14. | மணியந்தோட்டம் | 12,150.00 | 24,000.00 | 9,200.00 | 9,500.00 | 8,260.00 | 17,200.00 | 7,030.00 | 18,200.00 |
| 15. | திரேசாள் ஆலயம்-றக்கா வீதி | 10,500.00 | 18,000.00 | 5,350.00 | 5,200.00 | 9,500.00 | 12,000.00 | 8,000.00 | 6,450.00 |
| | **தீவக மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | மண்டைதீவு | 15,820.00 | 30,800.00 | 9,400.00 | 10,500.00 | 10,200.00 | 11,280.00 | 8,480.00 | 17,473.00 |
| 2. | கரம்பன் | 5,000.00 | 5,000.00 | 6,000.00 | 4,000.00 | 4,000.00 | 6,000.00 | 4,800.00 | 6,000.00 |
| 3. | நாரந்தனை | 3,000.00 | 10,000.00 | 5,000.00 | 3,500.00 | 3,500.00 | 38,000.00 | 3,000.00 | 4,000.00 |
| 4. | ஊர்காவற்துறை | 29,600.00 | 45,600.00 | 26,000.00 | 10,000.00 | 23,000.00 | 76,600.00 | 16,200.00 | 23,000.00 |
| 5. | நெடுந்தீவு | 25,000.00 | 30,000.00 | 16,000.00 | 6,000.00 | 35,000.00 | 35,190.00 | 64,600.00 | 21,000.00 |
| 6. | சாட்டி | 14,110.00 | 21,000.00 | 19,550.00 | 7,000.00 | 10,400.00 | 17,620.00 | 15,000.00 | 22,500.00 |
| 7. | புங்குடுதீவு | 3,450.00 | 10,000.00 | 6,000.00 | 5,000.00 | 5,000.00 | 10,000.00 | 3,500.00 | 7,000.00 |
| 8. | எழுவைதீவு | 5,000.00 | 10,000.00 | 6,500.00 | 2,000.00 | 8,000.00 | 10,000.00 | 3,000.00 | 7,000.00 |
| 9. | அல்லைப்பிட்டி | 8,250.00 | 52,580.00 | 17,020.00 | 6,000.00 | 6,000.00 | 8,400.00 | 9,400.00 | 22,000.00 |
| | **இளவாலை மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | இளவாலை - அன்னம்மாள் ஆலயம் | 6,500.00 | 14,000.00 | 12,150.00 | 2,100.00 | 5,000.00 | 19,020.00 | 4,869.00 | 7,400.00 |
| 2. | இளவாலை - யாகப்பர் ஆலயம் | 4,000.00 | 10,500.00 | 21,700.00 | 4,500.00 | 4,200.00 | 9,000.00 | 17,000.00 | 13,000.00 |
| 3. | மாதகல் | 22,500.00 | 29,800.00 | 16,200.00 | 6,500.00 | 15,600.00 | 61,700.00 | 5,000.00 | 17,600.00 |
| 4. | சில்லாலை | 7,000.00 | 25,000.00 | 18,000.00 | 5,500.00 | 18,500.00 | 24,000.00 | 24,000.00 | 30,000.00 |
| 5. | பண்டத்தரிப்பு | - | 12,000.00 | 8,000.00 | 11,000.00 | 22,000.00 | 20,000.00 | 12,000.00 | 18,000.00 |
| 6. | விளான் | 10,700.00 | 24,600.00 | 20,000.00 | 6,300.00 | 7,600.00 | 17,400.00 | 8,000.00 | 21,700.00 |
| 7. | மானிப்பாய் | 33,500.00 | 66,500.00 | 40,000.00 | 15,000.00 | 37,000.00 | 40,000.00 | 21,000.00 | 41,580.00 |
| 8. | மாரீசன்கூடல் | 9,750.00 | 26,000.00 | 13,000.00 | 6,000.00 | 14,000.00 | 11,000.00 | 10,000.00 | 13,000.00 |
| 9. | உரும்பிராய் | 27,560.00 | 31,600.00 | 36,700.00 | 17,350.00 | 30,900.00 | 218,310.00 | 18,000.00 | 27,500.00 |
| 10. | ஆனைக்கோட்டை | 10,000.00 | 41,000.00 | 7,500.00 | 4,000.00 | 10,000.00 | 10,000.00 | 105,000.00 | 25,000.00 |
| 11. | குளமங்கால் | 11,000.00 | 22,000.00 | 11,500.00 | 9,000.00 | 11,000.00 | 31,920.00 | 15,000.00 | 16,000.00 |
| 12. | மல்வம் - உடுவில் | 7,320.00 | 22,200.00 | 10,200.00 | 10,600.00 | 8,000.00 | 10,000.00 | 50,500.00 | 16,200.00 |
| 13. | சுன்னாகம் | 20,030.00 | 23,500.00 | 7,500.00 | 9,320.00 | 10,500.00 | 65,000.00 | 9,540.00 | 15,600.00 |
| 14. | நவாலி | 20,000.00 | 36,400.00 | 4,200.00 | 4,300.00 | 4,160.00 | 30,120.00 | 97,200.00 | 18,570.00 |
| 15. | ஊறணி | 4,520.00 | 22,660.00 | 5,150.00 | 4,500.00 | 5,500.00 | 8,500.00 | 3,610.00 | - |
| | **பருத்தித்துறை மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | பருத்தித்துறை | 32,000.00 | 42,000.00 | 30,000.00 | 14,000.00 | 22,500.00 | 50,000.00 | 45,000.00 | 47,300.00 |
| 2. | தாளையடி - செம்பியன்பற்று | 5,000.00 | 10,000.00 | 5,000.00 | 4,000.00 | 5,000.00 | 40,000.00 | 5,000.00 | 5,000.00 |
| 3. | அச்சுவேலி | 3,600.00 | 21,400.00 | 5,100.00 | 3,200.00 | 8,200.00 | 9,000.00 | 17,000.00 | 12,500.00 |
| 4. | கரவெட்டி | 7,800.00 | 12,500.00 | 8,500.00 | 6,000.00 | 8,000.00 | 10,000.00 | 100,000.00 | 12,000.00 |
| 5. | மிருசுவில் | 20,049.00 | 77,270.00 | 24,550.00 | 20,000.00 | 37,500.00 | 52,500.00 | 27,000.00 | 45,750.00 |
| 6. | சாவகச்சேரி | 20,100.00 | 36,350.00 | 21,500.00 | 7,500.00 | 16,350.00 | 21,650.00 | 13,500.00 | 25,500.00 |
| 7. | மணற்காடு | 17,000.00 | 48,000.00 | 20,000.00 | 10,100.00 | 8,000.00 | 112,000.00 | 10,000.00 | 18,000.00 |
| 8. | சக்கோட்டை | 14,010.00 | 65,000.00 | 10,550.00 | 10,340.00 | 14,040.00 | 10,930.00 | 7,050.00 | 21,110.00 |
| 9. | பளை, முகமாலை | 7,000.00 | 30,000.00 | 19,000.00 | 5,000.00 | 5,500.00 | 12,500.00 | 88,300.00 | 20,000.00 |
| 10. | கட்டைக்காடு | 9,100.00 | 18,000.00 | 4,000.00 | 4,000.00 | 3,000.00 | 4,000.00 | 25,000.00 | 9,000.00 |
| 11. | பலாலி | 11,170.00 | 25,950.00 | 6,000.00 | 7,500.00 | 7,000.00 | 8,000.00 | 8,000.00 | 18,000.00 |
| 12. | ஒட்டகப்புலம் | 4,077.00 | 11,400.00 | 4,280.00 | 1,620.00 | 1,930.00 | 1,000.00 | 2,500.00 | 3,000.00 |
| | **கிளிநொச்சி மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | கிளிநொச்சி | 12,000.00 | 50,000.00 | 12,500.00 | 10,500.00 | 11,500.00 | 14,000.00 | 12,300.00 | 15,000.00 |
| 2. | வலைப்பாடு | 6,000.00 | 10,000.00 | 10,000.00 | 4,500.00 | 4,500.00 | 70,060.00 | 3,500.00 | 10,000.00 |
| 3. | உருத்திரபுரம் | 5,600.00 | 17,000.00 | 7,750.00 | 5,000.00 | 5,500.00 | 7,000.00 | 8,000.00 | 12,000.00 |
| 4. | வட்டக்கச்சி | 6,600.00 | 9,500.00 | 4,960.00 | 4,800.00 | 4,200.00 | 3,700.00 | 4,300.00 | 8,500.00 |
| 5. | அக்கராயன் | 4,000.00 | 17,250.00 | 4,000.00 | 5,200.00 | 5,650.00 | 5,200.00 | 3,500.00 | 12,000.00 |
| 6. | மல்லாவி | 1,000.00 | 5,000.00 | 3,000.00 | 1,500.00 | 1,500.00 | 2,000.00 | 1,600.00 | 5,000.00 |
| 7. | முழங்காவில் | - | 20,000.00 | 5,000.00 | 3,000.00 | 8,000.00 | 10,000.00 | 10,000.00 | 10,000.00 |
| 8. | குமுழமுனை | 6,000.00 | 9,100.00 | 5,150.00 | 2,800.00 | 4,200.00 | 10,000.00 | 4,500.00 | 6,000.00 |
| 9. | பூநகரி | 3,000.00 | 7,300.00 | 4,300.00 | 5,000.00 | 10,500.00 | 4,500.00 | 4,000.00 | 6,000.00 |
| 10. | பரந்தன் | 7,250.00 | 20,600.00 | 11,000.00 | 2,500.00 | 14,000.00 | 12,000.00 | 12,000.00 | 10,600.00 |
| | **முல்லைத்தீவு மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | முல்லைத்தீவு | - | 55,000.00 | 20,000.00 | 15,000.00 | 25,000.00 | 23,000.00 | 15,000.00 | 35,000.00 |
| 2. | புதுக்குடியிருப்பு | 20,450.00 | 67,000.00 | 14,800.00 | 9,250.00 | 20,450.00 | 27,318.00 | 30,300.00 | 41,300.00 |
| 3. | மாங்குளம் | 1,000.00 | 3,000.00 | 3,000.00 | 1,500.00 | 1,500.00 | 2,000.00 | 2,000.00 | 3,000.00 |
| 4. | இரணைப்பாலை | 9,000.00 | 36,000.00 | 11,000.00 | 10,700.00 | 10,500.00 | 14,500.00 | 17,000.00 | 13,000.00 |
| 5. | அளம்பில் | 21,030.00 | 25,220.00 | 12,450.00 | 5,100.00 | 14,140.00 | 6,000.00 | 10,000.00 | 10,000.00 |
| 6. | கூழாமுறிப்பு | 3,000.00 | 7,000.00 | 5,000.00 | 4,000.00 | 6,000.00 | 5,530.00 | 6,000.00 | 11,000.00 |
| 7. | கொக்கிளாய் | 2,000.00 | 16,300.00 | 1,800.00 | 1,500.00 | 1,610.00 | 1,500.00 | 2,000.00 | 9,190.00 |
| 8. | உடையார்கட்டு | 1,000.00 | - | 1,500.00 | 1,000.00 | 1,200.00 | 1,000.00 | 1,000.00 | 3,000.00 |
| 9. | தர்மபுரம் | - | 13,500.00 | 6,000.00 | 6,110.00 | 5,070.00 | 5,000.00 | 4,500.00 | 9,050.00 |
| 10. | உடுப்புக்குளம் | 7,330.00 | 9,850.00 | 2,710.00 | 3,270.00 | 4,600.00 | 6,940.00 | 7,150.00 | 8,900.00 |
| 11. | சிலாவத்தை | 4,000.00 | 42,365.00 | 5,000.00 | 7,000.00 | 14,810.00 | 12,200.00 | 4,000.00 | 15,000.00 |
| 12. | முகத்துவாரம் | 2,920.00 | 4,000.00 | 3,280.00 | 3,000.00 | 3,000.00 | 4,220.00 | 3,000.00 | 3,000.00 |

ஆயர் இல்லம்,யாழ்ப்பாணம்.

அருட்பணி. செ. நேசநாயகம்
நிதிமுகாமையாளர்

## நீங்கா நினைவில் ஐந்தாம் ஆண்டு

பிறப்பு
24 . 10 . 1966



இறப்பு
09 . 03 . 2019

### அமரர்.யோசவ் அன்ரன் லியோ அன்ரசன்

"ஆண்டவருடைய செயல்களெல்லாம் நல்லவை,ஒவ்வொருதேவையும் குறித்த காலத்தில்அவர் நிறைவு செய்வார். எல்லாம் அதனதன் காலத்தில் நல்லவை என விளங்கும்" (சீராக் 39: 33-34) என்ற உமது இறைவார்த்தையில் நாம் திடம் பெறுகின்றோம் உன்னத இறைவனே! உம் அமைதியில் இளைப்பாற எம் அப்பாவை அழைத்து ஆண்டு ஐந்து ஆனதோ விபத்து வேளையில் உயிர்காத்து உம் வியத்தகு பேரன்பை காண்பித்தவரே உமது வான்வீட்டில் சேர்த்தருளும்.

அன்னாரின் ஆன்ம இளைப்பபாற்றிக்காக 09.03.2024 அன்று மாதகல் புனித லூர்து அன்னை பதியில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

நல்லாயன் வீதி, சில்லாலை.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள் மற்றும் உறவுகள்

AD-16

## நீங்கா நினைவில் 1ம் ஆண்டு | நீங்கா நினைவில் 3ம் ஆண்டு



பிறப்பு
06 . 08 . 1944

அமரர்
### கில்பேட் ஜெயசிங்கம்

இறப்பு
22 . 03 . 2023



பிறப்பு
16 . 10 . 1935

அமரர்
### ஒலிவெற்ராணி அரசநாயகம்

இறப்பு
22 . 03 . 2021

"நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டு நலமாக வாழ்வை முடித்துக்கொண்ட சகோதரர்களே விண்ணிலும் நலமாக வாழுங்கள்"

மிருசுவில்

AD-19

நினைவுகளுடன்
உறவுகள்

## நீங்கா நினைவில் 14ம் ஆண்டு

பிறப்பு
19 . 03 . 1937



இறப்பு
01 . 04 . 2010

அமரர்
### மேரி யோசப்பின் பாக்கியநாதர்

(இளைப்பாறிய ஆசிரியை)

"ஆண்டவர் என் ஆயர் எனக்கேதும் குறையில்லை
பசும்புல் வெளிமீது என்னை அவர் இளைப்பாறச் செய்வார்"
(தி.பா.23:1,2)

அன்புடனும், நன்றியுடனும், நினைவுகூரும்
பிள்ளைகள்- றெஜி,றெகான், றதீஸ்குமார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

"மரியன்ஸ்"
கல்லூரி வீதி, மானிப்பாய்

AD-20

## நீங்காத நினைவுகளில் 10ம் ஆண்டு

மண்ணில்
23 . 11 . 1935



விண்ணில்
15 . 03 . 2014

அமரர்
### அருளானந்தம் திரேசம்மா

எங்கள் அன்பான அம்மாவே, எம் உயிருக்குள் உயிரான எம் அன்புத் தெய்வமே,
கண் இமைக்கையில் ஆண்டு பத்து ஆகிவிட்டதே, நெஞ்சம் பதைக்கின்றது
அந்த நாளை நினைக்கையிலே நீங்கள் எம்மை விட்டுச் சென்றாலும்
நாம் என்றும் உங்கள் நினைவில் வாழ்கின்றோம்
காலம் எம்மைப் பிரித்தாலும் ஆண்டுகள் பல சென்றாலும்,
உங்கள் இன்முகமும், புன்சிரிப்பும் எம்மை விட்டு என்றும் அகலாது,
வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும் உங்களை நாங்கள் மறக்க வில்லை
அன்னையாய் எம்மை சுமந்து பாசமாய் எம்மை பாதுகாத்தீர்கள்,
உள்ளம் நிறைந்து நாம் வாழ பல வழிகளில் பாடுபட்டீர்கள்,
இறைவா நீர் தந்த எம் அன்னைக்காய் நன்றிக் கரம் குவிக்கின்றோம்
உம் திருப்பாதம் அவர் மகிழச் செய்யும் புனிதர்கள் சமூக உறவு எம்மை
இணைக்கும் என்ற நம் பிக்கையில் ஆறுதல் அடைகின்றோம்.

இவரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக 15.03.2024 வெள்ளிக்கிழமை அன்று காலை 6.00 மணிக்கு சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

35/உ, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

AD-17

குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வின் 5ம் ஆண்டு நினைவுகள்

மண்ணக வாழ்வு
14 . 06 . 1942



விண்ணக வாழ்வு
26 . 03 . 2019

### திருமதி மரியா மின்னொளி ஜுலியன்

(லூர்த்துமலர்)

ஐந்து ஆண்டுகள் பறந்தோடிப்போயின
பாச நினைவோ எம்முயிரோடு வாழ்வன
நித்தமும் நெஞ்சிலே நின்றாடும் நாட்கள்
நெறியாக நாம் ஏந்தும் அர்ச்சனைப்பூக்கள்
குத்து விளக்கே எம் குடும்ப நிறை ஒளியே
குளமாகி நிறைவதேன் எங்கள் விழியே
உத்தமியே உங்கள் வாழ்வே ஒரு காவியம்
உள்ளார்ந்த உணர்விலே நிலையான ஓவியம்

*819, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*0212229752*
*0777498865*

AD 21

இவரின் பிரிவால் துயருறும்
அன்புக் கணவர்,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## விண்ணக வாழ்வில் 10ம் ஆண்டு நினைவுகளில்

பிறப்பு
06 . 02 . 1928



இறப்பு
28 . 03 . 2014

### அமரர். அந்தோனிப்பர்னாந்து செலீனம்மா

'ஆண்டவர் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்கவேண்டும்' (தி.பா. 27.4)

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்வில் வழிகாட்டியாய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய எம் அன்பு அம்மாவே நீர்
இறைவனுடன் இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்

5ம் வட்டாரம், மண்டைதீவு

AD -18

## ஆயர்கள் மாமன்றின் ஈஸ்டர் செய்தி

உயிர்ப்பு ஞாயிறு என்பது கிறிஸ்தவ நம்பிக்கையின் மறையுண்மையும், மையமும், நமது வழிபாட்டு ஆண்டின் உச்சமுமாகும். ஈஸ்டர் அன்று முதல் சீடர்கள் "இயேசு உயிர்த்தெழுந்தார்" (லூக்கா 24:5) மற்றும் "கிறிஸ்து உயிருடன் இருக்கின்றார்" என மேற்கொண்ட அறிவிப்பை புதுப்பித்துக் கொள்வோம். இயேசுவின் உயிர்த்தெழுதல் எமது நம்பிக்கையின் தூணாகவும் எமது நம்பிக்கைகள் கட்டப்பட்ட அடித்தளமாகவும் உள்ளது. இயேசு கிறிஸ்து தம்முடைய உயிர்த்தெழுதலின் மூலம் பாவத்தையும் மரணத்தையும் வென்று, நாம் வாழ்வு பெறுவதற்கும் அவருடைய உயிர்த்தெழுதலில் பங்கு கொள்வதற்கும் ஓர் நம்பிக்கையை தந்தமைக்காக நாம் மன மகிழ்ச்சியடைகின்றோம். நம்முடைய பாவத்திற்குள்ளும் சுயநலத்திற்குள்ளும் இறந்து கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்வைத் தொடங்க ஈஸ்டர் நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

உயிர்த்தெழுந்த இறைவன் தம்முடைய உயிர்த்தெழுதலின் பின் சீடர்களுக்கு தோன்றிய போது அவர்களுக்கு கொடுத்த அதே அன்பையும் மகிழ்ச்சியையும் நமக்கும் இன்று தருகின்றார். இயேசு எப்போதும் எம்மோடு எம் மத்தியில் இருப்பதையும், நம்முடைய எல்லாத்தேவைகளிலும் அக்கறை கொள்வதையும் மீள் உறுதிப்படுத்த வருகின்றார். எமது ஈஸ்டர் செபமானது "எம்மாவுஸ்" சீடர்களின் செபமாகவே அமைய வேண்டும் "ஆண்டவரே! எங்களோடு தங்கும் ஏனெனில் மாலை நேரம் ஆயிற்று பொழுதும் போயிற்று"(லூக்கா 24:29)

நமது நாடு சமூக, பொருளாதார, மற்றும் அரசியல் ரீதியாக மிகவும் இக்கட்டான நிலையில் உள்ள வேளையில் இவ்வாண்டு ஈஸ்டர் பண்டிகையை கொண்டாடுகின்றோம். எமது மக்கள் எதிர்கொள்ளும் பாரிய சிரமங்களுக்கும் துன்பங்களுக்கும் நிரந்தரத் தீர்வு காண வேண்டுமாயின் எமது ஆட்சி முறைமையில் பாரிய மாற்றம் தேவை. அதற்காக பாடுபடுவது ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாகும். எமது நேசத்துக்குரிய தாய்நாடு இது போன்ற ஒரு இக்கட்டான நிலையை இதற்கு முன் ஒருபோதும் அனுபவித்ததில்லை. இந்த நேரத்தில் நமக்கு தெய்வீக இறைதலையீடு தேவையாய் உள்ளது. எனவே நாம் இருக்கும் இந்த ஆபத்தான சூழ்நிலையில் இருந்து நம்மை விடுவிக்க இந்த ஈஸ்டர் காலத்தில் உயிர்த்த இயேசுவிடம் உருக்கமாக மன்றாடுவோம்.

இவ்வாண்டு ஈஸ்டர், கத்தோலிக்க மற்றும் பிற கிறிஸ்தவ தேவாலயங்களில் வழிபடச்சென்றோர் மீதும் மற்றும் வேறு இடங்களிலும் நடாத்தப்பட்ட மிலேச்சத் தன்மையான குண்டு தாக்குதலின் ஐந்து ஆண்டுகளின் நிறைவைக்குறிக்கின்றது. 2019 ஆண்டு நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் 273 பேர் கொல்லப்பட்டனர். மற்றும் குறைந்தது 500 பேர் காயமடைந்தனர். இந்த தற்கொலைத் தாக்குதல்கள் நடந்து சரியாக 5 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்களை விசாரிக்க பல்வேறு குழுக்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட போதிலும், நாங்கள் இன்னும் உண்மையை அறியமுடியவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என காத்திருக்கின்றோம். இன்றும் பலத்த காயங்களுக்கு உள்ளாகி வேதனைப்படுவோர் மற்றும் அன்புக்குரியவர்களை இழந்து துக்கத்தில் உள்ள அனைவரையும் நம் இதயங்களுக்கு நெருக்கமாக வைத்து மன்றாடுவோம். அதே வேளையில், நீதிக்கான மக்களின் நியாயமான கோரிக்கை நிறைவேறும் வகையில் உண்மையான குற்றவாளிகளை இனம்கண்டு தண்டிக்க நம் நாட்டின் தலைவர்களை நாங்கள் கண்டிப்பாக கேட்டுக்கொள்கிறோம்.

ஈஸ்டர் அனுபவம் எதிர்காலம் மட்டில் உள்ள நிச்சயமற்ற நிலையில் நம்பிக்கை அளிக்கிறது. நம் தாய்நாட்டின் இந்த இருள்சூழ் நேரத்தில் உயிர்த்த இயேசுவின் ஒளியால் நாம் அறிவொளி பெறுவோம். இறைவன் நம்மை ஆட்கொள்ள மன்றாடுவோம்.

இறை நம்பிக்கையாளர்கள் மற்றும் எங்கள் வாசக நெஞ்சங்கள் அனைவருக்கும் உயிர்த்த இயேசுவின் மகிழ்ச்சியையும் மற்றும் அமைதியையும் ஆசித்து நிற்கின்றோம்.

## குருத்துவத் திருநிலைப்படுத்தல்

இறைவனின் திருவருளால் இவ்வாண்டு யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு திருத்தொண்டர்கள் எதிர்வரும் ஏப்ரல் 13ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் பணிக்குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். திருத்தொண்டர்களாகிய **யே. அன்ரன் கஜீஸ்காந், பீ. அ. கமல்ராஜ்** ஆகியோரே யாழ். ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் பணிக்குருக்களாக அருட்பொழிவு செய்யப்படவுள்ளனர்.



**திருத்தொண்டர் யே. அன்ரன் கஜீஸ்காந்** எழுவைதீவுப் பங்கின் புனித தோமையார் ஆலயத் திருஅவையைச் சேர்ந்த திரு. திருமதி யேசுரத்தினம், கத்தரின் தேவந்தி தம்பதியினரின் மகனாகிய இவர் தனது ஆரம்பக்கல்வியை எழுவைதீவு றோ.க பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை ஊர்காவற்றுறை, புனித அந்தோனியார் கல்லூரியிலும் மற்றும் உயர்கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் தனது சிறிய குருமடக்கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும்,மெய்யியல் கற்கை நெறியை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும், கண்டி தேசியக் குருமடத்திலும், இறையியல் கற்கைநெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.



**திருத்தொண்டர் பீ. அ. கமல்ராஜ்** மாதகல் பங்கின் புனித தோமையார் ஆலயத் திருஅவையைச் சேர்ந்த திரு. திருமதி பீற்றர் அமலதாஸ், மரியநாயகி தம்பதியினரின் மகனாகிய இவர் தனது ஆரம்பக்கல்வியை நாச்சிக்குடா தமிழ்க்கலவன் பாடசாலை, மாதகல் புனித தோமையார் பெண்கள் பாடசாலையிலும், இடைநிலைக்கல்வியை மாதகல் புனித ஜோசப் மகா வித்தியாலயம் மற்றும் உயர்கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் தனது சிறிய குருமடக்கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும், மெய்யியல் கற்கை நெறியை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும், கண்டி தேசியக் குருமடத்திலும், இறையியல் கற்கைநெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

புதிய குருக்களை பாதுகாவலன் வாசக நேயர்கள் சார்பில் வாழ்த்தி மகிழ்கின்றோம்

## மண்டைதீவுப் பங்கில் தவக்காலத் தியானம்

மண்டைதீவுப் பங்கிலுள்ள பங்கு மக்களுக்கானத் தவக்கால தியானம், கடந்த மாசி மாதம் 27, 28, 29ம் திகதிகளில் மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி T.யேசுதாசன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இத்தியானத்தை வவுனியா மறையுரைஞர் குழுமத்தினர், அருட்பணி பா. ஜெயபாலன் அ.ம.தி.தலைமையில், அருட்பணியாளர்கள் அ. யூட் கறோவ் அ.ம.தி., லூ. றெயினி அவலின் அ.ம.தி., யே. அமிர்தரா அ.ம.தி., செ. றோயிட்சன் அ.ம.தி. மற்றும் அருட்சகோதரதர்கள் யோ. குளோட் மரீனோ அ.ம.தி., அ. டிலக்சன் அ.ம.தி. இணைந்து வழிநடாத்தினார்கள். இந்நாட்கள் இறைமக்கள் இறைவனோடும் அயலவரோடும் ஒப்புரவாகும் அருளின் காலமாக அமைந்தது.



## பத்திரிசியார் கல்லூரியில் திருப்பாடுகளின் காட்சி



யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் "பலிக்கான வேள்வி" திருப்பாடுகளின் காட்சி கடந்த 25.03.2024 அன்று கல்லூரி அதிபர் அருட்பணி அ.பீ. திருமகன் அடிகளார் தலைமையில் ஆற்றுகை அளிக்கப்பட்டது.

இவ்வாற்றுகையில் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நூற்றுக் கணக்கில் பங்கேற்றிருந்தனர். கல்லூரி நாடகமும் அரங்கியலும் பாடநெறி ஆசிரியர் திரு. ஜே. இக்னேசியஸ் (பிரபா) அவர்களின் எழுத்துருவாக்கத்திலும் நெறிப்படுத்தலிலும் இத்திருப்பாடுகளின் காட்சி அரங்காற்றுகை செய்யப்பட்டது.

கல்லூரியின் சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு முதல்வர் அருட்பணி ம. சந்திரதாஸ் அ.ம.தி. அடிகளார் இணைப்பாளராக நிகழ்வை ஒழுங்கமைத்திருந்தார்.

## பண்டதரிப்பு பங்கில் சிலுவைப்பாதை தியானம்



பண்டத்தரிப்பு பங்கில் காட்சிப்படுத்தல் ஊடாக வீதி வழி பெரிய சிலுவைப்பாதை தியானம் கடந்த 17.03.2024 அன்று இடம்பெற்றது. கீரிமலை வீதியில் உள்ள குழந்தை இயேசு ஆலயத்தில் ஆரம்பித்து - கேணிக்கட்டு - பொந்தி - செபமாலை மாதா பற்றிமா மாதா - இராச முருக்கு வீதிகள் ஊடாக வியாகுல சுரூபத்தில் திருப்பலியுடன் நிறைவு பெற்றது. இதில் சிறப்பாக திருப்பாலர் சிறார்கள் காட்சிப்படுத்தல் வழியாக சிந்தனைகளைத்தூண்டி பலரின் பாரட்டைப் பெற்றார்கள். இந்நிகழ்வை பங்குத் தந்தை அருட்பணி ம.பத்திநாதர் அடிகளாரின் வழிகாட்டலில் திருப்பாலர் சபை ஊக்குவிப்பாளர்கள் (மறையாசிரியர்கள்) நெறிப்படுத்தியிருந்தனர்.

## யாழ்.ஆயரின்..... (1ம் பக்கத் தொடர்ச்சி)

நாமும் அதே உணர்வில் இறைமகன் உயிர்ப்பில் பங்கெடுத்து என்றும் எங்கும் உயிர்த்த ஆண்டவரின் உயிரோட்டமுள்ள பிள்ளைகளாய் வாழ்ந்து காட்டுவோம். திருஅவை இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் இடம்பெறவுள்ள இரண்டாவது அமர்வுக்குத் தயாராகி வருகின்றது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பல பரிந்துரைகளை இவ்அமர்வில் முன்வைக்கவுள்ளார். திருஅவையில் கூட்டொருங்கியக்கப் பயணத்தில் நாமும் செபத்தில் ஒன்றித்துப் பயணிப்போம்.

மருதமடு அன்னையின் முடி சூட்டின் நூற்றாண்டை முன்னிட்டு எமது மறைமாவட்டத்திற்கு மருதமடு அன்னையின் திருச்சொரூபம் எடுத்து வரப்படவுள்ளது. சிறப்பாக மருதமடுத் திருப்பதிக்குச் சென்று இறையாசீர் பெறமுயாத வயோதிபர்கள், மாற்று வலுவுள்ளோர்கள், நோயாளிகள் மடு அன்னையின் ஆசீர்பெற அவர்களை எமது ஆலயங்களுக்கு அழைத்துவரக் கூடுதல் கவனத்தையும், உதவியையும் வழங்குவோம்.

மடு அன்னை எம் பங்குகளுக்கு வரும் நாட்கள் புனிதமானவை. தகுந்த ஆன்மீக ஆயத்தத்துடன் மடு அன்னையை வரவேற்போம். அன்னை வழியாக இறை ஆசீரைப் பெற ஆசித்து நிற்கின்றேன். உங்கள் எல்லோருக்கும் உயிர்த்த கிறிஸ்துவின் "அல்லேலூயா" நல் வாழ்த்துக்கள்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.